94

தாமரை வாசகம்

மூன்றாம் புத்தகம்

புலவர் மா. இராசமாணிக்கனார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 OCT 1949
MADRAS

TB
031(8)
N49
147821.

...ல் பப்ளிஷிங் கம்பெனி
...6. கொண்டி செட்டித்தெரு, சென்னை-1.

தாமரை வாசகம்

மூன்றாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 OCT 1949
MADRAS

புலவர்—மா. இராசமாணிக்கனார், M.O.L., L.T
தமிழ் விரிவுரையாளர்,
விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

தி நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை—1.

பதிப்புரிமை] 1949 [விலை ரூ. 1.

முதற் பதிப்பு: 1949
இரண்டாம் பதிப்பு: 1949

(*Approved by the Text Book Committee, for class use*
Vide proceedings R. C. 448/48
T. B. C. *dated* 29*th and* 30*th June* 1949,
as per finalized Syllabus.)

சென்னை-600 008
147821
TB
03:1(C87)
N49

Printed at the Rajan Electric Press, Madras—1.

முகவுரை

தாமரை வாசகம் என்னும் பெயருடன் வெளிவரும் இந்நூல் வரிசை, அரசாங்கத்தார் அண்மையில் வெளியிட்ட புதிய பாட இயல் (Syllabus)படி எழுதப் பெற்றதாகும்.

உரிமை பெற்ற நம் நாட்டு மாணவர் முன்னேற்றத் துறைகளில் முற்போக்கு அடையவேண்டும் என்னும் நன்னோக்கம் கொண்டு பிறப்பிக்கப்பட்ட புதிய பாட இயலின் ஒவ்வொரு பகுதியும் இதன்கண் ஒவ்வொரு பாடமாக இடம் பெற்றுள்ளது கவனிக்கத் தக்கது.

ஒவ்வொரு பாடத்திலும் மொழிவளர்ச்சிக்குரிய புதிய சொற்கள் இடத்துக்கேற்ப ஆளப்பட்டுள்ளன. அப்புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் வாக்கியங்களிற் பயன்படுத்தப் பயிற்சியும் பிறவகைப் பயிற்சிகளும் ஒவ்வொரு பாட இறுதியிலும் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாட இறுதியிலும் அரும்பதவுரை அளிக்கப்பட்டுள்ளது. செய்யுட் பகுதியில் ஆசிரியர் குறிப்பும், அரும்பதவுரையும் தரப்பட்டுள்ளன.

இந்நூலில் உள்ள தமிழ் நடை மூன்றும் பார மாணவர்க்கு ஏற்ப அமைந்திருத்தல் கவனிக்கத்தக்கது. இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடமும் மூன்றும் பார மாணவரைப் படிக்கச் சொல்லிச் சோதிக்கப் பெற்றதாகும்.

இந்நூலில் ஏறத்தாழ 500 வரிகள் கொண்ட செய்யுட் பகுதி பாடமாக இருத்தல் வேண்டும் என்பது விதி. ஆயின், கற்பிக்கும் ஆசிரியர் மனநிலைக் கேற்பச் செய்யுட்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வசதி இருக்குமாறு ஏறக்குறைய 550 வரிகள் இங்குத் தரப்பட்டுள்ளன.

இந்நூல் வரிசையில் தம் செய்யுட்களை வெளியிட உரிமை அளித்த புலவர்கட்கும் அச்செய்யுட்களை வெளியிட்டவர்க்கும் எனது நன்றி உரியது.

இந்நூல் வரிசை நன்முறையில் வெளிவர உதவி புரிந்த சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர்—R. S. சாம்பசிவ சர்மா, தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர்—முருகேசனர், செயிண்ட் கேப்ரியல் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர்—செல்வத் தாண்டவனர் ஆகிய என் நண்பர்க்கு எனது உளமார் நன்றி உரியது.

இந்நூல் ஒரு தாமரை மலருக்கு ஒப்பாகும். இதன்கண் உள்ள ஒவ்வொரு பாடமும் மலரின் தனித்தனி இதழாகும். தாமரை மலரின் அழகை அநுபவித்தல் போல மாணவர் உலகம் அறிவுக் களஞ்சியமாகவுள்ள இத்தாமரை வாசகத்தை அநுபவித்துப் பயன்பெறத் தமிழ்த்தாய் அருள்புரிவாளாக!

விவேகானந்தர் கல்லூரி,
சென்னை.

மா. இராசமாணிக்கனர்

உள்ளுறை

உரைநடை

எண்	பொருள்		பக்கம்
1.	நமது நாட்டு அரசாங்கத் தலைவர்	...	1
2.	அடுத்துக் கெடுத்தல் (பஞ்ச தந்திரக் கதை)	...	6
3.	செய்தித்தாள் குறிப்புகள்	...	11
4.	உருளைக் கிழங்கு	...	14
5.	கடாரம் கொண்டான்	...	19
6.	ஜேம்ஸ் குக்	...	24
7.	புலவர் குண நலன்	...	30
8.	சர் ஜகதீச சந்திர போஸ்	...	33
9.	போலிச் சாமியார்	...	38
10.	மங்கோ பார்க்	...	43
11.	எனது இன்பச் செலவு	...	49
12.	தேனீ வளர்ப்பு	...	55
13.	கலிங்கப் போர்	...	63
14.	உரையாடல்	...	68
15.	இரட்டைப் புலவர்	...	73
16.	சோழர் காலத்து ஓவியங்கள்	...	78
17.	உலகத்தின் தென் முனை	...	84
18.	அப்பரும் அந்தணரும் (நாடகம்)	...	90
19.	செல்வ நிலையங்கள்	...	95
20.	மாணவரும் பொதுநலத் தொண்டும்	...	101

செய்யுள்

எண்	பொருள்		பக்கம்
I.	கடவுள் வாழ்த்து	...	107
II.	இயற்கை அழகு		
	1. மாலை வருணனை	...	109
	2. பொதியமலைச் சிறப்பு	...	110
III.	நீதி	...	
	1. பழமொழி	...	111
	2. நாலடியார்	...	114
	3. அறநெறிச்சாரம்	...	116
	4. ஆசாரக்கோவை	...	118
	5. ஏலாதி	...	120
	6. திருக்குறள்	...	123
	7. சோமேசர் முதுமொழி வெண்பா	...	126
IV.	தொடர்நிலைச் செய்யுள்		
	1. மலையும் அணிலும்	...	128
	2. காந்தியடிகள்	...	129
	3. குசேலோபாக்கியானம்	...	131
	4. அரிச்சந்திர புராணம்	...	134
V.	தனிப்பாடல்கள்		
	1. மதுரைக் கலம்பகம்	...	138
	2. தமிழன் பாட்டு	...	138
	3. தொழிலாளர் மேன்மை	...	140
	4. தமிழர் வாழ்வு	...	142

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;

இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை;

திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

—பாரதியார்

உயர்திருவாளர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் [அன்பளிப்பு: "கல்கி"

தாமரை வாசகம்

மூன்றும் புத்தகம்

1. நமது அரசாங்கத் தலைவர்

1. இந்தியாவில் பல மாகாணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாகாண அரசாங்கத்திற்கும் தலைவராக இருப்பவர் கவர்னர் எனப்படுவார்; இம் மாகாணங்களை எல்லாம் தன் அகத்தே பெற்றுள்ள இந்திய நாட்டுப் பொது நடப்புகளைக் கவனிப்பது இந்திய அரசாங்கம் என்பது. அதன் தலைவராக இருப்பவரே கவர்னர் ஜெனரல் அல்லது இந்திய அரசாங்கத் தலைவர் என்பவர். ஆங்கில ஆட்சியில் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்தவர் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவர்; இறுதிக் கவர்னர் ஜெனரலாக இருந்தவர் மவுன்ட்பேட்டன் பிரபு என்பவர். அவருக்குப் பின்னர், உரிமைபெற்ற தாய்நாட்டு அரசாங்கத் தலைவராக இருந்து வருபவர் நமது தமிழகத்துப் பெரியார்—சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் ஆவர். அவரது வரலாறு உங்கட்கு நாட்டுப்பற்று, தந்நலமற்ற தொண்டு, சலியாவுழைப்பு, கலங்கா உள்ளமுடைமை முதலிய நற்பண்புகளை உண்டாக்கி வளர்க்க வல்லது.

2. சேலம் ஜில்லாவைச் சேர்ந்த கிராமங்களில் ஓசூர் என்பது ஒன்று. வைணவப் பிராமணர் ஒருவர் அதன் மணியக்காரராக இருந்தார். அவரைச் சக்கரவர்த்தி ஐயங்கார் என்று ஊரார் அழைத்தனர். வைணவப் பிராமணர் மரபில் 'சக்கரவர்த்தி' பரம்பரை என்பது ஆசிரியத் தகுதி பெற்றதாகும். அத்தகைய சிறந்த மரபிற் பிறந்த மணியக்காரர் வட மொழியிற் புலமைபெற்றவர்; நல்ல ஒழுக்கம் உடையவர்; ஊராரிடம் அன்புடன் பழகி வந்தவர். இவற்றால் ஊரார் அவரை அன்புடனும் மரியாதையுடனும் நடத்திவந்தனர். அவரது இல்லக் கிழத்தியார் பெயர் சிங்காரம் அம்மையார் என்பது. அவர் கணவரது கருத்தைக் குறிப்பால் அறிந்து நடந்து, அவரை மகிழ்வித்து வந்தனர். காதலர் இருவரும் கருத்து ஒருமித்து இல்லறம்

என்னும் நல்லறத்தை இனிது நடத்திவந்தனர். அவ்விருவரும் நடத்திய இல்லறம் என்னும் பயன்தரு மரத்திற் பழுத்த கனிதான் நமது இராஜகோபாலாச்சாரியார் என்பவர்.

3. இராஜகோபாலாசசாரியார் 1878-ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம் 9-ஆம் நாள் பிறந்தார்; பெற்றோராற் சீராட்டி வளர்க்கப்பட்டார்; ஐந்து வயது முதல் எட்டு வயது வரை தந்தையாரிடமே கல்வி கற்ருர்; பின்னரே ஐந்தாம் வகுப்பிற் பள்ளியிற் சேர்க்கப்பட்டார். அவர் சிறிது நேரத்தையும் வீணுகக் கழித்திலர்; சோம்பேறிப் பிள்ளைகளுடன் சேர்ந்திலர். வீண் பேச்சுகளைப் பேசி அறியார்; எப்பொழுதும் ஏதேனும் ஒரு நூலை வைத்துப் படித்துக் கொண்டேயிருந்தார். இந்நற்பழக்கத்தால் அவர் தம் வகுப்பில் இருந்த ஏனைய பிள்ளைகளை விடப் பொது அறிவில் முதல்வராக இருந்தார்; அதனல் ஆசிரியர் அனைவரது பாராட்டுக்கும் உரியவரானுர்.

ச. இராஜகோபாலாச்சாரியார்

4. இராஜகோபாலாச்சாரியார் பெங்களூரில் சிறிது காலம் படித்தபின்னர்ச் சென்னை மாகாணக் கல்லூரியிற் சேர்ந்து படித்துப் பி. ஏ. பட்டம் பெற்ருர்; பிறகு வழக்கறிஞராக வருதலை விரும்பிச் சட்டக் கல்லூரியிற் சேர்ந்தார். அப்பொழுது அவர் அரசாங்க மாணவர் விடுதியில் தங்கியிருந்தார். அக்காலத்தில் சென்னைக்கு வந்த விவேகானந்த அடிகள் அவ்விடுதியில் தங்கினர். இராஜகோபாலாச்சாரியார் அப்பெரியாருடன் நெருங்கிப் பழகினர்; தீண்டாமை, பெண்ணடிமை, மக்கட்குள் பிளவுகளை உண்டாக்கும் சாதி வேறுபாடுகள் முதலியவற்றை ஒழிப்பதில் அடிகளுக்கிருந்த ஆர்வம், அவருடைய நாட்டுப்பற்று, சமயப்பற்று முதலியவற்றை நன்குணர்ந்தார்; அவற்றைத் தம்

உள்ளத்திற் பதிய வைத்தார்; அடிகள் சென்னையிற் செய்த சொற்பொழிவுகளைக் கேட்டு உள்ளக் கிளர்ச்சி பெற்றார்.

5. இராஜகோபாலாச்சாரியார் பி.எல். பட்டம் பெற்ற பின் சேலம் நகரில் தங்கி வழக்கறிஞர் வேலை பார்க்கலானார். அவரது மனைவியார் அலர்மேல் மங்கம்மாள் * கணவர்க்கு ஏற்ற காரிகையார். அவ்விருவரது இல்லற வாழ்க்கை ஏறத் தாழப் பதினைந்தாண்டுகள் இன்பமாக நடைபெற்றுவந்தது. அவர்கட்குப் பிள்ளைகள் மூவரும் பெண்கள் இருவரும் பிறந்தனர். அலர்மேல் மங்கம்மாள் நோய்வாய்ப்பட்டுக் காலமானார். இராஜகோபாலாச்சாரியார் மறுமணம் செய்துகொள்ளாது, மக்கள் ஐவர்க்கும் அம்மையும் அப்பனுமாய் இருந்து குடும்பத்தை நடத்தி வந்தார்.

6. இராஜகோபாலாச்சாரியார் வழக்கறிஞர் தொழிலிற் சிறப்புப் பெற்றார்; வாதத் திறமையில் வல்லுநர் என்று பெயர்பெற்றார்; 1918 வரை சேலத்தில் வழக்கறிஞராக இருந்தார். அவர் சேலத்தில் இருந்த பொழுதே தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார்; சேலம் பள்ளி ஒன்றில் தாழ்த்தப்பட்ட மாணவரைச் சேர்க்க முயன்றார். உயர் வகுப்பினர் அவரது முயற்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். எனினும் அஞ்சா நெஞ்சம் படைத்த இராஜகோபாலாச்சாரியார் பள்ளித் தலைவரை இணங்கச் செய்து மாணவரைச் சேர்த்துவிட்டார். அவர் 1917-இல் சேலம் நகராண்மைக் கழகத் தலைவராக இருந்தபொழுது தண்ணீர்க் குழாய்களை அவ்வப்போது திறந்து மூடும் பணியில் தாழ்த்தப்பட்டவர் சிலரை வைத்தார்; தமது ஆட்சிக்கு உட்பட்ட நகராண்மைக் கழகப் பள்ளியைச் சேர்ந்த மாணவர் விடுதியில் வேலைசெய்யத் தாழ்த்தப்பட்டவர் இருவரை அமர்த்தினார். அக்காலங்களில் உயர் வகுப்பினர் எனப்பட்டோர் பெருங் கிளர்ச்சி செய்தனர். ஆயின் அக்கிளர்ச்சி வெற்றி அளிக்கவில்லை. சுவாமி சகஜானந்தம் என்பவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த துறவியார். அவர் வடமொழியிலும் தென் மொழியிலும் புலமையுடையவர்; தில்லையில் 'நந்தனார் பள்ளி' என்னும் பள்ளியைத் தாழ்த்தப்பட்ட பிள்ளைகட்கு நடத்திவருபவர். அவர் 1917-இல் சேலத்

* இஃது அலர்மேலுமங்கம்மாள் என்றும் கூறப்படும்.

திற்குச் சென்றார். இராஜகோபாலாச்சாரியார் அவரை வரவேற்றுச் சமபந்தி விருந்து ஒன்றினை நடத்தினர். இச் செயல்களை வெறுத்த பலர் இராஜகோபாலாச்சாரியாரை வெறுத்தனர்.

7. இராஜகோபாலாச்சாரியார் 1918-இல் சென்னையிற் குடியேறினர். காந்தியடிகளுடைய கொள்கைகள் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. அதனல் அவர் தம் தொழிலைவிட்டுக் காங்கிரஸ் இயக்கத்திற் சேர்ந்தார்; அடிகள் ஆணைப்படி தமிழ் நாட்டில் காங்கிரஸ் இயக்கத்தை இயக்குவித்தார். அவர் திருச்செங்கோட்டில் காந்தி ஆசிரமத்தை நிறுவிக் கதர், மதுவிலக்கு, தீண்டாமை யொழிப்பு ஆகிய வேலைத் திட்டங்களை நிறைவேற்றப் பாடுபட்டார்; பலமுறை சிறை சென்றார்; தமிழ்நாட்டு மக்கள் பாராட்டுக்கு உரியவரானர். காந்தியடிகள் அவருடைய பேச்சாற்றலையும் அரசியல் அறிவையும் நன்குணர்ந்து அவரைத் தம் சிறப்பு நண்பர் சிலருள் ஒருவராகக் கொண்டார். இராஜகோபாலாச்சாரியாரும் அடிகளைத் தம் அரசியல் தலைவராகக் கொண்டு அவர் வழி நடந்துவந்தமையால் தமிழ் மக்கள் அவரைத் 'தென்னட்டுக் காந்தி' என்று பாராட்டலாயினர்.

8. இராஜகோபாலாச்சாரியார் பத்தாண்டுகட்குமுன்னர் நமது மாகாண முதல் அமைச்சராக இருந்தார்; இந்தியா உரிமைபெறுந் தருவாயில் இந்திய அமைச்சருள் ஒருவராக வேலை பார்த்தார்; பிறகு வங்க மாகாணக் கவர்னராக இருந்தார்; மவுன்ட்பேட்டன் பிரபுவுக்குப் பின் நமது கவர்னர் ஜெனரலாக இருந்துவருகிறார். சேலத்தில் வக்கீலாக இருந்த இராஜகோபாலாச்சாரியார் தம் நற்குணங்களாலும் தந்நலமற்ற தொண்டாலும் இயல்பாகவுள்ள அறிவாற்றலாலும் படிப்படியாக உயர்ந்து, உலக அரசியல் அறிஞர்களாலும் பிற அரசாங்கங்களின் தலைவர்களாலும் பாராட்டத்தக்க நிலையில் இன்று காட்சி அளிக்கின்றார்.

9. நமது இந்திய அரசாங்கத் தலைவர் இராஜகோபாலாச்சாரியார் சாதிபேதத்தை வெறுப்பவர். அதனுற்றான் அவர் தமது இரண்டாம் மகளாரைக் காந்தியடிகளுக்கு மகனராகிய தேவதாஸ் என்பவருக்குத் திருமணம் செய்வித்தார். அவர் சிறையில் இருந்த காலங்களில் திருக்குறளை நன்கு படித்துத் 'திருவள்ளுவர் அரசியல்' என்று ஆங்கி

லத்தில் ஒரு நூலை எழுதியுள்ளார். அவர் எளிய நடையில் பல உரைநடை நூல்களை எழுதியிருக்கிறார். அவர் எளிய கதைகள், பழமொழிகள், உவமைகள் இவற்றின் வாயிலாக அரசியற் கருத்துக்களை மக்களுக்கு எளிதில் புரியுமாறு பேசவல்லவர்; வேடிக்கைப் பேச்சிலும் வல்லுநர். அவர் பெரிய சீர்திருத்த அறிஞர். "இந்துக்களிடம் வேரூன்றியுள்ள சாதி வேற்றுமை ஒழிதல் வேண்டும். அதனை அறவே ஒழிப்பதனை நாம் நமது முதற் கடமையாகக் கொள்ளவேண்டும். சாதி வேற்றுமை வேரூன்றியிருக்கும்வரை நமது நாடும் சமூகமும் முன்னேற்றம் அடையா என்பது திண்ணம்," என்று அப்பெரியார் குறிப்பிட்டிருப்பது உங்கள் உள்ளங்களில் வேரூன்றத்தக்கது.

அரும்பொருள்

நடப்பு - நடைமுறை. மணியக்காரர்-கிராம முனிசீபு. ஆசிரியத் தகுதி-சமயகுருவின் தகுதி. கிழத்தி-தலைவி, உரிமையுடையவள்; கிழவன்-உரிமையுடையவன். ஒருமித்து-ஒன்றுபட்டு. காரிகை-பெண்மணி. அறவே-முற்றிலும். திண்ணம்-உறுதி.

பயிற்சி

I. விடை கூறுக:—

1. 'இந்திய அரசாங்கத் தலைவர் பதவி' என்பதனை விளக்குக.
2. இராஜகோபாலாச்சாரியாருடைய பெற்றோர் நற்பண்புகள் யாவை?
3. அவரது பொது அறிவு சிறப்புற்றமைக்குக் காரணம் யாது?
4. விவேகானந்த அடிகள் யாவர்? அவரது பழக்கத்தால் இராஜகோபாலாச்சாரியார் பெற்றவை யாவை?
5. இராஜகோபாலாச்சாரியார் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டவர் என்பதற்குச் சான்றுகள் தருக.
6. அவர் 'தென்னாட்டுக் காந்தி' என்று போற்றப்பட்டமைக்கு உரிய காரணம் என்ன?
7. அவர் எவற்றால் படிப்படியாக உயர்ந்து காட்சியளிக்கிறார்?
8. சாதி வேற்றுமை பற்றி அவர் கருத்து யாது?

II. 1. இராஜகோபாலாச்சாரியார் எழுதியுள்ள நூல்களில் சில கூறுக.

2. வாக்கியங்களில் அமைக்க:—நாட்டுப் பற்று, தந்நலம், சிறப்புக்கேற்ப, ஒருமித்து, கிழவன், கிழத்தி, நற்பழக்கம்.
3. எதிர்ச்சொல் கூறுக:—அறியார், சேர்ந்திலர், கிழத்தியார், இருந்தார், படித்தார், உற்றார்.

III. இராஜகோபாலாச்சாரியார் பிறப்பு-கல்வி கற்றமை-தொழிலும் தொண்டும்-அரசியல் வாழ்க்கை-அருங்குணங்கள் - இக் குறிப்புகளைக் கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக வரைக.

2. அடுத்துக் கெடுத்தல்

(பஞ்ச தந்திரக் கதை)

1. தென் இந்தியாவில் மயிலாப்பூரின் அண்மையில் ஒரு பெரிய பழுமரத்தின்மேல் மேகவருணன் என்னும் காக்கை அரசு தன் கூட்டத்துடன் வாழ்ந்துவந்தது. ஒரு நாள் உருமர்த்தனன் என்னும் கோட்டான் அரசு தன் பரிவாரத்துடன் மலை முழையிலிருந்து வந்து அவ்வாலமரத்தை வளைத்துக்கொண்டது. அது நாடோறும் இரவில் இங்ஙனம் வந்து பல காக்கைகளைக் கொன்றுவந்தது. மேகவருணன் ஒருநாள் தன் அமைச்சர்களை அழைத்து, "நம் பகைவர் நாடோறும் வந்து நம்மைத் துன்புறுத்துகின்றனர். இரவில நமக்குக் கண் தெரிவதில்லை. அவர்கள் அப்பொழுதுதான் வந்து நம்மை வதைக்கின்றனர். பகைவரை அசட்டை செய்வது நோய் போற் பெருகிப் பொல்லாங்கு விளைக்கும். ஆதலின் இப்பொழுது அடுத்துக் கெடுத்தல், பேதம், கலகம் என்பவற்றில் தக்கது இது என்று கூறுவீர்களாக," என்றது.

காக்கைகள் யோசனை

2. அப்போது உத்தமசீவி என்னும் அமைச்சன், "அரசே, வலியவருடன் பகைமை ஆகாது; சமாதானமே ஏற்றது. பகைவரைப் பணிந்து காலம் பார்த்து மோசம் செய்பவர் சுகப்படுகின்றனர். பகைவர் பலர் இருப்பின் அவருள் ஒருவனோடு நட்புக் கொண்டாடி அவன் துணையைக்கொண்டு ஏனையோரைக் கெடுத்துவிடலாம். வெற்றியும் தோல்வியும் ஒருவர் பங்கன்று. ஆகலின் மாற்றானது வலியும் வலியின்மையும் பார்த்து, எது செய்யத் தகுவதோ அதனைச் செய்வதே நல்லது," என்று கூறியது.

3. இரண்டாம் காக்கை, "உத்தமசீவி உரைத்தவை உண்மையே. பெருந்துன்பம் பெருகியுள்ளபொழுது பகைவருடன் சந்து செய்தல் ஆகாது. பகைவர் வலியர் - நாம் எளியோம் என்னும் கருத்துத் தவறு. பெரிய யானையைச் சிங்கக் குருளை கொல்லவல்லது என்பதனை நாம் மறுத்தல் ஆகாது. மனவலிமையின் துணையைக் கொண்டே நாம் நம் பகைவரை அழிக்கவேண்டும்," என்று அழுத்தமாக அறைந்தது.

4. அடுத்த காகம் இடம் விட்டுப் பெயர்ந்து தப்புவதே நல்லதென்றது. மற்றொன்று அந்த யோசனை தவறு என்றது. பிறிதொன்று இடம் விட்டுப் பெயராது தக்கபடி யோசித்துப் பகைவரை வெல்வதே ஏற்றது என்றது. அமைச்சர் ஐவரின் யோசனைகளைக் கேட்ட மேகவருணன் தன் தந்தைக்கு அமைச்சனாக இருந்த 'சிரஞ்சீவி' என்னும் முதுகாக்கையின் கருத்தை அறிய விரும்பியது. சிரஞ்சீவி, "வேந்தே, பகைவன் பலவானாயினும் அவனிடம் அன்பு காட்டி அவனைக் கெடுப்பதே ஏற்ற சூழ்ச்சியாகும். நான் பகைவர் பக்கத்தில் இருப்பதாக இகழ்ந்து வேறொன்றின் குருதியை என் உடம்புமுழுவதும் தடவி, இவ்வால மரத்தின் கீழ் என்னை எறிந்துவிடு; நீ நம் கூட்டத்துடன் மலைமேற் போயிரு. கோட்டான்கள் என்னைத் தம் நண்பனாகக் கருதும். நான் அவற்றுடன் சென்று அவற்றின் வாழிட நிலைமையை நன்கறிந்து மீள்வேன். அப்பொழுது நீங்கள் என் யோசனைப்படி நடவுங்கள். பகைவரை எளிதில் அழித்துவிடலாம்," என்று கூறியது. பின்னர்ச் சிரஞ்சீவியின் யோசனைப்படி அதன் உடம்பு முழுவதும் குருதி பூசப்பெற்று மரத்தடியில் எறியப்பட்டது. காகங்கள் மலையுச்சிக்குப் பறந்து சென்றன.

5. அன்றிரவு கோட்டான்கள் வந்து ஆலமரத்தை முற்றுகையிட்டன; மரத்தில் ஒரு காகத்தையும் காணமை

யால் ஏமாற்றமடைந்தன. அவ்வமயம் கீழே கிடந்த சிரஞ்சீவி 'கா-கா' என்று கத்தியது. உடனே பல கோட்டான்கள் அதைச் சுற்றிக்கொண்டு கொல்லத் தொடங்கின. அப்போது முது காக்கை, "ஐயன்மீர், என்னைத் தாக்க வேண்டா. நான் மேகவருணன் என்னும் கொடியவனுக்கு அமைச்சன். அவன் உங்களை எதிர்க்க விரும்பினன். நான் அம் முயற்சியைத் தடுத்து உங்களுடன் சந்து செய்து கொள்ளும்படி அறிவுரை கூறினேன். அத்தீயவன் நான் உங்கள் சார்பில் பேசுவதாகக் குற்றம் சுமத்தி இவ்வாறு துன்பப்படுமாறு செய்துவிட்டான். நான் இனி அவனிடம் போவதிற் பயனில்லை. நான் உங்கள் அடைக்கலம். என் உடற் புண்கள் மாறி உடல் நலம் பெறின், எல்லாக் காக்கைகளையும் அழிக்க உங்கட்கு உறுதுணையாக இருப்பேன்," என்று கூகைகட்கு இன்பம் உண்டாக உரைத்தது.

6. கூகை அரசு சிரஞ்சீவியின் கூற்றை உண்மையென்றே நம்பியது. அதனல் அது முதுகாக்கையை அன்புடன் பார்த்து, "நீ கவலைப்படவேண்டா. என் கோட்டையில் வந்து கவலையற்றிரு. நான் உன்னைப் பாதுகாப்பேன்," என்றது. சிரஞ்சீவி கூகையரசனைப் பணிந்து, "அரசே, நான் உமது கடைவாயிலிற் காத்திருந்து வஞ்சனை இன்றிப் பணிபுரிந்து காலம் கழிப்பேன்" என்றது. பின்னர் அனைத்தும் கோட்டான்களின் இருப்பிடத்தை அடைந்தன. முதிய காக்கை கோட்டான்களின் இருப்பிடமாகிய மலைக் குகையை நன்கு பரிசோதித்துக் கூகைகளை எவ்வாறு அழிப்பது என்பதைத் திட்டமிட்டுக்கொண்டது.

7. முதிய காக்கை நாள்தோறும் பகற்பொழுதில் வெளிச்சென்று உலர்ந்த சுள்ளி ஒன்றைக் கொண்டுவந்து குகை வாயிலில் போட்டுவந்தது. பகற்போதில் கோட்டான்களுக்குக் கண் தெரியாது. ஆதலால் காக்கையின் செயலை அவை கண்டறியக் கூடவில்லை. இவ்வாறு பல நாட்கள் கழிந்தபிறகு குகை வாயிலின் அருகில் சுள்ளிகள் பலவாகச் சேர்ந்துவிட்டன. 'இனிக் காலந் தாழ்க்காது கோட்டான்களை அழிப்பதே நல்லது' என்று எண்ணிய முதுகாக்கை, ஒருநாள் பகற்பொழுதில் மேகவருணனிடம் சென்று, தான் செய்த சூழ்ச்சியை விளக்கி, "தலைவ, நீயும் உன்னைச் சேர்ந்தவரும்

காலந் தாழ்க்காது எரிகொள்ளிகளுடன் மலைக்குகைக்கு வந்து, வாயிலருகில் போடப்பட்டிருக்கும் சுள்ளிகளைக் கொளுத்திவிடுக. குகைவாயிலில் நெருப்பும் புகையும் மிகுதிப்படும்; புகை குகைக்குள் சென்று பரவும். அதனால் கூகைகள் மூச்சுத் திணறி வெளியேவர முற்படும். குகை வாயிலில் புகையும் தீயும் பரவி இருப்பதால் அவை வெளிச் செல்ல முடியாது மூச்சுத் திணறி இறக்கும். உடனே புறப் படுக," என்று கூறியது.



குகைவாயிலில் தீ

8. மேகவருணனும் அதன் கூட்டமும் உடனே நாலாப் பக்கங்களிலும் பறந்துசென்று, சிறிது நேரத்திற்குள் எரி கொள்ளிகளை வாயிற் கவ்விக்கொண்டு வந்து, முதுகாக்கை யைப் பின்தொடர்ந்தன. யாவும் கோட்டான்கள் இருந்த மலைக் குகையை அடைந்தன; அங்குக் கிடந்த சுள்ளிகள் மீது எரிகொள்ளிகளைப் போட்டன. நன்றாகக் காய்ந்திருந்த சுள்ளிகள் தீப்பட்டவுடன் எரியத் தொடங்கின. புகை மிகுதிப்பட்டுக்குகைக்குள் நுழைந்து பரவியது. கோட்டான் கள் மூச்சுத் திணறித் திக்குமுக்காடின. பகலிற் கண்

தெரியாத குறை வேறு. ஆயினும் அவை குகைக்கு வெளியே பறந்து செல்லலாம் என்று தள்ளாடிப் பறந்தன; குகை வழியே தெரியவில்லை; அனல் வீச்சை உணர்ந்தன; புகை மிகுதியை உணர்ந்தன. பாவம்! அவை யாவும் மூச்சுத் திணறி இறந்தன. இங்ஙனம் அறிவு நுட்பம் வாய்ந்த முதுகாக்கை கோட்டான்களை அடுத்துக் கெடுத்தது.

அரும்பொருள்

பழுமரம் - ஆலமரம். முழை - குகை. அடுத்துக் கெடுத்தல் - சந்தி விக்கிரகம். மாற்றான் - பகைவன். கொற்றவ - வெற்றியையுடையவனே, அரசனே! காவல - அரசனே (நாட்டைக் காப்பவனே) சூழ்ச்சி - தந்திரம். இயம்ப - சொல்ல. குருதி - இரத்தம். முது - முதிய. சந்து - சமாதானம். உறுதுணை - பொருந்திய துணை. கூகை - கோட்டான்.

பயிற்சி

I. விடை கூறுக:—

1. காக்கை அரசு தன் அமைச்சர்களை நோக்கி யாது கூறியது?
2. அந்த அமைச்சர்கள் கூறிய யோசனைகள் யாவை? ஒவ்வொன்றாகக் கூறுக.
3. சிரஞ்சீவி என்பது கூறிய யோசனை யாது?
4. அது கூகை அரசனிடம் எவ்வாறு அடைக்கலம் புகுந்தது?
5. முதிய காக்கை செய்த சூழ்ச்சி யாது? விளக்குக.
6. அஃது எவ்வாறு கோட்டான்களை அழித்தது?

II. 1. அரசன் என்னும் பொருள்பட வரும் சொற்களைத் தருக.
2. வலி, நினைவு, தக்கது, ஏற்ற, அற்று - எதிர்ச் சொற்களைக் கூறுக.
3. மாற்றான், ஏனையோர், மனவலிமை, அழுத்தமாக, சூழ்ச்சி, குருதி-இவற்றை வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

III. கோட்டான்களின் தாக்குதல் - காகங்களின் யோசனை - முது காக்கையின் சூழ்ச்சி - காகங்களின் வெற்றி. இக்குறிப்புகளைக் கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக வரைக.

3. செய்தித்தாட் குறிப்புகள்

நாள் தாள்கள், வாரத் தாள்கள், திங்கள் தாள்கள் எனச் செய்தித் தாள்கள் பலவகைப்படும். மாணவர் மலர்களில் உள்ள தேனை நுகரும் வண்டுகளைப் போல்பவர் ஆதலின் எல்லாக் கொள்கைகளைப் பற்றிய செய்தித் தாள்களையும் படித்துத் தேவைப்படுவனவற்றைஎடுத்துக்கொண்டு அறிவு வளர்ச்சி பெறவேண்டுபவராவர். நாட்டு நன்மைக்கும் சமூக நலனுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் தேவையான செய்திகள் எனக் காணப்படுவனவற்றைக் கத்தரித்துத் தங்கள் நோட்டுப் புத்தகத்தில் ஒட்டி வைத்துக்கொள்ளல் நல்லது; மாணவர் கழகங்களிற் பேச நேரிடின் அல்லது கட்டுரை வரைய நேரிடின் இவை மிகுந்த பயனைத் தருவனவாகும். இங்கு மாதிரிக்காக அறிவுச் செய்தி ஒன்று தரப்படுகின்றது. படித்துப் பயன் பெறுக.

இக்காலத்து இணையிலாப் பெரியார்

டாக்டர் சர். ஆ. இலக்குமணசுவாமி முதலியார் அவர்கள்.

[இது, சென்னை மாகாணக் கல்லூரியில் 1948-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 3-ஆம் நாள் மாலை காந்தியடிகள் திரு உருவப் படத்தைத் திறந்துவைக்கையில் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் சர். ஆ. இலக்குமணசுவாமி முதலியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.]

1. காந்தியடிகள் அரசியலை விரும்பி அதனிற் கலந்து கொண்டிலர்; தாம் உயிருக்கு உயிராக மதித்துவந்த உண்மையுடைமை, நாநயம், மனிதத் தன்மை, இன்னா செய்யாமை முதலியன ஆட்சி முறையில் சமுதாயத்தில் பாழ்படுதலைக் கண்டு பொறாமல், ஆட்சி முறையில் அவற்றை நிலை நாட்டவே, அரசியலிற் பங்கு கொண்டார். அவர் தம் அரசியல் வாழ்க்கையைத் தென் ஆப்பிரிக்காவில்—இந்தியரை இழிவாகக் கருதி நடத்திவந்த தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தாரிடையில் உண்மையுடைமை, இன்னா செய்யாமை என்னும் இரண்டு அறப்போர்க் கருவிகளுடன் தொடங்கினார். சிறந்த போர்க் கருவிகளைத் துணையாகக் கொண்ட வன்மை மிகுந்த ஓர் அரசாங்கத்தை ஆட்டிப் படைக்க உண்மையுடைமையும், இன்னா செய்யாமையும் சிறந்த கருவிகளாகும் என்று உலகத்தார் முதலில் நினைத்திலர்;

ஆயின் காந்தியடிகள் அவற்றைப் பயன் படுத்தி அரசாங்கத்தாருடன் நடத்திய போரில் வெற்றிமேல் வெற்றி பெற்றதைக் கண்ட பிறகே இவ்விரு அறப்போர்க் கருவிகளின் பேராற்றலை மக்கள் உணரலாயினர்; அவற்றை ஏற்றவையெனக் கண்டு பயன்படுத்திய அடிகளை 'மஹான்' என்று போற்றலாயினர்.



டாக்டர் ஆ. ல. முதலியார்

2. இனிய சொற்களுடன் நன்முறையில் வேண்டுகோள் விடுத்து மறியல் செய்தலைக் கண்டறிந்தவர்--அதனைக் கையாளும்படி தூண்டியவர் அடிகளேயாவர். அது முதலில் காங்கிரஸ் இயக்கத்தினரிடமே இருந்தது. ஆயின், அதன் அளவிடற்கரிய வன்மையையும் வெற்றியையும் கண்ட பிறகு தொழிலாளர் முதலிய பல இயக்கத்தினரும் கையாளத் தொடங்கினர். ஆகவே, இன்று அது நாடெங்கும் பரவிவிட்டது. தம்மிடமோ பிறரிடமோ குற்றம் காண நேரினும், தம்மால் மேற்கொண்ட ஒன்று சாதிக்க முடியாது என்பது தோற்றியபோதும் அடிகள் 'உண்ணுநோன்பு' மேற்கொள்ளலானார். இதுவும் அரசியல் உலகில் புதிய அறக்கருவியே ஆகும். இதனைக் கண்டு உலகமே திடுக்கிட்டது. அடிகள் பல முறை - பல நாள் உண்ணு நோன்பு மேற்கொண்டார்; அனைத்திலும் வெற்றி பெற்றார். அவர் மறைவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் டெல்ஹியில் அமைதியை நிலைநாட்ட உண்ணு நோன்பு மேற்கொண்டதையும் வெற்றி பெற்றதையும் நாம் நன்கு அறிவோம் அல்லவா?

3. இந்தியா உரிமைபெற்ற பிறகு, நடைபெற்ற-மனம் கலங்கத்தக்க நிகழ்ச்சிகள் அனைத்தும் அவரது தூய உள்ளத்தைக் கவர்ந்தன; அவரைத் துயரத்தில் ஆழ்த்தின. அப்பெரியார் நாடோறும் இந்து-முஸ்லிம் மன அமைதிக்கும்

ஒற்றுமைக்கும் இறைவனிடம் விண்ணப்பம் விடுக்கலானார்; தம் விண்ணப்பத்தில் இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்குரிய தொடர்களைச் சேர்த்தார். அவர் இந்துக்கள் பக்கமோ, முஸ்லிம்கள் பக்கமோ சேராமல் நடுவுநிலைமையில் இருந்து குற்றம் கண்ட இடத்து வன்மையாகக் கண்டித்து இரு திறத்தாரையும் நல்வழிப்படுத்தியது அவரது பெருந்தன்மையை நன்கு விளக்குவதாகும். இத்தகைய நற்பண்பு இருந்தமையாற்றான் அவரை இந்துக்கள் மட்டுமன்றி முஸ்லிம்களும் தங்கள் பாதுகாப்பாளராக மதித்துப் போற்றினர். இப்பேறு பெறுதற்கரியது.

4. எந்த நாடும் கண்டிராத முறையில் காந்தியடிகள் உண்மையுடைமை, இன்னா செய்யாமை, உண்ணா நோன்பு, அமைதி கெழுமிய மறியல் என்னும் அறக்கருவிகளுடன் வன்மை மிகுந்த ஆங்கில அரசாங்கத்தை வளைத்து நமது தாய் நாடு உரிமைபெறச் செய்தார்; அதே சமயத்தில் தம் அறக் கொள்கைகள் சிறப்பாக இந்தியர் உள்ளங்களிலும் பொதுவாக உலகத்தார் உள்ளங்களிலும் வேரூன்றச் செய்தார்; உள்ளம் - உரை - உடல் என்னும் மூன்றிலும் தூயவராக நடந்துகொண்டார். இத்தகைய சிறப்பியல்புகளால் அந்தப் பெரியார் நம் ஒவ்வொருவர் அகக்கோவிலிலும் குடியிருக்கின்றார். அவரது ஊனுடல் அழியினும் புகழுடல் அழியவில்லை. நாம் அவரை நினைக்குமளவு அவர் வாழ்பவராகவே கருதப்படுவார். மஹான்கள் இறவாத புகழுடம்பு பெற்றவர்கள்.

—அமுதசுரபி

அரும்பொருள்

நாள் தாள்-நாடோறும் வெளிவரும் பத்திரிகை. இன்னாசெய்யாமை-அஹிம்சை. கெழுமிய - பொருந்திய. ஊனுடல் - பூதவுடல்.

பயிற்சி

I. விடை தருக:—

1. காந்தியடிகளுடைய அறப்போர்க் கருவிகள் எவை?
2. அவற்றால் அவர் சாதித்த அருஞ்செயல்கள் எவை?
3. அவர் அரசியலிற் பங்குகொண்டதேன்?
4. ‘அவரது பெருந்தன்மையை நன்கு விளக்குவதாகும்’—எது?
5. அடிகளிடம் காணப்பட்ட சிறப்பியல்புகள் யாவை?
6. ‘அடிகள் வாழ்பவராகவே கருதப்படுவர்.’—இஃது எங்ஙனம் பொருந்தும்?

II. ‘காந்தியடிகள் இறவாத புகழுடையவர்’ என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

4. உருளைக் கிழங்கு

1. மக்கள் கொள்ளும் உணவுப் பொருள்களுள் கிழங்கு வகைகளும் இடம் பெறுகின்றன. அக்கிழங்கு வகைகளில் உருளைக்கிழங்கே சிறப்புடையது-சிறந்த உணவுச் சத்துடையது என்று உலகத்தார் கருதுகின்றனர். இது பெரும்பாலும் உருண்டை வடிவாய் அமைந்திருத்தலால் உருளைக் கிழங்கு எனப் பெயர் பெற்றிருக்கலாம். இது நமது நாட்டில் கோடைக்கானல், நீலகிரி முதலிய மலைப் பகுதிகளிலும் பெங்களூரிலும் மிகுதியாகப் பயிரிடப்படுகின்றது. புகைவண்டிகள், லாரிகள் மூலமாகத் தமிழ் நாடு முழுவதும் பரவி, மக்கட்குச் சிறந்த உணவுப் பொருளாகி வருகின்றது. இது பலநாள் வரை கெடுவதில்லை. ஆதலின் மக்கள் ஏறக்குறைய ஒரு மாதம் வரை இதனைத் தம் வீடுகளில் வைத்துக்கொண்டு வேண்டும்போது கறியாக்கி உண்டுவருகின்றனர்.

2. இச்சிறந்த உணவுப் பொருள் எந்த நாட்டைச் சேர்ந்தது? இஃது அங்கிருந்து எவ்வாறு பல நாடுகளிலும் பரவியது? இக்கேள்விகட்கு விடைகாண்பது நமது கடமையாகும். உருளைக்கிழங்கு அமெரிக்கநாட்டு உஷ்ணப் பகுதிகளில் முதன் முதல் பயிர் செய்யப்பட்டுவந்தது. இஃது அங்கிருந்து கொண்டுவரப்பட்டு ஸ்பெயின் நாட்டிற் பயிராக்கப்பட்டது. இதன் அருமையைப் பிரெஞ்சுக்காரரும் இத்தாலியரும் உணர்ந்து, தத்தம் நாடுகளில் பயிர் செய்யத் தொடங்கினர். அவர்கள் முதலில் இதனைச் சிறந்த உணவுப் பொருளாகக் கருதாது, புதுமைப் பொருளாகக் கருதியே இதனைப் பயிர் செய்தலில் பெருமை கொண்டனர் பின்னர் நாளடைவில் இதன் அருமை பெருமைகளை அறிந்து சிறந்த உணவுப் பொருளாகக் கொண்டனர். முதலில் இது பணக்காரர் உணவுப் பொருளாக இருந்தது; பிறகு பொது மக்களது உணவுப் பொருளாக மாறத் தொடங்கியதும் ஐரோப்பாவிற் பரவலாயிற்று.

3. பிரெஞ்சு நாட்டு மன்னரான பதினாறும் லூயி என்பவரால் இஃது ஐரோப்பாவில் நன்கு பரவலாயிற்று. அவர் தம் தோட்டங்களிலேயே உருளைக்கிழங்குகளைப் பயிர்

செய்வித்தார்; நாள்தோறும் தாமே சென்று தோட்டத்தைக் கவனித்துவந்தார். அவரைப் பார்த்துப் பிரபுக்களும் உருளைக் கிழங்கைத் தங்கள் நிலங்களிற் பயிரிட்டனர்; பின்னர்ப் பொது மக்களும் இதனை மிகுதியாகப் பயிர் செய்தனர். பிறகு இச்செய்தி ஐரோப்பா முழுவதும் பரவியது. பிற நாட்டு அரசர்களும் குடிகளும் போட்டியிட்டு உருளைக் கிழங்கினைப் பயிர் செய்யலாயினர்.

4. இவ்வாறு ஐரோப்பா முழுவதும் உருளைக்கிழங்கு பயிர் செய்யப்படும் செய்தி பிரிட்டிஷ் தீவுகளுக்கு எட்டியது. ஆங்கிலேயரும் இதனைப் பயிர்செய்து தங்கள் உணவுப் பொருளாகக் கொள்ளலாயினர். ஆயினும் சர். வால்ட்டர் ராலி என்பவரது முயற்சியாற்றான் இது பிரிட்டிஷ் தீவுகளில் சிறப்பாகக் கருதப்பட்டது. அவர் இங்கிலாந்து இறைவருக்குத் தோழர்; சிறந்த நூலாசிரியர்; புகழ் பெற்ற கப்பலோட்டியாக இருந்தவர். அவர் 1584-இல் அமெரிக்கா சென்றார்; அங்கிருந்து பல வகை உணவுப் பொருள்களையும் பிற உயிர்களையும் இங்கிலாந்திற்குக் கொண்டுவந்தார். அப்பொருள்களில் உருளைக் கிழங்கு ஒன்றாகும். அவர், "நம் உணவுப் பொருளாகிய கூலவகைகள் கால வேறுபாட்டால் விளைவு குன்றிப் போயினும், உருளைக் கிழங்கு நன்கு பயிர் செய்யப்படுமாயின், அக்குறையை நீக்குதல் கூடும். குடிமக்கள் பசிப்பிணிக்கு அஞ்சவேண்டுவதில்லை. உருளைக் கிழங்கு சிறந்த உணவுச் சத்துடைய பொருளாகும்" என்று நாடெங்கும் பிரசாரம் செய்தார். இங்கிலாந்து அரசியராக இருந்த எலிசபெத் என்பவர் உருளைக் கிழங்குகளைத் தம் சிறப்பு உணவாகக் கொண்டார். அதன் பின்னரே ஆங்கிலக் குடியானவர் உருளைக் கிழங்கை மிகுதியாகப் பயிரிட முற்பட்டனர்.

5. இனி உருளைக் கிழங்கு பயிரிடப்படுதலைப் பற்றிய விவரங்களைக் காண்போம்: உருளைக்கிழங்கின் விதை போட்டுப் பயிராக்கலாம்; அல்லது பெரிய கிழங்குகளை முளைக்கண் பார்த்துப் பக்குவமாகச் சிறிய துண்டுகளாக நறுக்கிக் கரும்பு நடுதல்போல நடலாம். உருளைக்கிழங்குப் பயிர் பிற கூலவகைப் பயிர்களைப் போல மிகுந்த பூசாரத்

தை உட்கொள்வதில்லை. ஆதலின் இதற்குப் பொருத்த மான தட்பவெப்ப நிலையுள்ள எந்த நாட்டிலும் இதனைப் பயிரிடலாம். முதலில் நிலத்தை நன்ருக உழுது மண்ணைப் பதப்படுத்திப் பாத்திகளை அமைத்து, அவற்றில் இரண்ட டிக்கு ஒன்று வீதம் வரிசை வரிசையாக நடலாம். நல்ல உயர்தரக் கிழங்குகளைப் பயிராக்க வேண்டுமாயின், சிறந்த கிழங்குகளை நறுக்கி நடவேண்டும்; அல்லது முதல் தர விதைகளை விதைக்க வேண்டும்.



உருளைக் கிழங்குச் செடி

6. உருளைக் கிழங்குச் செடி ஒன்றரை அடிமுதல் இரண்டு அடிவரை வளரும் இயல்பினது. அதன் மலர் ஊதா அல்லது இந்திர நீல நிறமாக இருக்கும். அப்பூவி லிருந்துதான் விதையைப் பிறப்பிக்கும் காய் தோற்ற மெடுக்கும்; காய் முற்றி விதை உண்டாகும். படத்தைப் பாருங்கள்.

நமது நாட்டில் சர்க்கரை வள்ளிக்கிழங்கில் வெண்மை நிறமுடையது, செந்நிறமுடையது என இருவகை உண்டு அல்லவா? அவற்றில் செந்நிறமுடையது மற்றதைவிடச் சுவை உள்ளது. அதனுற்ருன் நம்மவர் செந்நிறக் கிழங்கை

மிகுந்த விலைகொடுத்து வாங்குதல் வழக்கம். அதுபோலவே உருளைக் கிழங்கிலும் இரண்டுவகை உண்டு. ஒன்று வெண்ணிறக்கிழங்கு; மற்றொன்று செந்நிறக் கிழங்கு. செந்நிறக்கிழங்கு முன்னதைவிட மிக்கசுவையுடையது. அதனால் ஐரோப்பியர் அதனையே மிகுந்த விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்துகின்றனர். நமது நாட்டில் நீலகிரிமலைப் பகுதியிற்றான் செந்நிறக் கிழங்கு சிறிதளவு பயிர் செய்யப்படுகிறது. கோடைக்கானல், பெங்களூர் முதலிய இடங்களில் வெண்ணிறக் கிழங்கே மிகுதியாகப் பயிராக்கப்படுகிறது.

7. பதினைந்து வயதுடைய மாணவர் நால்வருள், வயதுக்கேற்ற வளர்ச்சியுடையோர் ஒருவர் அல்லது இருவர் இருப்பர்; மற்றவர் குறைந்த வளர்ச்சி அல்லது மிகுந்த வளர்ச்சியும் உடல் வன்மையும் பெற்றிருப்பர். இம்மாறுபாடுகட்கு உரிய காரணங்களுள் அவரவர் உட்கொள்ளும் உணவு சிறந்ததாகும். சிறந்த சத்துள்ள உணவை நாடோறும் உட்கொள்பவர் உடல்நிலை வளமுடையதாகவும், ஏழைகள் உடல்நிலை வளமற்றதாகவும் இருத்தல் கண்கூடு. இவ்வாறே உருளைக் கிழங்குகளில் ஒரு நிலத்திற் பயிரானவை பெருத்தும், மற்றொரு நிலத்தில் பயிர் செய்யப்பட்டவை கோலியளவினவாகவும் இருக்கக் காரணம், நிலத்தின் கொழுமை—கொழுமை இன்மை இவற்றைப் பொறுத்ததாகும். ஆதலின் உருளைக் கிழங்கைப் பயிர் செய்பவர் நிலத்தில் சிறந்த எருக்களைப் போடுவது இன்றியமையாததாகும். சிறந்த உணவுப் பொருளாகக் கருதப் படும் உருளைக்கிழங்குளைச் சிறந்த எருவிட்ட நிலத்திற் பயிராக்கலே அறிவுடைமையாகும். நாம் பெரிய வளமுள்ள கிழங்குகளைப் பார்த்து வாங்கிப் பயன்படுத்தலே நல்லது.

8. ஐரோப்பியர் உருளைக் கிழங்கினை உணவுப் பொருளாகக் கொள்வதுடன் அதிலிருந்து ஒரு வகை வெண்ணிறப் பசையை உண்டாக்கி, அதனை ஆடைகட்குப் பயன் படுத்துகின்றனர்; மேலும், உருளைக் கிழங்கிலிருந்து இரசாயன முறையில் பல புதிய பொருள்களைச் செய்ய முயன்று வருகின்றனர்; நாம் உருளைக் கிழங்கைப் பல வாறு கறி சமைத்து உண்கின்றோம்.

அரும்பொருள்

கூலம் - தானியம். கோடைக்கானல் மதுரை ஜில்லாவில் இருக்கிறது.

பயிற்சி

I. விடை கூறுக:—

1. நாம் உட்கொள்ளும் பலவகை உணவுப் பொருள்கள் யாவை?
2. உருளைக்கிழங்கு நமது நாட்டில் எங்கெங்குப் பயிர் செய்யப்படுகிறது?
3. உருளைக்கிழங்கு எந்நாட்டைச் சேர்ந்தது? அஃது எவ்வாறு ஐரோப்பாவிற் பரவத் தொடங்கியது?
4. அஃது இங்கிலாந்தில் எவ்வாறு சிறப்புப் பெற்றது?
5. உருளைக்கிழங்கு எவ்வாறு பயிராக்கப்படுகிறது?
6. நிலவளமே பயிரின் சிறப்புக்குச் சிறந்த காரணம்.—இதை நன்கு விளக்குக.
7. உருளைக்கிழங்கு எவ்வெவ் வகையிற் பயன்படுகிறது?

II. உருளைக்கிழங்கின் முதல் இடம்—அஃது ஐரோப்பாவிற் பரவிய வரலாறு—அதனைப் பயிராக்கும் முறை—அதன் பயன்: இக்குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

III. வளர்ச்சி, மாறுபாடு, அவரவர், பொது மக்கள், பொருத்தமான, ஏதப்படுத்தி—இவற்றைச் சொந்த வாக்கியங்களிற் பயன்படுத்துக.

5. கடாரம் கொண்டான்

(இராஜேந்திர சோழன்)

1. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது பழமொழி. அதன்படி தமிழ் நாட்டு வணிகர் கி.மு. 5-ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே அரேபியா, எகிப்து, இத்தாலி முதலிய மேற்கு நாடுகளுடனும் மலேயா, சுமத்ரா, ஜாவா, சையாம், சீனம் முதலிய கிழக்கு நாடுகளுடனும் வாணிகம் செய்துவந்தனர். அவர்கட்குத் தமிழ் நாட்டிலிருந்து பொருள்கள் மிகுதியாகச் சென்றன. அவர்கள் அப்பொருள்களை அங்கு விற்றுப் பொருள் திரட்டினர்; தாம் தாம் தங்கியிருந்த நாடுகளில் கோவில்களைக் கட்டினர்; குளம் தொட்டனர்; அன்னசத்திரங்களை அமைத்தனர்; இவ்வாறு தம் ஊதியத்தில் ஒரு பகுதியை அக்கால நிலைக்கு ஏற்ப நல்ல வழிகளிற் செலவழித்தனர்.

2. இங்ஙனம் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த கடல் வாணிகம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் சோழப் பேரரசு ஏற்பட்டதும் மிகுந்த வளர்ச்சி அடையத் தொடங்கியது. மலேயா முதலிய நிலப் பகுதிகளை ஆண்ட அரசர்கள் சோழப் பேரரசருடன் நட்புக்கொண்டு வாழ்ந்தனர். இராஜராஜன் காலத்துக் கடாரத்தரசன் தன் நாட்டுப் பௌத்த வணிகர்க்காக நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்தர் கோவிலைக் கட்ட அநுமதி வேண்டினன். முதலாம் இராஜராஜ சோழன் அநுமதி தந்தான். அவன் மகனை முதலாம் இராஜேந்திர சோழன் என்ற கங்கைகொண்ட சோழன் நாகையில் கட்டப்பட்ட பௌத்தர் கோவிலுக்கு ஆனைமங்கலம் என்னும் சிற்றூரைத் தானமாக அளித்தான். இங்ஙனம் அயல்நாட்டு மக்கள் தமிழ் நாட்டில் தங்கி வாணிகம் செய்யவும் வழிபாடு செய்யவும் வசதிகள் செய்து தரப்பட்டன. இவ்வாறே தமிழரும் மலேயா, சையாம், சுமத்ரா, ஜாவா முதலிய பகுதிகளில் அவ்வந்நாட்டு மன்னர் அநுமதி பெற்று வாணிகம் செய்துவந்தனர்.

3. கங்கைகொண்ட சோழனை இராஜேந்திரன் கோதாவிரி யாறுவரை தன் செல்வாக்கினைப் பரவச் செய்து செங்கோல் நடாத்திவந்தான். அவன் மைந்தராகிய இராஜாதிராஜன், இராஜேந்திரதேவன், வீர ராஜேந்திரன் என்ற பெரு வீரர்கள் சோழப் பெருநாட்டைப் பாதுகாத்துவந்தனர். சேரபாண்டியரும் கங்கர், கதம்பர், தெலுங்கர் முதலிய வரும் சோழப் பேரரசுக்கு அடங்கித் தத்தம் நாடுகளை ஆண்டுவந்தனர். கல்வி, கைத்தொழில், உழவு, உள் நாட்டு வாணிகம், வெளிநாட்டு வாணிகம் என்பன செழித் தன. செல்வப் பெருக்கம் ஏற்பட்டது. குடிகள் ஆட்சி யில் மன அமைதியுற்று இசை, நடனம், நாடகம், ஓவியம், சிற்பம் முதலிய நாகரிகக் கலைகளை வளர்த்துவந்தனர்.

4. தென் இந்தியா முழுவதும் சோழனது ஆட்சியில் இருந்ததால், அப்பெருநாட்டு விளைபொருள்களும் செய் பொருள்களும் அவனது இசைவு பெற்றே பிற நாடுகட்கு அனுப்பப்பட்டன. மேற்குக் கரையில் முசிரி, வஞ்சி முத லிய துறைமுக நகரங்களும் கிழக்கில் கொற்கை, காயல், நாகப்பட்டினம், மயிலாப்பூர் முதலிய துறைமுக நகரங் களும் ஈழ நாட்டுத் துறைமுக நகரங்களும் கடல்வாணிகத் தில் சிறந்து விளங்கின. சீனர், அராபியர், முதலிய பிற நாட்டு வணிகர் தமிழ்நாட்டுத் துறைமுக நகரங்களில் தங்கி வாணிகம் செய்தனர். அவர்கள் சோழப் பெருநாட்டுப் பொருள்களாகிய மெல்லிய ஆடைகளையும், அகில், சந்த னக்கட்டைகள், மிளகு, சுக்கு, சீரகம், சாதிக்காய், ஏலக் காய் முதலிய பொருள்களையும் தந்தம், முத்து, இரத்தினங் கள் முதலிய பொருள்களையும் ஏற்றுமதி செய்தனர்; தங் கள் நாட்டுப் பொருள்களைத் தமிழகத்தில் இறக்குமதி செய்தனர்.

5. அயல்நாட்டு அரசர்கள் வாணிகவுறவு வலுப்படச் சோழனிடம் தூதரை அனுப்பிவந்தனர். அங்ஙனமே சோழப்பேரரசனும் அவர்கள் நாடுகட்குத் தூதரை அனுப்பி உறவு கொண்டான். இங்ஙனம் இருந்தும் இரா ஜேந்திரன் ஆட்சியில் மலேயா, சுமத்ரா, ஜாவா, சையாம்,

இந்தோ-சீனம் முதலிய நாடுகள்மீது சோழப் படையெடுப்பு நடந்தது. அப்பகுதிகளை ஆண்ட சங்கிராம விஜயோத் துங்கவர்மன் என்ற அரசனுக்கும் சோழனுக்கும் பகைமை ஏற்பட்டதோ—அன்றி அவ்வரசன் தன் நாட்டில் வாழ்ந்த தமிழ் வணிகரைத் துன்புறுத்தினனோ காரணம் இன்னதென்பது தெரியவில்லை.

6. குறித்த நாளில் சோழனது கப்பற்படை நாகப் பட்டினம் முதலிய கிழக்குத் துறைமுகங்களிலிருந்து

புறப்பட இருந்தது. எல்லாக் கப்பல்கள் மீதும் புலிக் கொடி கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு கப்பலி லும் நூற்றுக்கணக்கான போர் வீரர் தத்தம் போர்க் கருவிகளைத் தாங்கிப் போர்ப் பாடல்களைப் பாடிக்கொண்டு இருந்தனர். அவர்கள் முகங்கள் அன்று மலர்ந்த செந்

தாமரை மலர்களை ஒத்திருந்தன. பல போர்களில் வன்மையுறப் போரிட்டு வெற்றி ஒன்றையே கண்ட அவ் வீரருட் பலர் கடல் கடந்த நாடுகளில் செய்யப்போகும் போரினைப் பற்றிப் பலவாறு பேசிக்கொண்டிருந்தனர். குறித்தநேரத்தில் இராஜேந்திர சோழன் ஆணைப்படி கப்பல்கள் புறப்பட்டன.

7. சிறந்த வீரனது வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளைப் போலக் கப்பல்கள் வங்கக்கடலில் விரைந்து சென்றன. இராஜேந்திரன் யோசனைப்படி போர்க்கப்பல்கள் முதலில் மாநக்கவாரம் (நிக்கோபர்) என்னும் தீவுகளை அடைந்தன. சோழ வீரர்கள் அத்தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டனர்; பின்னர்ச் சுமத்ரா, மலேயா, ஜாவா முதலிய நாடுகளில் உள்ள துறைமுகங்களில் இறங்கினர்; ஒரே காலத்தில் கடாரத்து அரசனுடைய பல துறைமுக நகரங்களைத் தாக்கினர். அங்கங்கு இருந்த கடாரத்து அரசனுடைய படைவீரர் சோழப் படைவீரரை எதிர்த்தனர். சில இடங்கள் சோழ வீரரால் எளிதிற் கைப்பற்றப்பட்டன. சில இடங்களில் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. எனினும், சோழ வீரர் யானைக் கூட்டத்திற் சிங்கங்கள் பாய்வதைப் போலப் பாய்ந்து வீராவேசத்துடன் போரிட்டனர்; முடிவில் கடாரத்தரசனுடைய படை வீரரை முறியடித்தனர்; அரசனுடைய யானைகள், விச்சாதிரத் தோரணம், அரசபண்டாரம் முதலியவற்றைக் கவர்ந்தனர். கடாரத்தரசன் வேறு வழியின்றிச் சோழப் பேரரசனுடன் சமாதானம் செய்துகொண்டான்.

8. இங்ஙனம் சோழப் படைவீரர் வென்ற இடங்கள் எவை? படத்தைப் பார்த்து அறிந்துகொள்க. அவற்றுட் சிறந்தது கடாரம் என்பது. அது மலேயாவின் மேல் கரையில் உள்ள துறைமுக நகரம். அஃது இப்பொழுது 'கெடா' என வழங்குகிறது. அது சங்க நூல்களில் 'காழகம்' என வழங்கப்பட்டுவந்தது. மிகப் பழைய காலத்திலிருந்தே தமிழ் நாட்டினர் கடாரத்துடன் வாணிகம் செய்துவந்தனர். கடாரமே கடாரத்தரசனது தலை நகரம். பண்ணை, மலையூர், ஸ்ரீவிஜயம் என்பன சுமத்ரா தீவில் உள்ளவை.

மாப்பப்பாளம், தலைத்தக்கோலம், மாயிருடிங்கம், இலங்கா சோகம், மாதமார்லிங்கம், மேவிலிம்பங்கம் என்பன மலேயாவில் உள்ள ஊர்கள். இவற்றிற் பெரும்பாலன கடற்கரை ஊர்கள். இலாமுரிதேசம் என்பது சுமத்ரா தீவின் வடபகுதியில் இருக்கும் நிலப்பகுதியாகும். அராபியர் இதனை 'லாமுரி' என்றும், மார்க்கோபோலோ என்பவர் 'லிம்ப்ரி' என்றும், சீனர் 'லான் நூல்' என்றும் குறித்தனர்.

9. இப்போருக்குப் பிறகு சோழப் பேரரசனை கங்கை கொண்டான், 'கடாரம் கொண்டான்' எனப் பாராட்டப் பெற்றான். சங்ககால முதல் சோழராட்சி முடிவு பெற்ற கி. பி. 13-ஆம் நூற்றாண்டுவரை இருந்த எந்தச் சோழரும் இத்தகைய கடற் போரினை நடத்தியதில்லை என்று கூறலாம். அதனாற்றான் இராஜேந்திரன் 'பெரு வீரன்' என்று பாராட்டப் பெற்றான்.

அரும்பொருள்

பண்டாரம் - பொக்கிஷம். மார்க்கோபோலோ என்பவர் இத்தாலி நாட்டினர்; இ. பி. 13-ஆம் நூற்றாண்டில் சீன நாடுவரை யாத்திரை செய்து தாம் கண்ட பல நாடுகளைப்பற்றிய விவரங்களை எழுதிவைத்தவர்.

பயிற்சி

I. விடை தருக:—

1. பழந்தமிழர் கடல் வாணிகத்தைப்பற்றி யாது அறிவீர்?
2. சோழப் பெருநாட்டில் இருந்த துறைமுக நகரங்கள் எவை?
3. சோழர்காலத் தமிழ் வணிகர் எவ்வெந் நாட்டாருடன் கடல் வாணிகம் செய்தார்?
4. இராஜேந்திர சோழன் மக்கள் யாவர்?
5. சோழப் பேரரசனது கடாரப் படையெடுப்பைப் பற்றிக் கூறுக.
6. கடாரம் கொண்டானைப்பற்றி நீவிர் கருதுவதென்ன?

II. வாக்கியங்களில் அமைக்க:—

1. கடல் வாணிகம், நீண்டகாலமாக, துன்புறுத்தல், முறியடித்தல், பண்டாரம், முடிவுபெற்ற.
2. எதிர்ச்சொல் கூறுக:—
   வளர்ச்சி, அளித்தான், மிகுதி, பேரரசு.

6. ஜேம்ஸ் குக்

1. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டறிந்த பிறகு ஐரோப்பிய மக்கள் கடல் கடந்து நாடுகளைக் காணும் முயற்சியில் ஈடுபட்டனர்; 'பசிபிக் பெருங்கடலில் பெரு நிலப்பரப்பு (கண்டம்) ஏதேனும் உண்டோ?' என்பதை ஆராயத் தொடங்கினர். அவருள் டச்சுக்காரர் கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் பெரிதும் பாடுபட்டனர். கி. பி. 1642-இல் டாஸ்மன்[1] என்னும் மாலுமி இன்று நியூஸீலந்து என வழங்கும் நிலப் பகுதியில் இறங்கினர்; அஃது ஒரு பெரிய கண்டத்தின் பகுதி என்று தவறாகக் கருதினர். அவர் கருத்து ஐரோப்பாவிற் பரவவே, இங்கிலாந்தில் இருந்த இராயல் கழகத்தார்[2] உண்மை அறிய விரும்பினர். அத்துடன் வான நூற் கணக்கின்படி கி. பி. 1769-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3-ஆம் நாள் வெள்ளிக்கோள் தரைக்கும் கதிரவனுக்கும் இடையில் வானத்திற் செல்லும் என்பதை அறிந்தனர்; 'வான நூல்' தரை நூல் ஆராய்ச்சி புரிவோர்க்கு அந்நிகழ்ச்சி தேவைப்படுவதாம். வெள்ளிக்கோள் கதிரவனது உருவைத் தாண்டிச் செல்ல ஆகும் நேரத்தைக் கணக்கிடின், அக்கணக்கிலிருந்து பல உண்மைகளை அறிய இயலும். தரைக்கும் கதிரவனுக்கும் இடையிலுள்ள தூரத்தையும் கணக்கிடலாம்' என்று நம்பினர்; 'ஆயின், அந்நிகழ்ச்சியை இங்கிலாந்திலிருந்து காண இயலாது; தென் கடற் பகுதியில் இருந்துதான் பார்க்க வேண்டும். அதற்கேற்ற ஒருவரை அனுப்ப வேண்டும்' என்று முடிவு செய்தனர். அவர்கள் விருப்பத்தை நிறைவேற்ற ஜேம்ஸ் குக் என்ற கடற்படை அறிஞர் ஒருவர் முன் வந்தார்.

2. ஜேம்ஸ் குக் கி. பி. 1728-இல் யார்க்ஷயரிற் பிறந்தவர்; எளிய குடும்பத்திற் பிறந்தமையால் இளமையிலே படிப்பைவிட்டுத் தொழிலில் ஈடுபட்டவர்; தொழில் செய்துகொண்டே கணிதம், வானக் கலை, இலக்கியம் இவற்றைப் படித்தறிந்தவர்; இறுதியாக அரசர் கடற்படையில் மாலுமியாகச் சேர்ந்து, பல்லோர் பாராட்டுக்கும்

1. Tasman. 2. Royal Society.

உரியவரானவர். அவர் செயின்ட் லாரன்ஸ் ஆற்றையும் நியூபவுண்டுலந்து நாட்டையும், தவறின்றிக் கணக்கெடுத்துப் படம் வரைந்து புகழ்பெற்றவர். ஆதலின் அவரையே தென் கடற் பகுதிக்கு அனுப்பவேண்டும் என்று இராயல் கழகத்தார் விரும்பினர்.

3. ஜேம்ஸ் குக் 1768-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26-ஆம் நாள் 'எண்டவர்' என்னும் பெயர்கொண்ட கப்பலில் புறப்பட்டார். அக் கப்பலில் [3]அறிவியல் நிபுணரான பேங்ஸ் என்பவரும், தாவர நூல் வல்லுநரான [4]டாக்டர் சோலாண்டர் என்பவரும், துணைவர் எண்பதின்மரும் சென்றனர். கப்பல் மேற்கு நோக்கிப் புறப்பட்டு நவம்பர் 13-ஆம் நாள் தென் அமெரிக்காவில் உள்ள [5]ரையோ-டி-ஜெனெய்ரோ என்ற துறையில் தங்கியது. பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் தெற்கே சென்று தென் அமெரிக்காவின் தென் கோடியில் உள்ள [6]டையேரா-டெல்-பியூகோ என்னும் தீவில் தங்கியது. பிறகு கப்பல் ஐந்து வாரங்கள் பிரயாணம் செய்து [7]ஹாரன் முனையைச் சுற்றி [8]மெகலன் ஜலசந்திக்கு மேற்கில் சென்றது. அங்கே சில தீவுகள் இருக்கக் கண்டு பிரயாணிகள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்; இறுதியில் 1769-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ஆம் நாள் [9]டஹிட்டித் தீவில் தங்கினர்; வெள்ளியின் போக்கைக் கண்டு கணக்கெடுக்க ஏற்ற தீவு அதுதான் என்பதை அறிந்து, அளவிட முடியா மகிழ்ச்சி கொண்டனர். அவர்கள் அங்கு மூன்று திங்கள் தங்கினர்.

ஜேம்ஸ் குக்

---

3. Scientist 4. Dr. Solandar 5. Rio de Janeiro
6. Tierra Tel Puego 7. Horn 8. Magellan 9. Tahitti

4. டஹிட்டித் தீவு இயற்கையழகு மிக்கது. சுற்றி லும் பவளமேடுகள் ஆங்காங்குச் சிவந்த ஒளிவீசின. அத் தீவில் வாழ்ந்த மக்கள் நல்லவர்கள். அவர்கள் நட்புணர்ச் சிக்கு அடையாளமாகப் பசுந்தழைகளைக் கையிலேந்திப் புதியவரை வரவேற்றனர். அம் மக்கள் உயரமாகவும் அழகாகவும் இருந்தனர்; பழுப்பு நிறத்தினர். அவர்கள் நாள்தோறும் பலமுறை நீராடும் பழக்கம் கொண்டிருந் தனர். உடல் முழுவதும் பச்சை குத்திக்கொண்டிருந்தனர்: முரட்டு ஆடை நெய்ய அறிந்திருந்தனர்; பல வகை விளையாட்டுகளில் வல்லுநராகக் காணப்பட்டனர். அவர் களிடம் இருந்த ஒரே தீய குணம் திருடுதல் ஆகும். நிலம் செழிப்புள்ளதாக இருந்தும் அங்கு உணவுப் பொருள்கள் மிகுதியாகப் பயிராகவில்லை. குக் தம்மிடம் இருந்த எலு மிச்சை, நாரத்தை, கிச்சிலி முதலிய பழமர விதைகளை அத்தீவில் நட்டார். அதனால் அத்தீவினர் குக்கைப் பாராட்டி நன்றி தெரிவித்தனர்.

5. வெள்ளியின் பயணம் நிகழ இருந்த நாள்—காலை நேரத்தில் வான்வெளி முழுவதும் ஒளியுடன் விளங்கியது. ஒன்பது மணி 25 நிமிடம் 12 விநாடிக்குக் கதிரவன் ஓரத்தில் வெள்ளிக்கோள் ஒரு சிறிய துளிபோலக் காணப் பட்டது. 18 நிமிடம் 12 விநாடிக்குப் பிறகு அக்கோள் முழுவதும் கதிரவனது விளிம்புக்குள் வந்துவிட்டது. கதிரவனை முற்றும் கடந்து போக அதற்கு ஆறு மணி நேரத்துக்கு மேலாயிற்று. குக் அக்கணக்குகளை எல்லாம் நன்கு குறித்துக்கொண்டார்; பின்னர் அத்தீவினரிடம் பிரியா விடைபெற்றுப் புறப்பட்டார்.

6. குக் குழுவினர் அக்டோபர் மாதம் 7-ஆம் நாளன்று நியூஸீலந்தின் வடகிழக்குக் கரையை அடைந் தனர். ஆறுமாத காலம் அங்குத் தங்கி அந்நிலப் பகு தியை நன்கு ஆராய்ந்தனர்; அப்பகுதி இரண்டு தீவுகளைக் கொண்டது என்பதைக் குக் முதன்முதற் கண்டறிந்தார். அத்தீவுகளில் வாழ்ந்த மக்கள் கொடியவர்கள்; வட தீவில் மக்களை உண்ணும் இனத்தவரும் இருந்தனர். குக் குழு வினர் தம் துப்பாக்கிகளைக் காட்டி அச்சுறுத்தி அவர்

களைப் பணியவைத்து நட்புக் கொண்டனர். அவர்களிட மிருந்த மண்டை யோடுகள், பதினைன்கடி நீளமுள்ள ஈட்டிகள், உளிகள், கோடரிகள் முதலியன ஆங்கிலே யர்க்கு அச்சத்தை விளைத்தன.

7. ஆறு திங்கள் கழிந்த பிறகு குக் குழுவினர் 1770-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆ-ம் நாள் நியூஸிலந்தை விட்டு ஆஸ்திரேலியாவை நோக்கிப் பிரயாணமாயினர். அக்காலத்தில் ஆஸ்திரேலியாவின் ஒரு பகுதி டச்சுக்கார ராற் கண்டறியப்பட்டுப் புதுஹாலந்து எனப் பெயர்பெற் றிருந்தது. குக், ஆஸ்திரேலியாவின் கீழ்க்கரை வழியே தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பிரயாணம் செய்தார். அவரும் அவர் குழுவினரும் ஆஸ்திரேலியாவில் உள்ள பறவைகள், விலங்குகள் முதலியவற்றைப் பற்றியும் அந் நாட்டு மக்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்துகொண்டே சென்றனர். இவ்வாராய்ச்சியினால் புதிய புதிய அறிவியல் உண்மைகளும் விலங்கு, பறவைகளைப் பற்றிய உண்மை களும் மக்களைப்பற்றிய புதிய விவரங்களும் வெளிப்பட்டன. ஆஸ்திரேலிய மக்கள் நட்புத் தன்மையிற் சிறந்திருந்தனர். அவர்கள் தம் உடல் உறுப்புகட்குச் சிவப்பு நிறம் தீட்டு தல் வழக்கம்; கிளிஞ்சல்களைக் கோத்து மாலையாக அணிந் திருந்தனர்.

8. ஆஸ்திரேலிய ஆராய்ச்சியில் குக் குழுவினர் சென்ற கப்பல் சேதப்பட்டது. கடலில் இருந்த பவளப் பாறைத் தடைகளும் மணல் தரைகளும் அவர்தம் கப்ப லுக்குப் பெரிய இடையூறுகளாக இருந்தன. அவர்கள் அவ்விடையூறுகளிலிருந்து ஒருவாறு தப்பி யார்க் முனையை அடைந்தனர். பின்னர்க் கிழக்கிந்தியத் தீவுகளை நோக்கிச் சென்று ஜாவாவில் சிறிது காலம் தங்கினர். பிறகு பிரயாணத்தைத் தொடங்கி மேற்கு நோக்கிச் சென்று தென் ஆப்ரிக்காவில் உள்ள முனை நகரில் தங்கி னர்; அங்கு ஓய்வுகொண்ட பிறகு புறப்பட்டு 1771-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 12-ஆம் நாள் இங்கிலாந்தை அடைந்தனர்.

9. இக்கடற் செலவினால் ஏற்பட்ட நலன்கள் யாவை? வெள்ளிக் கோளின் வானப்போக்கு ஆராய்ச்சி நன்கு முடிவுற்றது. நியூஸிலந்து இரண்டு பெரிய தீவுகளைக் கொண்டது என்பது நன்கு விளக்கப்பட்டது. டஹிட்டித் தீவின் அருகில் தென்கடற் கண்டம் எதுவும் இல்லை என் பது உறுதியாயிற்று. ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரை

முழுவதும் நன்கு ஆராய்ச்சி செய்யப்பட்டது. இவை யாவும் விளக்கமாகப் படங்களிற் குறிக்கப்பட்டன. இவ்வியத்தகு விவரங்களை அறிந்த இராயல் கழகத்தார் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து, குக் அவர்கட்கு வாழ்த்தும் சன்மானமும் அளித்தனர்; "டஹிட்டியின் அருகில் பெருங்கண்டம் இராவிடினும் தொலைவிலேனும் ஒன்று இருத்தல் வேண்டும் என்பது எங்கள் நம்பிக்கை. ஆதலின் அதனைக் கண்டறிந்துவர வேண்டுகிறோம்," என்று கூறி, அவரை மீண்டும் கடற்செலவை மேற்கொள்ளுமாறு வேண்டினர்.

10. குக்கின் இரண்டாம் கடற்செலவு அடுத்த ஆண்டு ஜுலைத் திங்கள் 13-ஆந் தேதி தொடக்கமானது. இரண்டு கப்பல்கள் புறப்பட்டன; ஏறக்குறைய இருநூறு பிரயாணிகள் சென்றனர். இந்த முறை குக் தென் கடலில் வேறு எந்த ஆராய்ச்சியாளரும் செல்லாத தூரம் சென்று புதிய கண்டம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்தார். அந்த ஆராய்ச்சியில் அவரும் அவர் குழுவினரும் பனிமண்டலத்தில் பட்ட இன்னல்கள் பல; இறுதியில் தென் கடலிற் பெரிய கண்டம் இல்லை என்று முடிவிட்டுத் திரும்பினர். அவர்கள் நியூஸீலந்தை அடைந்தனர். அங்கிருந்த குடிகளுடைய தலைவர்களுடன் பழகி உறவு கொண்டனர்; பிறகு கப்பல்களைச் செலுத்திச் சென்று ஈஸ்டர் தீவினை அடைந்தனர்; அங்கிருந்த மக்களுடன் பழகினர்; அவர்கள் வழிபட்டு வந்த தெய்வ வுருவங்களைக் கண்டு திகைத்தனர். அவ்வுருவங்கள் ஏறத்தாழ இருபதடிக்கு மேற்பட்ட உயரமுடையனவாகக் காணப்பட்டன. அத்தீவில் வாழையும் கரும்பும் மிகுதியாக விளைதலைக் குக் குழுவினர் கண்டனர்.

11. குக் 1776-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ஆம் தேதி புறப்பட்டுத் தமது மூன்ரும் கடற்செலவை மேற்கொண்டார். இம்முறை அவர் பஸிபிக் பெருங்கடலில் உள்ள ஹவாய்த் தீவுகளைக் கண்டறிந்தார்; பின்னர் பேரிங் ஜலசந்தி வழியே சென்று, அட்லாண்டிக் பெருங்கடலிலிருந்து செல்லும் வடமேற்கு வழி, பசிபிக் பெருங்கடலுக்குப் போகாது என்பதையும் அங்ஙனம் செல்லக்கூடும் என்று முன்னையோர் கூறியது தவறு என்பதையும் விளக்கினர். இப்பயணம் மூன்று ஆண்டுகள் பிடித்தது.

12. குக் உலகத்தைச் சுற்றி ஏறக்குறைய 60 ஆயிரம் கல் தொலைவு சுற்றினர்; தாம் பசிபிக் பெருங்கடலிற்

கண்ட நாடுகளில் எல்லாம் பயிர்த்தொழில், கைத்தொழில், நல்வாழ்க்கை, நாகரிகம் இவற்றுக்கான வழிகளைக் காட்டினார். அப்பெரியாரது உழைப்பு இன்றேல் ஆங்கிலேயர் நியூஸீலந்து முதலிய தென்கடல் நாடுகளைப் பெற்றுக் குடியேறியிருத்தல் இயலாது என்றே கூறலாம்.

அரும்பொருள்

பெருங்கடல் - சமுத்திரம். கோள் - கிரகம். வெள்ளி - சுக்கிரன். பிரியாவிடை - பிரிய மனமின்றிப் பிரிதல். அச்சுறுத்தி - பயமுறுத்தி. கீழ்க்கரை - கிழக்குக் கரை.

பயிற்சி

I. விடை தருக :—

1. இராயல் கழகத்தார் குக்கைத் தென்கடற்பகுதிக்கு அனுப்பக் காரணங்கள் எவை?
2. குக் தென்கடற்பகுதி ஆராய்ச்சிக்குச் செல்லப் பெற்றிருந்த தகுதி யாது?
3. குக்கின் முதற்செலவில் அவர் தங்கிய துறைகள் எவை? தீவுகள் எவை?
4. டஹிட்டித் தீவினரைப்பற்றி யாது அறிவீர்?
5. டஹிட்டித் தீவில் வெள்ளியின் பயணம் எவ்வாறு கண்டறியப் பட்டது?
6. குக் நியூஸீலந்தைப் பற்றிக் கொண்ட முடிவு யாது?
7. 'ஆஸ்திரேலிய ஆராய்ச்சி' பற்றிக் குறிப்பு வரைக.
8. முதற் கடற் செலவினால் ஏற்பட்ட நலன்கள் யாவை?
9. குக் இரண்டாம் செலவினை மேற்கொள்ளக் காரணம் யாது?
10. அவரது இரண்டாம் செலவினைப்பற்றிய விவரங்களைத் தருக.
11. தாம் செய்த மூன்றும் செலவில் அவர் கண்டறிந்தவை யாவை?

II. 'ஜேம்ஸ் குக் செய்த கடற்செலவுகளில் ஏற்பட்ட நலன்கள்' என்பது பற்றி 20 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

III. வாக்கியங்களில் அமைக்க :—
முன்வருதல், போக்கு, இறுதி, பிரியாவிடை, அச்சுறுத்தல், கடற்செலவு.

IV. நீங்கள் செய்த ஒரு பிரயாணத்தில் அடைந்த அநுபவங்களைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

7. புலவர் குணநலன்

பிறர் நலம் பேணும் பெருந்தன்மை

1 ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்குமுன் இருந்த தமிழ்ப் புலவர் பலர் நிலையான வருவாய் இல்லாதவர்; அங்கங்கு வாழ்ந்த பேரரசர், சிற்றரசர், வள்ளல்கள் முதலியோரைச் சென்று கண்டு, தம் புலமையைக் காட்டி, அவரை மகிழ்வித்துப் பரிசில் பெறுவதையே தொழிலாகக் கொண்டிருந்தனர்; எனினும் தம் வறுமையை நினைந்து தம் மானவுணர்ச்சிக்குக் கேடு சூழ்ந்திலர்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி அறியார்; தம்மை மதியாதார் யாவரே ஆயினும் அவரைச் சீறிப் பேசி மதியாது சென்றனர்; வேற்றரசர்பால் பெற்ற பொருள்களைக் கொண்டுவந்து, தம்மை மதித்து உபசரியாத வள்ளல்களிடம் காட்டி, 'இனியேனும் புலவர்களிடம் நேர்மையாக நடந்து கொள்க' என்று அறிவுறுத்திச் சென்றனர்; தம் வறுமையை விளக்கிக் குறையிரக்கச் சென்ற இடத்தில் அரண்மனையில் இருந்தவரது துன்ப நிலையைக் காண நேரின், தம் வறுமையை மறந்து, அப்பெருமக்கள் துன்பத்தைப் போக்க முதற்கண் முனைந்தனர். தாம் வேண்டிய பரிசில் பெற்ற பின் அரசர்க்கு அறிவுரைகள் பல புகன்று அகல்வது அக்காலப் புலவர் வழக்கம்.

2. இத்தகைய குண நலங்கள் வாய்க்கப்பெற்ற புலவருள் பெருங்குன்றூர் கிழார் என்பவர் ஒருவராவர். பெருங்குன்றூர் கிழார் நல்லாசிரியரை அடுத்துத் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்றுக் கவிபாடும் ஆற்றல் பெற்று விளங்கினார்; உற்ற வயதில் 'மங்கையர்க்கு அரசியார்' என்று போற்றத் தக்க நற்குண நங்கையார் ஒருவரை நாடி மணந்தார்.

"இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்பது ஆன்றோர் அநுபவ வாக்கு. அதுபோல, வறுமை மிகுந்த புலவரது இல்லம் நற்குண நங்கையாரது வாழ்க்கையினால் எல்லாம் நிறைந்த இன்ப இல்லமாகக் காட்சி அளித்தது.

3. அவர் பழனிமலை நாட்டை ஆண்ட சிற்றரசரான பேகன் என்பவனைக் கண்டு பரிசில் பெற விரும்பினார். பேகன் வரையாது வழங்கிவந்த வள்ளல். அவன் மனைவி பெயர்

கண்ணகி என்பது. அவள் பேரழகி; நற்குண நங்கை. எனினும் எக்காரணத்தாலோ பேகன் சிறிது காலம் அவளைப் பிரிந்து தனித்து வாழ்ந்தான். அப்பொழுது அரண்மனையில் கண்ணகி மட்டுமே இருந்துவந்தாள். கற்புடைய மடந்தையர் தம் காதற் கொழுநரை விட்டுத் தனித்திரார் அல்லவா? அதனால் கண்ணகி துன்பக் கடலில் மூழ்கினாள். அவளது திருந்திய திருநுதல் திலகத்தை இழந்தது; கொவ்வைச் செவ்வாய் குறுநகை இழந்தது; நறுநெய் பூசப்பட்ட கூந்தல் நறுமண மலர்களை இழந்தது. அவளது முகம் தாமரையற்ற திருக்குளத்தை ஒத்திருந்தது. பேகனது அரண்மனை மதியற்ற இரவெனப் பொலிவிழந்து காணப்பட்டது. அந்நிலையிற்றான் பெருங்குன்றூர் கிழார் பேகனைக் காணச் சென்றார்.

4. புலவர் பேகனது அரண்மனைக் காவலனைக் கண்டார். அவன் ஊக்கமற்று நடைப் பிணம் போல வாயிலில் உலவிக்கொண்டிருந்தான். அவன் புலவரைக் கண்டும் காணாதவன் போல இருந்தான். புலவர் அரண்மனை வாயிலைக் குறுகினர். அவர் அங்கு யாரைக் கண்டார்? விரிந்த கருங்குழலையும் நீர்வார்ந்த கண்களையும் சோகம் நிறைந்த முகத்தையும் கொண்ட கண்ணகியைக் கண்டார்; திடுக்கிட்டார்; வாயிற் காவலனிடம் வந்தார்; பேகன் இருந்த பிறிதோர் இடத்தைக் கேட்டறிந்து விரைந்தார். அவர் அப்பொழுது தாம் வந்த நோக்கத்தை மறந்தார்; பேகனை அவன் மனைவியுடன் சேர்ப்பித்தலே தமது கடமை என்னும் உறுதியான எண்ணம் கொண்டார்.

5. அவரது வருகையைக் கவனித்த பேகன் அவரை மலர்ந்த முகத்துடன் உபசரித்து இருக்கை ஈந்தான். புலவர் அவனுடைய பரந்த ஒளி பொருந்திய கண்களையும் நெற்றியையும் வசீகரிக்கத்தக்க திருமுகத்தையும் கண்டு வியந்தார்; அவர் அவனை அன்புடன் நோக்கி, "வள்ளல் பெருமானே, நினது பரந்த புகழைக் கேள்வியுற்று நான் நெடுந்தொலைவிலிருந்து வந்திருக்கிறேன். உன்னைக்கண்ட என் உள்ளங் குளிர்ந்தது. யான் முதற்கண் உனது அரண்மனையை அடைந்தேன்; அங்கு உன்னைக் காண்பதற்குப் பதிலாகத் தெய்வத் தன்மை பொருந்திய பெண்மணி ஒருத்தியைக் கண்டேன். அவளது கார்போன்ற கூந்தல் சரிந்திருந்தது; மலர்போன்ற விழிகளிலிருந்து நீர் பெருகிக்கொண்டிருந்தது. அவள் கவலைகொண்டவள் போலக் காணப்பட்டாள். அத்துன்ப நிலையிலும் அவள்

பேரழகுடன் விளங்கினுள். அவளது உள்ளம் மாசற்ற உள்ளமாகக் காணப்பட்டது. பெருமானே, அவள் நினது மனத்துக்கு இயைந்த மாபெரும் பத்தினி என்று கருது கிறேன். நீ அப்பெருமாட்டியைத் துன்புற விட்டுத் தனித்திருத்தல் தகுதியன்று. நீ அம்மாதரசியிடம் மீண்டும் வருதலே யான் நின்னிடம் வேண்டும் பரிசிலாகும்'', என்று உள்ளம் உருக உரைத்தனர்.

6. இக் கூற்றிலிருந்து புலவரது பெருந்தன்மையை நன்கறியலாம் அன்றோ? இவ்வியத்தகு நற்பண்பினை நோக்கியே,

"தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்"

என்று ஆன்றோர் பெரியோர்களைப் பாராட்டியுள்ளனர் போலும்!

அரும்பொருள்

நங்கை - பெண்களிற் சிறந்தவள்; நம்பி - ஆடவரிற் சிறந்தவன். திருந்திய - செம்மையான. திரு - அழகிய. நுதல் - நெற்றி. கொவ்வை - கோவ்வைப்பழம். குறுநகை - புன்சிரிப்பு. நறு - நன்மணம். இருக்கை - ஆசனம். பெருமான் - பெருமாட்டி. வியத்தகு - ஆச்சரியப்படத் தக்க. உள்ளார் - நினையாதவராய். உறூஉம் - உண்டாகும். விழுமியோர் - பெரியோர்.

பயிற்சி

I. விடை தருக:—

1. பெருங்குன்றூர் கிழார் - பெயர்க் காரணம் யாது?
2. ஐயம், திரிபு - விளக்குக.
3. ஆன்றோர் அநுபவ வாக்கு எது? அதன் கருத்து யாது?
4. சங்ககாலப் புலவர் தம் வள்ளல்களிடம் எங்ஙனம் நடந்து வந்தனர்?
5. பேகனைப் பிரியலுற்ற கண்ணகி நிலை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
6. புலவர் பேகனிடம் கூறிய செய்தி யாது?
7. ஆன்றோர் பெரியோர்களை எவ்வாறு பாராட்டியுள்ளனர்? ஏன்?

II. நீ படித்த வேறு நூல்களிலிருந்து புலவர் குணநலன்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

III. பெருங்குன்றூர் கிழாரைப் பற்றி 15 வரியில் ஒரு பாராட்டு வரைக.

8. சர் ஜகதீச சந்திர போஸ்

1. நமது இந்திய நாடு சமயம், அரசியல், இரசாயனம், பௌதிகம், மருத்துவம், தாவரக்கலை முதலிய பல அறிவுத் துறைகளில் பண்பட்ட அறிஞரைப் பெற்றதாகும். இந்திய நாட்டுச் சமயப்பெருமையை உலகறியச் செய்தவர் விவேகானந்த அடிகள் ஆவர். அரசியல் துறையிலும் சன்மார்க்கத் துறையிலும் உலகப் புகழ் பெற்றவர் காந்தியடிகள் ஆவர். இரசாயனத்திற் புகழ் பெற்ற இந்தியர் சர் பிரபுல்ல சந்திர ராய் என்பவர். பௌதிக ஆராய்ச்சித் துறையில் பெயர் பெற்றவர் சந்திரசேகர வேங்கடராமன் ஆவர். இங்ஙனமே மருத்துவக் கலையில் புகழ் பெற்ற நிபுணர் சிலருள் நமது சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவுள்ள டாக்டர் சர் ஆ. இலக்குமணசாமி முதலியார் ஒருவராவர். தாவரக் கலை ஆராய்ச்சியில் உலகப் புகழ் பெற்ற பெரியார் சர் ஜகதீச சந்திர போஸ் ஆவர்.

2. 'மரம் - செடி - கொடிகட்கு உயிர் உண்டு; இன்ப துன்பங்கள் உண்டு' என்னும் உண்மைகளை முதன் முதலில் உலகம் வியப்ப எடுத்துக் காட்டிய பெருமை போஸ் அவர்கட்கே உரியதாகும். அப்பெரியார் வங்காளத்தில் விக்ரம்பூர் என்னும் சிற்றூரில் 1858-இல் பிறந்தவர். அவர் தந்தையார் உதவி நீதிபதியாக வேலை பார்த்துவந்தார். அவர் நமது ஜகதீசரைக் கண்ணை இமைகள் காப்பது போலக் காத்து வந்தார்; அவரது படிப்பில் மிகுந்த கவலை செலுத்தினர். ஜகதீசர் எதனையும் கூர்ந்து நோக்கும் பண்பினைப் பெற்றிருந்தார்; ஒன்றைக் கூர்ந்து நோக்கிய பின் அதனைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்தலும் அவர் பண்பாக இருந்தது. அவர் நாள்தோறும் தந்தையாரைத் தாம் அங்கு கண்ட பொருள்களைப் பற்றிப் பல ஐயங்களைக் கிளப்பி விடை கேட்பார்; தந்தையார் தம் மனத்திற்குப் பொருந்தத் தக்க விடை கூறிய பின்பே அமைதி பெறுவார்.

3. ஜகதீசர் கிராமப் பள்ளியிற் படித்த பிறகு கல்கத்தாவில் ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்து படிக்கலானர். நுண்ணறிவுடைய அவர், தம்முடன் படித்துவந்த ஆங்கில மாணவருடன் கலந்து பழகி, ஓராண்டிற்குள் ஆங்கிலம் பேசக் கற்றுக்கொண்டார்; தம் ஓய்வு நேரங்களில் தம் வீட்டுத் தோட்டத்தில் செடி கொடிகளை வைத்து வளர்க்கலானர்; அவற்றைக் கண்ணும் கருத்துமாகக் கவ

ணித்துவந்தார். இப்பழக்கமே அவரைத் தாவரக்கலை நிபுணராகச் செய்ய அடிப்படையாக அமைந்தது என்னலாம். அவர் நன்றாக உடற்பயிற்சி செய்துவந்தார்; தற்காப்புக்காகவும் உடல் உரத்திற்காகவும் ஒவ்வொருவரும் உடற்பயிற்சியைச் செய்யவேண்டும் என்று அவர் தம் தோழர்கட்கு அறிவுறுத்தினர். அவர் ஆங்கிலப் பள்ளியில் நடைபெற்ற மாணவர் கழகக் கூட்டங்களிற் கலந்து கொண்டு பல பொருள் பற்றியும் பேசத் திறமை பெற்றார்.

4. ஜகதீசர் தம் பதினாறும் வயதில் செயின்ட் சேவியர் கல்லூரியிற் சேர்ந்து மேற்படிப்புப் படிக்கலானர்; அங்குப் பூத பௌதிகக் கலையிற் புலமை பெற அவாவினர்; விடுமுறை நாட்களில் இராஜபுத்திர மரபினைச் சேர்ந்த மாணவன் ஒருவனுடன் சேர்ந்து வேட்டையாடும் பயிற்சி பெற்றார். 'ஆரியக் கூத்தாடினும் காரியத்திற் கண்' என்றபடி, அவர் பலவகை ஆட்டங்கட்கு இடையே தமது படிப்பிற் சிறப்புக் கவனம் செலுத்தித் தமது இருபதாம் வயதில் பி. ஏ. பட்டம் பெற்றார். பின்னர் அவர் இங்கிலாந்து சென்று கல்வி கற்க விரும்பினர். அவரது ஊக்கத்தைக் கண்ட தாயார் தம் நகைகளை விற்றுப் பணம் தந்தார். ஜகதீசர் அகமிக மகிழ்ந்து, இங்கிலாந்து சென்றார்.

5. ஜகதீசர் முதலில் விஞ்ஞானக் கலையிற் பி. ஏ. பட்டம் பெறவிரும்பினர்; அதனல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகச் சார்பில் நடைபெற்றுவந்த கல்லூரியிற் சேர்ந்தார்; ஓய்வு நேரங்களில் படகு தள்ளுதல் முதலிய பயிற்சிகள் பெற்று உடல் நலத்தைப் பேணிக் கொண்டார். கல்லூரி ஆசிரியர்கள் அவருடைய பேச்சு வன்மை, நுண்ணறிவு, நன்னடத்தை முதலியவற்றைக் கண்டு மிக்க அன்பு பாராட்டினர்; விஞ்ஞானத் துறையில் அவருக்கு இருந்த ஆர்வத்தைப் பாராட்டி ஊக்கினர். ஜகதீசர் 1884-இல் பி. ஏ. பட்டம் பெற்றார்; அடுத்த ஆண்டு பி. எஸ். ஸி. என்னும் பட்டம் பெற்றார். அவரது பேராசிரியர் அவரை வாழ்த்தி, அப்பொழுது இந்தியாவில் அரசப் பிரதிநிதியாக இருந்த ரிப்பன் பிரபுவுக்கு ஓர் அறிமுகக் கடிதம் கொடுத்தார். ஜகதீசர் 1885-இல் தம் தாய்நாடு மீண்டார்.

6. ஜகதீசர் ரிப்பன் பிரபுவின் பரிவுரைக் கடிதம் கொண்டு கல்கத்தா மாகாணக் கல்லூரியில் பூத பௌதிகப் பேராசிரியராக நியமனம் பெற்றார். அவர் அன்றாடம் தம் பாடங்களைச் செவ்வையாகப் போதித்து வந்தார். மாண

வர்களுடன் அன்பும் ஆதரவும் காட்டிப் பழகி வந்தார். எளிய ஆங்கில நடையில் கடினமான பௌதிக சாத்திர நுட்பங்களை விளக்கிவந்த அவரது பேராற்றலைக் கண்ட மாணவர் அவரைப் பெரிதும் மதித்துப் போற்றலாயினர்.



தாவர ஆராய்ச்சிக் கூடம்

7. ஜகதீசர் தம் வீட்டில் சிறிய அளவில் ஆராய்ச்சிக்கூடம் ஒன்றை அமைத்தார்; தமது ஆராய்ச்சிக்குத் தேவையான பல நுண்ணிய கருவிகளைத் தாமே முயன்று செய்து வெற்றி பெற்றார். அவர் முதன் முதல் செய்த ஆராய்ச்சி மின்சார அலைகளைப் பற்றியது. மின்சார அலை நமது கண்ணுக்குத் தெரியாது. அஃது எப்படி இருக்கக் கூடும் என்பதை அதற்கு முன் எவரும் கண்டறியவில்லை. ஜகதீசர் அது பெரும்பாலும் சாதாரண ஒளி அலைபோல இருக்கின்றது என்பதைக் கண்டறிந்தார்; அதனைத் தாமே தயார் செய்த நுட்பமான கருவிகளைக் கொண்டு விளக்கிக் காட்டினர். மின்சார அலைகளைப் பற்றிய சில உண்மைகளை—முதன் முதல் தம் கண்டறிந்த உண்மைகளை உலகறியச் செய்து புகழ்பெற்றவர் ஜகதீசரே ஆவர். அவர் 1897-இல் இலண்டன் பல்கலைக் கழகத்தில் அவற்றை மெய்ப்பித்துக் காட்டினர்.

8. ஜகதீசரது பெயர் விஞ்ஞானக் கலையுலகிற் பரவத் தொடங்கியது. வங்க அரசாங்கம் அவரது ஆராய்ச்சிக்கு ஆண்டுதோறும் 2500 ரூபாய் உதவிவர இசைந்தது. ஜகதீசர் மேலும் பல ஆராய்ச்சிகள் செய்து தம் முயற்சியில் வெற்றி பெற்றார்; கம்பியின் உதவி சிறிதும் இல்லாமலே மின்சார அலைகளைத் தூண்டிப் பயன்படுத்தும் புதிய முறைகளைக் கண்டறிந்தார்; மின்சார அலை கம்பியின் உதவி இன்றியே மூன்று சுவர்களைக் கடந்து அப்பாலுள்ள கனமான பொருளை அப்புறப் படுத்தி, மணி அடிக்கும் கருவியை ஒலிக்கச் செய்து, வெடி மருந்துத் திரளைப் பற்றவைக்கும் என்னும் உண்மையைச் செய்து காட்டினார். அவர் 1901–இல் இலண்டனில் செய்து காட்டிய இவ்வாராய்ச்சியைக்கண்ட மேனாட்டறிஞர் சொல்லொணா வியப்புற்றனர்; பேரறிஞராகிய ஜகதீசரை மனமாரப் பாராட்டிப் புகழ்ந்தனர். ஜகதீசர் பாரிசில் செய்த விஞ்ஞானச் சொற்பொழிவை நேரில் கேட்ட விவேகானந்த அடிகள் மிக்க மகிழ்ச்சி அடைந்து அவரைப் பாராட்டினார்.

9. பின்னர் ஜகதீசர் தாவர ஆராய்ச்சியில் இறங்கிப் பல ஆண்டுகள் வேலை செய்தார்; இறுதியில், 'தாவரங்கட்கும் விலங்குகளுக்கும் நரம்புத் தொடர்பு ஒன்றாகவே இருக்கிறது; மைமோசா மரத்து வாழ்க்கை மனித வாழ்க்கையையே மெய்ப்பித்து விடுகிறது,' என்னும் புதிய ஆராய்ச்சி முடிவை வெளியிட்டார்; 'தாவரங்கள் மனிதரைப் போலவே இரவு பன்னிரண்டு மணிக்குத் தூங்கத் தொடங்கிக் காலை எட்டு மணிக்கு விழிக்கின்றன' என்னும் மற்றோர் உண்மையை வெளிப்படுத்தினார். இவ்வியத்தகு முடிபுகளைக் கேள்வியுற்ற மேனாட்டு விஞ்ஞானிகள் வியப்பும் திகைப்பும் உற்றனர். ஜகதீசர் அவர்கள் வேண்டுகோள்மீது 1915-இல் இலண்டனை அடைந்து தாம் கண்டறிந்த முடிவுகளைப் பயிற்சிகள் வாயிலாக விளக்கிக் காட்டினார். அவர் பயன் படுத்திய புதிய கருவிகள் மேனாட்டார்க்கே புதியனவாகக் காணப்பட்டன. 'இக்கருவிகள் எனது ஆராய்ச்சிக் கூடத்திற் செய்யப்பட்டவை' என்று ஜகதீசர் சொன்னபொழுது மேனாட்டறிஞர் அடைந்த வியப்புக்கு அளவில்லை. பின்னர் ஜகதீசர் பாரிஸ், பெர்லின், வியன்னா, கலிபோர்னியா, நியூயார்க், ஹார்வார்ட், கொலம்பியா, சிகாகோ முதலிய பெரிய நகரங்களில் உள்ள பல்கலைக் கழகங்களிலும் விஞ்ஞானக் கலைக் கழகங்களிலும் தம் ஆராய்ச்சிகளைச் செய்துகாட்டிப் பெரும்புகழ் பெற்றுத் தாய்நாடு மீண்டார்.

10. ஜகதீசர் கல்கத்தாவில் பெரிய கலை ஆராய்ச்சிக் கூடம் ஒன்றைத்தோற்றுவித்தார். அவர் தாவரத் தொடர்பாகக் கண்டறிந்த உண்மைகள் பல. அவ்வுண்மைகளை இன்று உலக விஞ்ஞானிகள் போற்றிவருகின்றனர். ஜகதீசர் 1937-இல் காலமானார். அப்பெரியார் அதுவரை தாவரக் கலை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அவரிடம் மேனாட்டு மாணவர் பலர் வந்து பயிற்சி பெற்றனர். 'ஜகதீசர் தாவரக் கலையில் ஈடும் எடுப்பும் அற்ற பேரறிஞர். அவரைப் பெற்ற இந்தியாவிற்கு மேனாடுகள் நன்றி செலுத்தும் கடப்பாடுடையன' என்று உலக விஞ்ஞானிகள் கூறி இன்றளவும் அவரைப் பாராட்டுகின்றனர் எனின், அவரது ஆராய்ச்சிச் சிறப்பினை என்னென்பது!

அரும்பொருள்

அவாவினார் - ஆசைப்பட்டார். பேணி - காத்து. பரிவுரை - பாராட்டுரை, (சிபாரிசு.)

பயிற்சி

I. விடை தருக:—

1. நம் நாடு பலதுறை அறிஞரைப் பெற்றதாகும் - இவ்வுண்மைக்குச் சான்றுகள் தருக.
2. ஜகதீசரிடம் இளமையிற் காணப்பட்ட நற்பண்புகள் யாவை?
3. வளர்பிறை போல, கண்ணை இமை காப்பதுபோல - இவ்வுவமைகள் எவற்றை விளக்க வந்தன?
4. ஜகதீசர் ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் எவ்வாறு படித்து வந்தார்?
5. ஜகதீசர் இங்கிலந்தில் பெற்ற பட்டங்கள் எவை?
6. அவர் மின்சாரம் பற்றிச் செய்த ஆராய்ச்சிகள் எவை?
7. அவர் தாவரக் கலையைப் பற்றிச் செய்த ஆராய்ச்சிகள் எவை?
8. அவர் புகழ் உலகெலாம் பரவக் காரணம் என்ன?
9. அவரால் இந்தியா பெருமை பெற்றது என்பது உண்மையாதல் எங்ஙனம்?

II. வாக்கியங்களில் அமைக்க:—

ஈடும் எடுப்பும் அற்ற, தோற்றுவித்தல், பெரும்புகழ், குறுக்கிட்டு, அறிவுறுத்தல், தற்காப்புக்காக, நிறைவேற்ற, இன்பதுன்பங்கள்.

III. எதிர்ச்சொல் கூறுக:—

மீண்டார், பேரறிஞர், சிறப்பு, வளர்பிறை, அஞ்சாமை, ஊக்கம், மெய்ப்பித்து.

9. போலிச் சாமியார்

(நகைச்சுவை)

1. சென்ற பத்தொன்பதாம் நூற்றூண்டின் இடையில் இராமநாதபுரத்தை ஆண்டுவந்த முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் காலத்தில், அவர்தம் தமையனரான பொன்னுச்சாமித் தேவர் என்பவர் சிறந்த தமிழ் அறிஞராகவும் புலவரைப் போற்றிப் பொருள் அளிக்கும் வள்ளலாகவும் விளங்கினர். உண்மைப் புலமையுடன் சென்ற புலவர்கள், தேவரிடம் தக்க மதிப்புப் பெற்றனர். அகங்காரத்துடன் அல்லது ஏமாற்றுங் கருத்துடன் சென்ற புலவர்கள் அவமானமுற்றுத் திரும்பினர். அங்ஙனம் அவமானமுற்றுத் திரும்பியவருள் ஒருவர் சந்தச் சாமியார் என்பவராவர்.

2. சந்தக் கவிகளைப் பொழிவதில் சமர்த்தர் என்று பெயர் பெற்ற சாமியார் ஒருவர் தம்மை முருகக் கடவுளின் அவதாரம் என்றும், வேண்டினவர்க்கு வேண்டிய வரங்களை அளிக்கத் தாம் வல்லவர் என்றும் கூறிக்கொண்டு தம் மாணுக்கர் குழுவுடனும் விருதுகளுடனும் தமிழ் நாடு முழுவதும் சுற்றி வந்தார்; பெருநிலக் கிழவர்களையும் சிறு நிலக் கிழவர்களையும் கண்டு ஆரவாரம் செய்து முருகன் ஆவேசித்ததாகப் பாசாங்கு செய்து, சந்தக் கவிகளைப் பாடி அப்பெருமக்களிடம் பொருள் பெற்று வாழ்க்கையைத் துன்பமின்றி நடத்திவந்தார்.

3. சந்தச் சாமியார் ஒரு நாள் இராமநாதபுரம் சென்று சேர்ந்தார். அவர் சென்ற அன்றே அவரது வருகையைப் பொன்னுச்சாமித் தேவர் அறிந்துகொண்டார். மறுநாட் காலை எட்டு மணிக்குத் தேவரவர்களின் அரண்மனையில் வழக்கம் போலப் புலவர் பெருமக்கள் கூடினர்; தேவரவர்கள் முன்னிலையில் பல பாக்களைப் பாடிப் பொருள் விரித்துக்கொண்டிருந்தனர். அவ்வமயம் அம் மாளிகைக்கு வெளியே பரபரப்பு ஓசை கேட்டது. தேவர் வாயிலை நோக்கினர். அப்பொழுது வாயிற்காவலன் வந்து அவரைப் பணிந்து, "மாணவர் குழாத்துடன் சாமியார் ஒருவர் சமூகத்தைக் காண வந்துள்ளார்" என்று கூறினன். தேவர், "அவரை வரவிடுக" என்றார்.

4. சிறிது நேரத்திற்குள் கையில் வேலேந்திய வண்ணம் சாமியார் ஒருவர் அங்குத் தோன்றினர்; 'முருகா!

முருகா!' என்று ஓசையிட்டுக்கொண்டு அவைக்குள் நுழைந்தார்; புலவர்கள் இடையில் வீற்றிருந்த தேவரைக் கண்டார்; தாம் அவ்வள்ளலின் பக்கத்தில் அமரவேண்டும் என்று விரும்பியவராய், நெருங்கி அமர்ந்திருந்த அவையோரை ஊடறுத்துக்கொண்டு சென்று, தேவர்பக்கத்தில் தாமாகவே அமர்ந்தார்; கால்மேல் காலிட்டவண்ணம் கம்பீரமாகவே உட்கார்ந்துகொண்டார்; கண்களை மூடிக் கொண்டு ஏதோ முணுமுணுத்துக் கொண்டார். தேவர் இருந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை; சாமியாரை வரவேற்கவும் இல்லை; வாய்திறக்கவும் இல்லை. அவையோர் காணாத காட்சியைக் கண்டவரைப் போலத் திகைத்திருந்தனர். அவர்கள் சாமியாரையும் தேவரையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

5. அவ்வமயம் சாமியார் திடீரென்று எழுந்து நின்றார்; கைகளை வீசிக்கொண்டும் கண்களை மிரள விழித்துக் கொண்டும் அவையோர்க்கு இடைஞ்சல் உண்டாகும்படி அங்குமிங்கும் அலையலாயினர்; பின்னர்த் தேவரைப் பார்த்து உரத்த குரலில், "அடா! நம்மை இன்னார் என்று அறியாமல் அகந்தையால் புறக்கணிக்கிறாய். நாம் யார் என்று நினைத்தனை? நாம் சூரனைக்கொன்ற சுடர்வேல் முருகன்; பன்னிருகையுடைய பழனிவேலன்; நீ நாளும்வழிபடும் தெய்வம் யானே என்பதை அறிக. நீ நமது மெய்யன்பன் என்று இரக்கம்கொண்டு நினக்கு அருள்புரிய இங்கு வலிய வந்தோமே அன்றி வேறில்லை. இனியேனும் இதனை அறிந்து ஒழுகுவாயாக" என்று சினத்துடன் கூறி அமர்ந்தார். அவையோர் சாமியாருடைய கடுஞ்சொற்களைக் கேட்டுத் திடுக்கிட்டனர்; தேவர் என்ன செய்வாரோ என்று அஞ்சினர். அவ்வமயம் தேவர் சாமியாரைப் பார்த்து, "அடா! அடா! அறிந்துகொண்டேன்; பொறுப்பீராக" என்று கூறி, அவையை ஒருமுறை பார்த்துவிட்டுப் பேசாதிருந்தார்.

6. தேவர் குரலைக் கேட்டதும் சாமியார், "உனது வேண்டுகோட்படி உனது பிழையைப் பொறுத்தோம். இனி எம்போன்ற பெரியார்களை இங்ஙனம் புறக்கணிக்க மாட்டாய் என்று நம்புகிறோம்" என்று கூறி, மேலும் ஏதேதோ சொல்லலானார். அப்பொழுது அவையின் ஒரு மூலையிலிருந்து 'மூசு, மூசு' என்ற ஓசை யொன்று அவையோர் கேட்ப எழுந்தது. அவ்வோசை சிறிது நேரத்துக்

கெல்லாம் மிகப் பெரிய குரலாக மாறி, மாளிகை முழுவதுமே எதிரொலி பரவுமாறு செய்தது. அவ்வோசையைக் கேட்டுச் சாமியார் உட்பட அனைவருமே ஓசைவந்த பக்கத்தைக் கவனித்தனர். அவ்வேளை கறுத்துப் பெருத்து உயர்ந்த ஓர் உருவம் திடீரென எழுந்துநின்று ஆவேசம் மிகுதிப்பட்டதாய் ஆடிஓடிக் கைகளை நீட்டியும் முடக்கியும் அலைந்தது; அலைந்துகொண்டே, "அடடா! வியப்பு! பெரு வியப்பு!" என்று கூறித் தேவரவர்கட்கு நேரே அவையை ஊடுருவிப் பாய்ந்தது. அந்த ஆவேச மூர்த்தி, "எங்கே அவன்?" என்று குமுறிக்கொண்டே பக்கங்களில் துழாவி, முடிவில் சாமியாரிடம் சென்றது; "ஆ! கண்டோம் உன்னை!" என்று கூறி அவர் தோள்மேல் ஏறிக் குந்திக் கொண்டது; அவரது கைவேலைப் பறித்துத் தன் கையில் பிடித்துக்கொண்டது.

7. அம்மூர்த்தி அவரை அசையவிடாமல் அமுக்கிக் கொண்டே, "அடா! மோசக்காரனே! உன் பொய்யை வெளியாக்க நாமே வந்துவிட்டோம். நாம் பழனியில் உனக்குச் சொல்லி அனுப்பியது யாது? 'நீ வேண்டிக் கொண்டபடி நமது மெய்யன்பனை பொன்னுச்சாமியிடம் சென்று நினது பாவன்மையைக் காட்டிப் பரிசு பெறுவாய்' என்று தானே நாம் சொல்லி அனுப்பினோம்? உண்மை அங்ஙனம் இருப்ப, நாமே நீ என்றும், வேண்டிய அருள்புரிய வல்லவன் நீ என்றும் உன்னைவிட உண்மைப் பக்தனிடம் கூறி, நமது பெயர்க்கு இழுக்கினைத் தேடிவிட்டனையே! பாதக! உன்னை என்ன செய்தல் தகும்? உனது நாவை அறுப்பது நன்று. ஆயின், நீ நம்மைச் சந்தக் கவிகள்கொண்டு பாடிவந்தனை. ஆதலின் நினது நாவினை அறுக்காதுவிட்டோம். இனி இதுபோலும் ஏமாற்று வித்தைகளை நீ எங்கும் செய்யலாகாது; நம் மெய்யன்பர்களிடம் நம் பெயரைச் சொல்லி ஏமாற்றலாகாது. என்ன சொல்லுகின்றாய்?" என்று அதட்டி ஓர் அறை அறைந்து கேட்டது.

8. சாமியார் அமுக்கப்பட்டு அவதிப்பட்டார்; 'எவ்வாறு இத்துன்ப நிலையிலிருந்து தப்புவது!' என்று விழித்துக் கொண்டிருந்தார். அவ்வமயம் அவைப் புலவர் சிலர் எழுந்து ஆவேச மூர்த்தியைப் பணிந்து, "சுவாமி! பிரபுவின் அருமை பெருமைகளை அறியாது இவர் கூறிய கொடுஞ் சொற்களையும், ஏமாற்ற முயன்று இவர் செய்த ஆரவாரத்தையும், தாங்கள் பொறுத்தருள வேண்டும். இவர் செய்தது பெருந்தவறே ஆயினும் தமிழ்ப் புலவராகிய

இவரைத் தமிழ்க் கடவுளராகிய தாங்கள் பொறுத்தருள வேண்டுகிறோம்" என்று வேண்டினர்.

9. தேவர் ஒன்றும் பேசாதிருந்தார். சாமியார் வாயி லிருந்து சொல் வெளிப்படவில்லை. ஆவேச மூர்த்தியின் அமுக்கலும் விட்டபாடில்லை. சாமியார் தம் துன்ப நிலையைக் கண்டு உணர்ந்தார். அவையோரையோ—தேவரவர்களையோ ஏமாற்ற முடியவில்லை என்பதை நன்கு அறிந்



சாமியார் வெளியேறுதல்

தார்; மரியாதையாக மன்னிப்புப் பெற்றுத் தப்புவதே தக்க வழி என்று துணிந்தார். அவர் அவையோரைப் பார்த்து, "நான் செய்த தவற்றைப் பொறுத்தருள்க. நான் இனி இப்பக்கம் வாரேன்" என்று வாய்விட்டுக் கூறினர். உடனே ஆவேச மூர்த்தி, "அடா! அறிவு வந்ததா? ஒழுங்காக நட; எச்சரிக்கை. இம்முறை உன்னை மன்னித்து விட்டோம், செல்" என்று கூறிச் சாமியாரை விட்டுக் கீழே குதித்தது. போலிச்சாமியார், 'தப்பியது தம்பிரான் அருள்' என்று எண்ணிக்கொண்டு வெட்கத்தால் முகங் கவிழ்ந்து, அவையை விட்டு வெளியேறினர்.

10. தேவர் கடவுள் பக்தி மிகுந்தவர். ஆயின், பொய் வேடக்காரரை வெறுப்பவர். அதனாற்றான் அவர் போலிச் சாமியாரை ஒடுக்க விரும்பி அவையைச் சுற்றிப் பார்த்தார். அவர் பார்த்த குறிப்பை உணர்ந்துதான் மீனாட்சிசுந்தரக் குருக்கள் என்ற புலவர் ஆவேச மூர்த்தியாக நடித்துப் போலிச்சாமியார்க்கு நல்லறிவு புகட்டினார்.

அரும்பொருள்

மறம் - வீரம். மறக்குடி - வீரக்குடி. சேதுபதிகள் மறவர் மரபினர். சந்தம் - இராகம். குழாம் - கூட்டம். சிறுநிலக் கிழவர் - மிராசுதார். சமுகத்தை - தங்களை. வலிய - தாமாக. என்னை - என்ன? குந்துதல் - இரு கால்களையும் ஊன்றவைத்து உட்காருதல்.

பயிற்சி

I. விடை தருக:—

1. பொன்னுச்சாமித் தேவரவர்கள் எங்ஙனம் புலவர்களுடன் பொழுது போக்கினர்?
2. அவருடைய குண நலன்கள் யாவை?
3. சந்தச் சாமியார் யார்? அவர் இயல்பு யாது?
4. தேவரவர்கள் அவையில் சாமியார் செய்த ஆரவாரம் யாது?
5. சாமியார் எவ்வாறு தண்டிக்கப்பட்டார்?
6. அவைப் புலவர் ஆவேச மூர்த்தியை யாது வேண்டினர்?
7. இந்நிகழ்ச்சியிலிருந்து நீவிர் உணரும் படிப்பினை யாது?

II. வாக்கியங்களில் அமைக்க:—

ஆவேச மூர்த்தி, போலிச் சாமியார், அவையோர், ஒடுக்க, பெருவியப்பு, எதிரொலி, புறக்கணித்தல்.

III. தவறு + ஐ = தவற்றை.

சுவர் + ஐ, வயிறு + ஐ, மயிர் + ஐ, கயிறு + ஐ.—சேர்த்துக் கூறுக.

10. மங்கோ பார்க்

1. உயிருக்குத் துணிந்தும் பல இன்னல்களை அநுபவித்தும் ஆப்பிரிக்காவினுட் சென்று அதன் பல பகுதிகளையும் கண்டு உலகறியச் செய்த வீரர் சிலராவர். அவருள் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள நைஜர் ஆற்றைக் கண்டு அதன் முழு விவரங்களையும் முதன் முதல் அறிவித்த வீரர் மங்கோ பார்க் என்னும் இளைஞர் ஆவர். அவர் மருத்துவப் பட்டம் பெற்று இருபத்தைந்து வயதில் ஆப்பிரிக்க ஆராய்ச்சியில் முனைந்தார். இங்கிலந்தில் இருந்த ஆப்பிரிக்காக் கழகம் என்பது அவரை இப்பணியில் தூண்டியது.

2. மங்கோ பார்க் 1795-ஆம் ஆண்டு மே மாதத்தில் இங்கிலந்தை விட்டுப் புறப்பட்டார்; ஒரு திங்கள் பிரயாணம் செய்து ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையில் காம்பியா ஆற்று முகத்தில் இறங்கினர்; அங்கிருந்து ஏறத்தாழ இருநூறு கல் தொலைவு உள்நாட்டுக்குட் சென்றார். அங்குள்ள ஒரு நகரத்தில் ஆங்கில மருத்துவர் ஒருவர் இருந்தார். பார்க் அவருடைய விருந்ினராக மழைக்காலம் முடியும்வரை இருந்தார்; அங்கு இருந்த ஆறு மாதங்கட்குள் நீக்ரோ மொழியைப் பேசக்கற்றார்; தாம் செல்ல இருக்கும் நாடுகளைப் பற்றியும் அந்நாட்டு மக்களைப் பற்றியும் சில விவரங்களை வல்லார் வாய்க் கேட்டறிந்தார்; தங்கத் தூள்களையும் தந்தங்களையும் எடுத்துக்கொண்டு அடிமை நீக்ரோவர் நூற்றுக்கணக்கான கல் தொலைவு நடந்துசென்ற கொடிய காட்சியைக் கண்டு திடுக்கிட்டார்.

3. மங்கோ பார்க் 1795-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் நாள், மருத்துவரிடம் விடை பெற்றுத் தம் பயணத்தைத் தொடங்கினர். நீக்ரோ பணிமக்கள் இருவரும் முஸ்லிம் நீக்ரோ ஒருவரும் நீக்ரோ பொற்கொல்லர் ஒருவரும் அடிமை வாணிகர் இருவரும் பார்க்குடன் சென்றனர். பின்னவர் மூவரும் தம் அலுவல் பொருட்டுச் சென்றவராவர். ஆங்கில மருத்துவர் வேண்டுகோளால் அவர்கள் பார்க்குடன் சென்றனர். பார்க் ஒரு குதிரைமீது சென்றார். அவருடைய உடைமைகள் இரண்டு கழுதைகள்மேற் சென்றன. பண்டமாற்றுக்காக மணிகள், புகையிலை முதலியன கொண்டு செல்லப்பட்டன.

4. மூன்று நாட்களுக்குப் பின்னர்ப் பார்க் குழுவினர் நீக்ரோவர் ஊர் ஒன்றினை அடைந்தனர். அவ்வூரில் ஓராயிரம் குடிசைகள் இருந்தன. அவ்வூர் ஒரு சிறு



நாட்டின் தலை நகரமாகும். அந்நாட்டுத் தலைவன் பார்க்கை வரவேற்று உபசரித்தான்; தன் நாட்டு வழிச் செல்ல அநுமதியளித்தான்; அவருக்கு ஒரு வழிகாட்டியையும் அனுப்பினான்; வழி நடைப்பயணத்தின் அருமையைக் கூறி, அவர்கள் நன்முறையிற் பிரயாணம் செய்யத் துணைபுரியுமாறு கடவுளை வேண்டினான்.

பார்க் அத்தலைவனது பெருங்கருணைத் திறனை எண்ணி எண்ணி உள்ளம் உருகிப் பிரயாணத்தைத் தொடர்ந்தார்.

5. பார்க் குழுவினர் காம்பியா ஆற்றுக்கும் செனிகல் ஆற்றுக்கும் இடைப்பட்ட நாட்டிற் சென்றபொழுது பெரிய இருளடர்ந்த காட்டைக் கடக்க வேண்டியவர் ஆயினர். நரிகள் ஓசையும் ஓநாய்கள் ஓசையும் செவிகளைத் துளைத்தன. அப்பகுதிகளில் வாழ்ந்த நீக்ரோவர் பார்க்கின் பிரயாணத்தைப் பற்றிக் கேட்டு, "நைஜரைப் பார்க்கவா இவ்வளவு தூரம் வரவேண்டும்? உங்கள் ஊரில் ஆறுகள் இல்லையா?" என்று கேட்டு நகைத்தனர். வெள்ளையரான பார்க்கைக் கண்ட உள்நாட்டு நீக்ரோவர் கண்ணிமையாது அவரையே நோக்கி நின்றனர்; அவரைப் பேய் அல்லது பூதம் என்று கருதிப் பெண்களும் குழந்தைகளும் அலறினர். பார்க் அவர்களுடன் அன்புடன் நெருங்கிப் பழகிப் பேசின பிறகே அவர்களுடைய ஐயமும் அச்சமும் அகன்றன.

6. பார்க் இங்ஙனம் பிரயாணம் செய்து, முடிவில் தம்முடன் வந்த பொற்கொல்லரது ஊரை அடைந்தார். அப்பகுதிக்குரிய அரசன் பார்க்கை உபசரித்தான்; தன் நட்புக்கு அறிகுறியாக வெண்காளை ஒன்றைப் பரிசாகத் தந்தான்: ஒரு வழிகாட்டியையும் உதவிக்கு அனுப்பினான். பார்க் அடுத்த நாட்டை அடைந்தார். அதன் பெயர் கார்ட்டா என்பது. அந்நாட்டு அரசன் தோலால் மூடப்பெற்ற மண் மேடையையே அரியணையாக்கொண்டு வீற்றிருந்தான். அவனுக்கு ஒரு புறத்தில் வீரர்கள் நின்றிருந்தனர். மறுபுறத்தில் மாதரும் பிள்ளைகளும் நின்றிருந்தனர். அரசன் பார்க்கை அன்புடன் வரவேற்று உபசரித்தான்; அவர் செல்ல இருக்கும் வழி அருமையினை விளக்கினான். பார்க் அவன் கூற்றைக் கேட்டுத் தம் வழியைச் சிறிது மாற்றிக்கொள்ள முடிவு செய்தார்; அடுத்த நாட்டு மூர் அரசனை அலீக்கு, அவனது நாட்டு வழியே தாம் செல்ல அநுமதி வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். சில நாட்களுக்குப் பின்னர் மூர் வீரர் சிலர் வந்து, தங்கள் அரசன் அவரை அழைத்து வரச் சொன்னதாகக் கூறி அழைத்துச் சென்றனர். பெனௌன் என்னும் இடத்தில் தங்கியிருந்த அலீ, பார்க்கை வரவேற்றான்.

7. பார்க்குக்கு மூரமொழி தெரியாது. அதனால் இருவரும் தாராளமாகக் கலந்து பேச முடியவில்லை. பார்க் ஒரு

கிறிஸ்தவர்; ஐரோப்பியர் தன் நாட்டைப் பற்றி உள வறிந்து செல்ல வந்தவராக அலீ அவரைக் கருதினன்; அதனல் அவர் தலையை வெட்டுவதா - கைகளை வெட்டி விடுவதா - கண்களைப் பிடுங்கி விடுவதா என்று யோசித்தான். அப்பொழுது அவனது மனைவி அங்குத் தோன்றினள்; பார்க்கின்மீது இரக்கம் கொண்டாள்; அலீ அவள் விருப்பப்படி அவரைத் துன்புறுத்தாது விட்டான். அவருடைய பொருள்களையும் திருப்பிக் கொடுத்தான்.

8. பார்க் மூரரிடமிருந்து தப்பிப் பல இடங்கட்கும் சென்று இறுதியில் பம்பாரா என்னும் ஊரை அடைந்தார்; அங்கு உணவு கொண்டார். இரண்டு நாட்களுக்குப் பின் அங்கிருந்து செஜோ என்னும் ஊருக்குப் புறப்பட்ட சிலருடன் தாமும் புறப்பட்டார். அவர் செஜோ நகரத்திற்கு ஐந்து கல் தொலைவில் ஒரு பேராற்றைக் கண்டார். "இதுதான் நைஜர் என்னும் பேராறு" என்று அவருடன் சென்றவர் கூறினர். அது கேட்டவுடன் பார்க்கின் முகம் அன்று மலர்ந்த தாமரை என மலர்ச்சியுற்றது. அவர் கண்கள் ஒளிபெற்று விளங்கின. அவர் தம்மை மறந்து பேராற்றினண்டை ஓடினர்; தம் ஆவல் தீர அதன் நீரைத் தம் இரு கரங்களாலும் எடுத்துப் பருகினர்; தம் நோக்கம் வெற்றி பெறச் செய்த இறைவனுக்கு வாழ்த்துக் கூறினர்.

9. பின்னர்ப் பார்க் பல இடங்களைப் பார்த்துக் கொண்டு கி. பி. 1797-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 22-ஆம் நாள் இங்கிலந்து மீண்டார்; ஆப்பிரிக்காக் கழகத் தலைவரைக் கண்டு, தம் பிரயாண விவரங்களை விளக்கமாகக் கூறினர்; பின்னர் அவற்றை விளக்கமாக நூல் வடிவில் வெளியிட்டார்; அந்நூலில் நீக்ரோவருடைய நற்பண்புகள்-மூட நம்பிக்கைகள்-நீக்ரோ அடிமைகளின் துன்ப வாழ்க்கை -மூரர்களின் கொடுமை முதலியவற்றை நன்கு விளக்கியுள்ளார். பார்க் எழுதிய நூலைப் படித்த ஆங்கில வாணிகர், 'நைஜரின் போக்கை அறியவேண்டும். அது கடலொடு கலக்கும் இடத்திலிருந்து நம் வாணிகக் கலங்கள் டிம்பக்டுவுக்குச் சென்று வாணிகம் செய்ய வசதி ஏற்படுத்த வேண்டும்' என்று விரும்பினர். அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றுமாறு அரசினர் மங்கோ பார்க்கை அழைத்தனர். பார்க் இரண்டாம் முறை ஆப்பிரிக்கா செல்ல இசைந்தார்.

10. பார்க் 1805-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் புறப்பட்டார். அரசினர் அவருடன் நாற்பதின்மரை அனுப்பி

னர். ஆயின் உடன் சென்றவர் ஆப்பிரிக்க வெப்பு நோயில் துன்புற்று ஒவ்வொருவராக மாண்டனர்; இறுதியில் பார்க் ஒருவரே துணிச்சலுடன் பல இன்னல்களைப் பொறுத்து நைஜரின் பிறப்பிடத்தை அறிந்தார். சையேனு லியோனும் பிரஞ்சுகினியாவும் கூடும் இடத்தில் ஒரு சிறு ஊற்றுக் கிளம்புகிறது. அது துளிர்த்துக் கொண்டு கீழ்த்திசை நோக்கித் திரும்பிப்பெரிதாகின்றது; பின் திடீரென வடக்கு நோக்கித் திரும்பி அகலப்படுகிறது; பிறகு டிம்பக்டு பக்கம் திரும்பிப் பாய்ந்து கிழக்குப் பக்கம் திரும்புகிறது. டிம்பக்டுவுக்கு அப்பால் பாறைகளாலும் தீவுகளாலும் பல சிறு பிரிவுகளாகச் சிதறி நுரையுடனும் பேரிரைச்சலுடனும் சுழித்து ஓடுகிறது. அவ்விடத்திற்றான் மங்கோ பார்க்குக்கும் மூரர்க்கும் போர் மூண்டது. பார்க் அக்கொடியவரிடம் அகப்படுவதைவிடத் தாம் கண்டறிய வந்த நைஜரிலேயே வீழ்ந்து மடிவது நலம் என்றெண்ணி ஆற்றிற் குதித்து மறைந்தார்: நைஜர் அவ்விடத்திலிருந்து தெற்கே திரும்புகிறது; மறுபடியும் கிழக்கே செல்கிறது; பின்னர்த் தெற்கே சென்று கினிகுடாவில் கலக்கிறது.

11. மங்கோ பார்க் மறைந்த செய்தி ஐந்தாண்டுகட்குப் பின்னரே இங்கிலந்திற்குத் தெரிந்தது. பின்னர் இந்தப் பகுதிகளில் ஆங்கிலேயர் நடமாட்டம் மிகுதிப்பட்டது. நைஜரின் குறுக்கே பாலம் கட்டப்பட்டது. அதில் "மங்கோ பார்க் நினைவாக" என்று தொடங்கி, அவர் திருப்பணி பொறிக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த செல்கர்க் நகரின் சந்தையில் அவரது உருவச்சிலை நாட்டப்பெற்றது.

12. அப்பெரியாரது அரிய உழைப்பின் பயனாக இன்று ஆங்கிலேயர் நைஜர் ஆற்றை நன்கு பயன்படுத்துகிறார்கள். ஆங்கிலக் கப்பல்கள் நைஜர் ஆற்றிற் போய் வருகின்றன. டிம்பக்டுவிலிருந்து சகாரா பாலையைத் தாண்டி ஆல்ஜியர்ஸுக்கு மோட்டார்ப்பாதை அமைந்துள்ளது. ஆங்கிலேயர் அப்பகுதிகளில்குடியேறிச் சிறந்த வாணிகம் செய்கின்றனர்; நாடு பிடித்து ஆப்பிரிக்காவின் பெருவளத்தை நுகர்ந்து வருகின்றனர்; பிறர் வாழ்வின் பொருட்டுத் தம்முயிரை அளித்த பெருவீரரான மங்கோ பார்க்குக்கு மனமார நன்றி செலுத்துகின்றனர்.

அரும்பொருள்

வல்லார் - அறிந்தவர். பொற்கொல்லர் - தட்டார். திருப்பணி - தொண்டு.

பயிற்சி

I. விடை தருக:—

1. ஆப்பிரிக்காக் கழகத் தலைவர் பார்க்கினிடம் கூறியவை யாவை?
2. பார்க் ஆப்பிரிக்காவில் முதலில் தங்கிய இடத்தில் அறிந்துகொண்டன யாவை?
3. பார்க் ஆங்கில மருத்துவரை விட்டுப் புறப்பட்டது முதல் மூரரால் சிறைசெய்யப்பட்டது வரை அவரது பிரயாண விவரங்களைக் குறிக்க.
4. 'மூரரிடம் பார்க்கின் அநுபவம்' என்பது பற்றி அறிந்தன கூறுக.
5. "இதுதான் நைஜர் என்னும் பேராறு" என்றது கேட்ட பார்க் என்ன செய்தார்?
6. மங்கோ பார்க் தமது நூலில் எழுதியன யாவை?
7. அவரது இரண்டாம் செலவின் நோக்கம் யாது?
8. நைஜரின் தோற்றத்தையும் போக்கினையும் கூறுக.
9. ஆங்கிலேயர் பார்க்குக்குச் செய்த மரியாதைகள் யாவை?
10. பார்க்கின் உழைப்பு ஆங்கிலேயர்க்கு எவ்வாறு நன்மை அளித்துள்ளது?

II. பார்க்கின் இளமை - அவரது முதல் ஆப்பிரிக்கப் பிரயாணம் - அவரது இரண்டாம் பிரயாணம் - அவற்றின் பயன்- இக் குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

III. 1. ஆப்பிரிக்காவின் படம் வரைந்து பார்க் சென்ற வழியைக் குறிப்பிடுக.
2. நைஜரின் போக்கினைக் காட்டுக.

11. எனது இன்பச் செலவு

(கங்கைகொண்ட சோழபுரம்)

1. "கி. பி. 900 முதல் கி. பி. 1300 வரை ஆண்ட சோழப் பேரரசர்க்கு முதலில் தஞ்சாவூரும் பிறகு கங்கை கொண்ட சோழபுரமும் கோநகரங்களாக இருந்தன. கி. பி. 1012 முதல் ஏறக்குறைய 1032 வரை இராஜராஜன் மகனுன இராஜேந்திர சோழன் பேரரசனுக இருந்தான். அப் பெருமகன் கங்கைநீரைக் கொணர்ந்து அமைத்த புதிய தலைநகரம் கங்கைகொண்ட சோழபுரம் எனப்பட்டது. அதுவே இராஜேந்திரன் காலமுதல் கி. பி. 1300 வரைச் சோழர் கோநகரமாகப் பெருமை பெற்றிருந்தது. அந்நகரம் இப் பொழுது ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கிறது. வரலாற்றுப் புகழ் பெற்ற அந்த இடத்தை நாம் நாளைக் காண்போம்" என்று எங்கள் தமிழாசிரியர் எங்களிடம் கூறினர்.

2. மறுநாள் நாங்கள் கும்பகோணத்திலிருந்து செல் லும் பஸ்ஸில் ஏறிக் கங்கைகொண்ட சோழபுரத்தை அடைந்தோம். அது திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உடை யார்பாளையம் தாலுக்காவில் இருக்கின்றது. நானும் பிற மாணவரும் கங்கைகொண்ட சோழனைப்பற்றிப் பல செய் திகளைக் கேள்விப்பட்டிருந்தோம். ஆதலின், அப்பெரு மகன் தன் பெயரால் அமைத்த தலை நகரத்தின் ஒரு பகு தியையாவது கண்டு களித்தல் கூடும் என்று கருதினேம். ஆயின், அங்குப் பெரிய சிவன் கோவில் ஒன்றைத் தவிர வேறு கட்டடம் காணப்படவில்லை. கோவிலை அடுத்த பகுதி மண்ணும் மேடும் கலந்து காட்சி அளித்தது. ஒரு காலத்திற் சிறப்புற்றிருந்த அந்நகரம் இப்பொழுது பாழ் பட்ட சிற்றூராக இருப்பதைக் கண்டு நாங்கள் பெரிதும் வருத்தமும் ஏமாற்றமும் அடைந்தோம்.

3. எங்கள் தமிழாசிரியர் எங்களை முதலில் கோவிலுக் குள் அழைத்துச் சென்றார். அக்கோவில் அரண்மனைக்குப் பக்கத்தில் கட்டப்பட்டதாம். ஆயின் அரண்மனை இன்று காணுமாறில்லை. கங்கைகொண்ட சோழேச்சரம் என்ற அக் கோவில் இராஜராஜன் தஞ்சையில் கட்டிய பெரிய கோவிலைப் போன்றது. அதற்கு ஆறு பெரிய கோபுரங் கள் இருக்கின்றன. அதன் மதிற்சுவர் நான்கடி அகலம் உடையது; நீளம் ஏறக்குறைய அறுநூறடி. கோவில் நீள்

சதுரமானது; தரை கருங்கற்கள் பதிக்கப்பெற்றது. மதிற்சுவரின் நான்கு மூலைகள், கோட்டைகளில் உள்ள காவலர் அறைகளைப் போன்ற அமைப்பை உடையவை. திருச்சுற்றில் நாற்புறமும் இரண்டு அடுக்கு மாளிகை இருந்தது. அதன்பெயர் திருச்சுற்று மாளிகை என்பது. இப்பொழுது அம்மாளிகையின் ஒரு பகுதி காணப்படுகிறது.



கங்கைகொண்ட சோழேச்சரம்

4. கோவிலின் நடு இடத்தில் கருவறை, நடு மண்டபம், முன் மண்டபம் என்பவை அமைந்துள்ளன. கருவறையில் மிகப் பெரிய இலிங்கம் இருக்கின்றது. அதன் உயரம் பதின் மூன்று அடி; சுற்றளவு முப்பத்து மூன்று அடி. அதற்கு எதிரில் நடுமண்டபம் இருக்கிறது. அதற்குட் செல்ல இரண்டு பக்கங்களிலும் வாயில்கள் இருக்கின்றன. நடு மண்டபத்தை அடுத்து முன் மண்டபம் இருக்கிறது. அது நீள்சதுரமானது. அதன்மீது மாளிகை ஒன்று காணப்படுகிறது.

5. உட் கோவிலுக்கு எதிரில் ஒரு பெரிய நந்தி சுண்ணம்பாலும் செங்கற்களாலும் அமைக்கப்பட்டது. அதன்

உயரம் ஏறத்தாழப் பதினைந்து அடி இருக்கலாம். அதற்கு வலப்பக்கத்தில் சிங்கமுகக் கிணறு இருக்கின்றது. உட்கார்ந்த நிலையில் உள்ள சிங்கத்தின் வயிறு கிணற்றுக்குச் செல்லும் வழியாகும். நாம் அவ்வழியே கீழ்நோக்கி நாற்பது படிக்கட்டுகளைத் தாண்டினால் கிணற்று நீரைக் காணலாம்.

6. கருவறைமீதுள்ள விமானம் நூறடிச் சதுரமானது; ஒன்பது அடுக்குகளைக் கொண்டது. முதல் இரண்டு அடுக்குகள் ஒன்றன்மேல் ஒன்றாக நிமிர்ந்து நிற்கின்றன. மற்றவை உயரப் போகப் போகச் சிறுத்துச் சாய்வாகச் செல்லுகின்றன. விமானத்தின் நான்கு பக்கங்களிலும் வாயில்களும் மாடங்களும் காண்கின்றன. விமானம் முழுவதும் வேலைப்பாடு கொண்டது. பல அழகிய பதுமைகள் அங்குக் காட்சி அளிக்கின்றன. விமான உச்சியில் ஒரே கல்லால் ஆகிய சிகரம் இருக்கிறது. அதன் மீது கலசம் இருந்ததாம்; இப்பொழுது இல்லை. விமானத்தின் உயரம் ஏறக்குறைய நூற்றெழுபது அடியாகும்.



7. கோவில் வாயில்களில் உள்ள வாயிற்காவலர் உருவச் சிலைகள் பதினான்கு ஆகும். அவை யாவும் ஏழடிக்கு மேற்பட்ட உயரம் உடையவை. ஒவ்வொன்றும் ஒரே கல்லால் செய்யப்பட்டது; மிக அழகிய வேலைப்பாடு கொண்டது.

8. கோவில் முழுவதிலும் உள்ள சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்கவை. அவை இன்று செய்தாற்போலப் புதியனவாகக் காண்கின்றன. கோவில் வெளிச் சுவரில் உள்ள சிற்பங்களில் பார்க்கத்தக்க பேரழகுடையது சண்டீசப் பதம் உணர்த்தும் சிற்பமாகும்; அதுபற்றிய வரலாறு

14784

இதுவாகும்: விசாரசருமர் என்ற பிராமணச் சிறுவர் மாடுகளை மேய்த்து வந்தார். அவர் மணலைச் சிவலிங்கமாகச் செய்து மன ஒருமைப்பாட்டுடன் பூசை செய்து வந்தார். அப்பொழுது பசுக்கள் அந்த இலிங்கத்தின்மீது பாலைச் சொரிந்தன. ஒரு நாள் அவர் தந்தையார் இக்காட்சியைக் கண்டு வெகுண்டு மணல் இலிங்கத்தைத் தம் காலால் உதைத்தார். உடனே விசாரசருமருக்கு அளவு கடந்த கோபம் உண்டாயிற்று. அவர்,இலிங்கத்தை உதைத்த தம் தந்தையார் காலை வெட்டினர். அவரது பக்திச் சிறப்பினைப் பாராட்டிச் சிவபிரான் உமாதேவியாருடன் காட்சியளித்து,அவரைத் தம் காலடியில் உட்காரவைத்தார்; தாம் சூடியிருந்த கொன்றை மாலையை எடுத்து அவர் முடியில் சூட்டினர்; அவரைத் தம் கோவில்கள் அனைத்திற்கும் அதிகாரியாக்கினர். அந்தப் பதவியே 'சண்டேசப்பதம்' என்பது.

9. "இராஜராஜன் இராஜேந்திரன் காலத்தில் கருவூர்த் தேவர் என்ற சைவப் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் தஞ்சைப் பெரிய கோவிற் சிவபிரான்மீது பத்துப் பாக்கள் பாடியுள்ளார். அப்பெரியார் இராஜேந்திரன் கட்டிய கங்கைகொண்ட சோழேச்சரத்தின்மீதும் பத்துப் பாக்கள் பாடியுள்ளார். அப்பாடல்கள் உள்ளத்தை உருக்கத் தக்கவை" என்று கூறி, எங்கள் தமிழாசிரியர் அப்பாக்களைப் பாடிக்காட்டினர். நாங்கள் கேட்டு மகிழ்ந்தோம்.

10. பின்னர் நாங்கள் கோவிலை அடுத்துப் பாழ்பட்டுக்கிடக்கும் இடத்தைப் பார்வையிட்டோம். அது மாளிகை மேடு என்று கூறப்படுகிறது; அஃதாவது அரசனது அரண்மனை இருந்த இடமாம். அவ்விடத்தில் பழைய சுவர்களின் அடிப்படைகள், பழைய மட்பாண்டச் சிதைவுகள், பழைய காலத்துச் செங்கற்கள் முதலியன சிதறிக் கிடக்கின்றன.

11. "இராஜேந்திரன் அமைத்தபெரிய ஏரி சோழகங்கம் எனப்படுவது. அதனைச் சென்று காண்போம், வாருங்கள்" என்று கூறி எங்கள் தமிழாசிரியர் புறப்பட்டார். நாங்கள் அவருடன் அந்த ஏரிக்குச் சென்றோம். அஃது ஊருக்கு

வடக்கே இருக்கின்றது. அஃது இப்பொழுது மணல் நிறைந்த மேடாக இருக்கிறது; இப்பொழுது 'பொன்னேரி' எனப்படுகிறது. "இந்த ஏரியின் நீளம் தெற்கு வடக்கில் பதினன்கு மைல்; அகலம் நான்கு மைல். இதன் கரை மிகவும் உயர்ந்து அகன்றதாக அமைக்கப்பட்டிருந்தது. இதற்குத் தண்ணீர் வந்து சேரக் கொள்ளிடத்திலிருந்தும் வெள்ளாற்றிலிருந்தும் இரண்டு பெரிய கால்வாய்கள் வெட்டப்பட்டன. இஃது இராஜேந்திரன் காலத்தில் கடல் போலக் காட்சி அளித்திருத்தல் வேண்டும். இந்த ஏரிப் பாய்ச்சலால் சுற்றுப்புற ஊர்கள் நல்ல விளைச்சலைப் பெற்றிருத்தல் வேண்டும். இந்திய ஏரிகளில் பெரியதும் சிறந்ததும் போஜபுரத்து ஏரி என்று அரசாங்கத்தார் கருதினர். ஆயின், அவர்கள் இந்த ஏரியைப் பார்த்த பிறகு அந்தக் கருத்தினை மாற்றிக்கொண்டனர். உடைப்பு ஏற்படாதபடி நாற்புறமும் செயற்கைக் கரைகளைப் பலமாக அமைத்த அக்கால அறிஞர் வேலைத்திறம் பாராட்டத்தக்கது. இப்பெரிய ஏரியில் நீரைத் தேக்கிக் காடு நாடாக்கிய இராஜேந்திர சோழனை நாம் வாழ்த்தாமல் இருக்க முடியுமா?" என்று எங்கள் தமிழாசிரியர் கூறினர். நாங்கள் அனைவரும் அவர் கூறிய விவரங்களைக் கேட்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்து, "இராஜேந்திர சோழன் திருப்பெயர் நீடு வாழ்க!" என்று உணர்ச்சி தோன்றக் கூறினேம்.

12. நாங்கள் பிறகு உணவு விடுதியில் உணவுகொண்டு பஸ் ஏறிக் கும்பகோணத்தை அடைந்தோம்; மறுநாள் கட்டுரை நோட்டுப் புத்தகத்தில் 'கங்கைகொண்ட சோழபுரம் பற்றிக் கட்டுரை வரைந்தோம். நாங்கள் இவ்வாறே கும்பகோணத்தை அடுத்துள்ள பல இடங்கட்கும் எங்கள் தமிழாசிரியருடன் சென்று அவ்விடங்களைப் பார்வையிட்டு மீளுதல் வழக்கம். அவற்றைப்பற்றிக் கட்டுரை வரையவும் சொற்பொழிவாற்றவும் பழகிவருகின்றோம். நீங்கள் இவ்வாறு பழகுகின்றீர்களா?

அரும்பொருள்

திருச்சுற்று—பிராகாரம். கருவறை—மூலஸ்தானம். ஒவ்வொரு கோவிலிலும் சண்டேசர்க்குத் திருச்சுற்றில் சிறிய கோவில் அமைந்திருக்கும். கோவில் வரவு செலவுகளைக் கணக்குவைப்பவர் அவர் என்பது கருத்து.

பயிற்சி

I. விடை தருக:—

1. கங்கைகொண்ட சோழபுரம்-பெயர்க்காரணம் யாது?
2. கங்கைகொண்ட சோழபுரம் எங்கு அமைந்துள்ளது?
3. இன்று அங்குக் காணத் தகுவன யாவை?
4. திருச்சுற்று மாளிகை, கோபுரங்கள், வாயிற் காவலர், சிங்கமுகக் கிணறு, நந்தி-குறிப்பு வரைக.
5. கோவில் விமானம் பற்றி யாது அறிவீர்?
6. 'சண்டேசப் பதம்' என்பது யாது? அது கூறப்பெற்ற சந்தர்ப்பம் யாது?
7. 'மாளிகை மேடு' என்பது யாது?
8. கருவூர்த் தேவரைப்பற்றி யாது அறிவீர்?
9. சோழ கங்கம் பற்றித் தமிழாசிரியர் யாது கூறினர்?
10. இராஜேந்திர சோழனைப்பற்றி உங்கள் கருத்து யாது?

II. வாக்கியங்களில் அமைக்க:—

கோநகரம், வரலாற்றுப்புகழ், திருச்சுற்று, நீள்சதுரம், போகப் போக, வேலைப்பாடு.

12. தேனீ வளர்ப்பு

1. ஆண்டில் ஆறு திங்கள் பயிர்வேலையில் ஈடுபட்டு, எஞ்சிய ஆறு திங்கள் வேலையின்றி வாடுகின்ற நம் குடியானவர் கிராமக் கைத்தொழில்கள் சிலவற்றைச் செய்வாராயின், பணப்பஞ்சமின்றி வாழ முடியும். அவர்கள் கோழிப் பண்ணை, பால் பண்ணை, தேனீ வளர்த்துத் தேன் வாணிகம் செய்தல் முதலியவற்றைச் செய்யலாம். அவற்றுள் இங்குத் தேனீ வளர்த்துத் தேன் தொழில் செய்தலை மட்டும் விவரமாகக் காண்போம்.

2. குடியானவர் தேனை எங்ஙனம் சேர்க்கக் கூடும் என்பது உங்கட்கு வியப்பாக இருக்கலாம். இது வியப்புக்குரியதே அன்று. இத்தொழிலிற் பழகிவிடின், பின்னர் இஃது எளிதாகும். நம் நாட்டு வேடரும் இருளரும் தேன் கூடுகளைத் தேடி அலைந்து அவற்றை ஈ, முட்டை, புழு, தேனடை இவற்றுடன் கசக்கிப் பிழிந்து தேனைச் சேர்க்கின்றனர். அங்ஙனம் சேர்க்கப்படும் தேன் உடலுக்குத் தீமையே செய்யும். ஆதலின் நாம் சாத்திரீய முறையில் தேனைச் சேர்க்கவேண்டும். அஃதாவது நாம் பசு, நாய் முதலியவற்றைப் பாதுகாத்து வளர்த்தல்போலத் தேனீக்களையும் அவற்றுக்குரிய வாழிடங்களை அமைத்து அவற்றில் வாழச் செய்யவேண்டும்; ஈ, முட்டை, புழு, தேனடை இவற்றுக்கு யாதொரு தீங்கும் நேராதவாறு தேனைச் சேர்க்கவேண்டும். இத்தொழிலுக்கு முதல் தேவை இல்லை; செலவும் இல்லை. குடியானவர் கவனிப்பே முதலும் செலவுமாகும். வயல்களில் உள்ள மலர்களிலும் தோட்டங்கள், காடுகள் முதலியவற்றில் உள்ள மரம் செடி கொடிகளில் இருக்கும் மலர்களிலும் தேன் நிரம்பி இருக்கும். தேனீக்கள் அத்தேனை எடுத்துவந்து, நாம் அவற்றுக்கென அமைத்துள்ள வீடுகளிற் சேர்க்கும். குறித்த காலத்திற்குப்பின் நாம் அந்தத் தேனை எடுத்துக்கொள்ளலாம்.

3. உலகில் உள்ள தேனீக்கள் நான்கு வகைப்படும். அவை (1) மலைத்தேனீ, (2) அடுக்குத் தேனீ, (3) கொம்புத் தேனீ, (4) கொசுத் தேனீ என்பன.

4. மலைத் தேனீ என்பது தேனீக்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரியது. இஃது இந்தியாவிலும் இலங்கையிலுமே காணப்படுகிறது. இதுபோல மிகுதியான தேனைச் சேர்க்கும் ஈ வேறில்லை. இது ஐந்தடி நீளமும் ஐந்தடி அகலமு

முள்ள பெரிய தேன் கூட்டை அமைக்கும். இது கவிந்த பாறைகளிலும் பெரிய மரக் கிளைகளிலும் நெடுஞ் சுவர்களிலுமே கூடு கட்டும். இத்தேனீயினால் காட்டிலாகா ஆண்டு தோறும் தேனடை விற்றுப் பெரும் பொருள் பெறுகிறது. இம்மலைத் தேனீ விஷக் கொடுக்கு உடையது; மாகாணத்துக்கு மாகாணம் குடிபெயர்ந்துவாழும் தன்மையுடையது. நமது நாட்டில் மிகுதியாகக் காணப்படுவது அடுக்குத் தேனீ ஆகும். இது தன் கூட்டைச் சம தூரத்தில் அடுக்கடுக்காய்க் கட்டுவதனால் 'அடுக்குத் தேனீ' எனப் பெயர்பெற்றது.


பலவகைத் தேனீக்கள்

இஃது இருட்டான மரப் பொந்துகளிலும் பாறை இடுக்குகளிலும் வீட்டுக்கொல்லையில் உள்ள பழைய பெட்டிகளிலும் கூடு கட்டும். இதன் கூட்டிலிருந்து ஓராண்டிற்குப் பத்து அல்லது பன்னிரண்டு இராத்தல் தேன் எடுக்கலாம். இத்தேனீ மலைத் தேனீயைவிடச் சாதுவானது. ஆதலால் இதனைச் செயற்கை முறையில் பெட்டியில் வைத்து வளர்த்தல் எளிதாகும். இப்பொழுது தேனீ வளர்க்கும் தொழிலை மேற்கொண்டிருப்பவர் அனைவரும் இவ்வடுக்குத் தேனீக்களையே வளர்த்து வருகின்றனர்.

5. கொம்புத் தேனீ மேற்சொன்ன இருவகை ஈக்களிலும் உருவத்திற் சிறியது. இதன் கூட்டிலிருந்து இரண்டு அல்லது மூன்று அவுன்ஸுக்குமேல் தேனீ கிடைப்பதரிது. இது வீட்டுக் கூரைகளின் மூலைகளிலும் கட்டடங்களுக்குள்ளும் கூடு கட்டும். கொசுத் தேனீ முன் சொன்ன மூவகையினும்சிறியது. இதுகொசுவைப்போலச் சிறியதாக இருப்பதால் இப்பெயர் பெற்றது. இது முன்னவைபோல மெழுகினால் தேன் கூட்டை அமைப்பதில்லை: மரப் பிசினை எடுத்துக் கூடு கட்டும். இது மரப் பொந்துகளிலும், சுவரின் சந்துகளிலும் தன் கூட்டை அமைக்கும். அப்பிசின் வார்னிஷ்களுக்குப் பயன்படுகிறது. இது சேர்க்கும் தேன் மருந்துகட்குப் பயன்படுகிறது. இந்நால்வகைத் தேனீக்களும் நமது நாட்டில் இருப்பவையே.

6. தேனீ வளர்ப்புத் தொழிலுக்குத் தேவைப்படும் அடுக்குத் தேனீ கூட்டம் கூட்டமாய்ச் சேர்ந்து வாழும்.

நல்ல தேன் கூட்டில் நாற்பது அல்லது ஐம்பதினுயிரம் தேனீக்கள் இருக்கும். இப்பெரிய தேனீக் குடும்பத்தில் மூவகை ஈக்கள் இருக்கின்றன. அவை (1) இராணித் தேனீ, (2) ஆண் தேனீ, (3) உழைப்பாளித் தேனீக்கள் என்பன. நூற்றுக்குத் தொண்ணூறு அல்லது அதனினும் மேலாக உழைப்பாளி ஈக்கள் இருக்கும். அவற்றின் அடிவயிற்றில் நான்கு ஜதை மெழுகுப் பைகள் இருக்கின்றன. அவற்றில் மெழுகுப் பட்டைகள் அடுக்கடுக்காக இருக்கும். அவை தேன் உண்பதால் உண்டாவன. தேன் பெருகு காலத்தில் அவற்றின் அடிவயிற்றிலிருந்துமெழுகு மிகுதியாகத் தோன்றுகிறது. அவ்வாறு தோன்றி வெளி வரும் மெழுகுகளை அவை முதலில் கால்களின் வாயிலாக வாய்க்குக் கொண்டு சென்று, நன்றாக மத்தித்துப் பதமாக்கி உமிழும். பின்னர் அது காற்றினால் இறுகி உறுதிப் படும். அம்மெழுகினைற்றான் உழைப்பாளி ஈக்கள் தேன் கூட்டை அமைக்கின்றன.

7. இராணித் தேனீ இடும் முட்டைகளிலிருந்து வெளிப்படும் புழுக்களுக்கு உணவு கொடுப்பதும் இவற்றின் வேலையே ஆகும். கூட்டின் சூடு குறையுமாயின் கூட்டில்நெருக்கமாக உட்கார்ந்து சூட்டைப் பாதுகாப்பவையும் இவையேயாகும். இவை கூட்டில் சூடு மிகுதிப்படின் அதனைத் தணிக்கத் தம் இறக்கைகளைப் படபடவென்று அசைத்துச் சூட்டைத் தணிக்கும். இவை வேறு தேனீக்கள் தம் கூட்டிற்குள் வராமல் விரட்டும்; பகைப் பூச்சிகளிடமிருந்து கூட்டிற்குத் தீங்கு நேராமற் காக்கும்; உழைப்பாளி ஈக்கள் தேன் கூட்டில் உள்ள அறைகளில் வைக்கப்படும் தேனில் கலந்துள்ள தண்ணீரை ஆவியாக மாற்றிப் பதமுள்ள தேனைதும் அந்த அறைகளை மெழுகினல் மூடிவிடும்; தேன் கூட்டில் அடிக்கடி ஏற்படும் அழுக்குகளையும் இறந்த தேனீக்களையும் அப்புறப்படுத்திவிடும்: தாய்த் தேனீ ஆகிய இராணித் தேனீக்கு அதன் வாழ்நாள் முழுவதும் 'இராயல் ஜெல்லி' என்னும் சிறப்பு உணவைக் கொடுத்துவரும். இவ்வுழைப்பாளி ஈக்கள் தேன், மகரந்தம், தண்ணீர் என்னும் முப்பொருள்களையும் கூட்டில் கொணர்ந்துசேர்க்கும்;. கூட்டின் பக்கங்களையும் வெடிப்புக்களையும் வெளியிலிருந்து கொண்டுவரும் ஒருவகைப் பிசினல் அடைக்கும். சுருங்கக் கூறின் உழைப்பாளித் தேனீக்களே ஆண் தேனீயையும் இராணித் தேனீயையும் காப்பதுடன் தேனையும் சேர்க்கின்றன என்னலாம்.

8. தேன் கூடு அல்லது தேன் அடை மெழுகால் ஆனது. அந்த அடையில் ஆயிரக்கணக்கான ஆறுகோண அறைகள் அடையின் இரு பக்கங்களிலும் இருக்கும். பெரிய அறைகளில் ஆண் தேனீக்கள் இருக்கும். சிறிய அறைகளில் உழைப்பாளி ஈக்கள் இருக்கும். தேனடையில் ஒரு பக்கத்து அறைகளில் தேனீக்கள் தேனையும் மகரந்தப் பொடியையும் சேர்த்துவைக்கும். தேனீக்கள் மலர்களில் உள்ள 'நெக்டார்' என்னும் அமிர்தத்தைத் தம்முடைய நீண்ட உறிஞ்சு குழாய் உறுப்பினுற் பருகுகின்றன. அந்த அமிர்தம் தேனீக்களின் தேன்பையில் தங்கி இரசாயன மாறுபாட்டால் தேனுக மாறுகிறது. தேனீக்கள் அத்தேனை யே அடையில் உள்ள அறைகளில் வைக்கின்றன.

9. நமது தமிழ் நாட்டில் ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரைத் தேன் சேர்ப்பதற்கு ஏற்ற காலமாகும். அப்பருவத்துக்குத் 'தேன் பெருகு காலம்' என்பது பெயர். அப்பருவத் தொடக்கத்தில் இராணித்தேனீ மிகுதியான முட்டைகள் இட்டு உழைப்புத் தேனீக்களைப் பெருக்கும். உழைப்புத்தேனீக்கள் அக்காலத்தில் தேனடையில் மிகுந்த தேன் அறைகளைக் கட்டும்; தேனைக் கொண்டுவந்து சேர்க்கும்.

10. தேனீ வளர்க்கும் பெட்டியில் தேனீக்கள் தாராளமாக வெளி வரவும் உட்செல்லவும் வழியிருக்க வேண்டும். அப்பெட்டி படத்திற்காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும். அதன் நீளம் $9\frac{1}{4}$ அங்குலமும் அகலம் $8\frac{1}{2}$ அங்குலமும் இருத்தல் வேண்டும். அதில், அடிப்பெட்டியில் 6 அங்குல உயரமும் 8 அங்குல அகலமும்உள்ள சட்டங்கள் வைக்கும்படி இடம் இருக்கவேண்டும். மேல்பெட்டியில் $2\frac{1}{2}$ அங்குல உயரமும் 8 அங்குல அகலமும் உள்ள சட்டங்கள் அடங்கும்படி இடம இருத்தல் வேண்டும். ஒரு சட்டத்திற்கும் மற்றொரு சட்டத்திற்கும் இடையில் $\frac{1}{4}$ அங்குலம் இடைவெளி இருத்தல் நல்லது. தேனீக்கள் உள்ளே போய் வர ஒருவிதத் தடையும் உண்டாகாமல் இருக்கவே இவ்விடைவெளிகள் விடப்படல் வேண்டும். பெட்டியின் அடிப் பலகை பெட்டியின் அளவுக்குமேல் முன் பக்கத்தில் 3 அல்லது 4 அங்குலம் நீண்டதாக இருப்பது இன்றியமையாதது. அந்த முன்னிடத்தில் தேனீக்கள் வெளியிலிருந்து வந்து தங்கிப் பெட்டியின் வாயிற்படி வழியே பெட்டிக்குள் வசதியாகநுழையும். இங்ஙனம் சாத்திரீய முறையில் அமைக்

கப்பட்ட பெட்டிகளிற்றான் தேனீக்களை வளர்த்துத் தேன் சேர்க்க வேண்டும்.



தேனீ வளர்க்கும் பெட்டி

11. புதிதாகச் செய்யப்பட்ட பெட்டியில் தேனீக்களைச் சேர்ப்பதெப்படி? தேனீக்கள் பெரும்பாலும் மரப் பொந்துகளிற் கூடுகட்டும். அம்மரப் பொந்திற்குக் கீழ் உள்ள கெட்டியான பகுதியில் சதுரமான துளை ஒன்று செய்து, அவ்வளவுள்ள ஒரு பெட்டியை அத்துளையிற் பொருத்த வேண்டும். அதன் மற்றொரு பக்கத்தை இரும்பு வலையினால் மூடிவிட வேண்டும்; அதற்கு முன் மரப் பொந்தினைக் களிமண்ணால் மூடிவிடவேண்டும். அவ்வாறு மூடப்பட்ட பாகத்தில் புகை வெளிப்படுத்தும் பெட்டி ஒன்றைப் பொருத்த வேண்டும். அப்பெட்டியின் அடியில் கட்டைகளைப் போட்டு எரித்துப் புகையை உண்டாக்கிப் பெட்டியின் பிற்பகுதியில் உள்ள துருத்தியினால் புகையை மரப் பொந்திற்குள் செலுத்த வேண்டும். புகை உள்ளேபோகப் போகத் தேனீக்கள் திக்குமுக்காடி, வெளிவர முயன்று மரத்தில் பொருத்தப்பட்டுள்ள பெட்டியில் வந்து சேரும். நாம் அப்பெட்டியை ஒரு துணியால் மூடி எடுத்துவர வேண்டும். மரப் பொந்திலிருக்கும் தேன் கூட்டை அழிவின்றி ஒரு பாத்திரத்தில் கொண்டுவந்து தேனீ வளர்க்கும் பெட்டியில்உள்ள சட்டத்திற் கட்டிவிட வேண்டும். பின்

னரே நாம் பிடித்துவந்த தேனீக்களை அப்பெட்டிக்குள் விட வேண்டும். இவ்வேற்பாட்டிற்குப் பிறகு தேனீக்கள் வழக்கம்போலத் தம் வேலைகளைப் பெட்டிக்குள் செய்து வரும்.

தேனீச் சட்டம்

12. நாம் அடிக்கடி தேனீப் பெட்டியைச் சோதித்து வர வேண்டும். பெட்டியை அசைத்து மேல் மூடியைத் திறக்க வேண்டும்; ஒவ்வொரு சட்டத்தையும் வரிசையாக எடுத்துப் பரிசோதித்துஅவற்றைப் பெட்டியின் ஓரமாகச் சார்த்திவைப்பதுநல்லது.மேற்பெட்டியையும் அடிப்பெட்டியையும் ஒழுங்காகப் பரிசோதித்து அங்கு இருக்கும் அழுக்குகளை அப்புறப்படுத்தியபின் சட்டங்களை முன் இருந்தபடியே வரிசை தவருமல் பெட்டியில் வைத்து மேல் மூடியை மூடிவிட வேண்டும். சட்டங்களில் தேனடைகள் முழு நிலையை அடைந்துவிட்டன என்பது தெரிந்தவுடன் அவற்றிலுள்ள தேனைஎடுக்க முயற்சி செய்யவேண்டும்; முதலில் தேனடையிலுள்ள அறைகளில் தேனீக்களால் தேன் வைத்து வாயடைக்கப் பட்டிருப்பதை வெந்நீரில் நனைத்த கத்திகொண்டு போக்க வேண்டும்; பின்னர் அத்தேனடையுள்ள சட்டத்தைப் படத்தில் காட்டப்பட்டுள்ள பெரிய பாத்திரத்திற்குள் இருக்கும் இரும்புக்கோலில் அமைக்கப்பட்டுள்ள காற்றாடி போன்ற நான்கு இறக்கைகளில் பொருத்திவிட வேண்டும். இரும்புக்கோலின் தலைப்பகுதியில் பல் சக்கரம் பொருத்தப்பட்டிருக்கும். அது பாத்திரத்தின் பக்கச் சுவரில் பொருத்தப்பட்ட ஒரு கைப்பிடியுடன் தொடர்புடையது. கைப்பிடியைச் சுற்றினல் இரும்புக் கோலும் அதனிற் பொருத்தப்பட்டுள்ள தேனடைச் சட்டங்களும் சுற்றிவரும். அவ்வாறு சுற்றிவருகையில் அடையில் உள்ள தேன் பாத்திரச் சுவர்மீது துளித்துளியாகச் சிதறிப் பாத்திரத்தின் அடியில் தேங்கும்; அடிப்பாகத்தில்

உள்ள குழையைத் திறந்தால் தேன், படத்திற் காட்டியுள்ளவாறு, கண்ணாடிப் புட்டியில் வந்துவிழும். அத்தேன் மாசற்றது; மணமுள்ளது.

தேன் சேர்த்தல்

13. தேனில் 18 பங்கு நீரும் 78 பங்கு கார்போஹைட்ரேட்டும் 0·2 பங்கு உலோகங்களும் 4 பங்கு இன்னதென்று உறுதிப்படுத்த முடியாத பொருள்களும் மகரந்தம், பிசின், ஆவியாக மாறக்கூடிய எண்ணெய்கள் முதலியனவும் இருக்கின்றன என்று அறிஞர் கண்டுபிடித்துள்ளனர்; தேனில் பல வகைச் சர்க்கரைகள் கலந்துள்ளன; ஆயினும் அவை கெடுதியற்றவை; மனித உணவுக்கு ஏற்றவை; முன்னரே பக்குவப் படுத்தப்பட்ட உணவாக இருத்தலின் பிற உணவுப் பொருள்களைவிட விரைவில் இரத்தத்துடன் கலந்து உடம்புக்கு வன்மையைத் தருகின்றன. தேன் சிறந்த உணவுச் சத்துள்ள பொருளாகும்.

பயிற்சி

I. விடை கூறுக:—

1. கிராமக் கைத்தொழில்கள் எவை?
2. வேடர் முதலியோர் எவ்வாறு தேனைச் சேர்க்கின்றனர்?
3. தேனீக்கள் எத்தனை வகைப்படும்?
4. ஒவ்வொருவகைத் தேனீயைப் பற்றியும் யாது அறிவீர்?

5. ஒரு தேன் கூட்டில் உள்ள தேனீக்கள் எத்தனை வகைப்படும்?
6. உழைப்பாளித் தேனீக்கள் செய்யும் வேலைகள் எவை?
7. தேன் அடையைப் பற்றி விளக்கம் தருக.
8. தேன்பெருகு காலம் என்பது எது?
9. தேனீ வளர்க்கும் பெட்டிகள் எவ்வாறு இருத்தல் வேண்டும்?
10. புதிதாகச் செய்யப்பட்ட பெட்டியில் தேனீக்களைச் சேர்ப்பது எப்படி?
11. நாம் பெட்டியை அடிக்கடி எவ்வாறு சோதிக்க வேண்டும்?
12. சட்டங்களில் உள்ள அடைகளிலிருந்து தேனை எடுப்பது எப்படி?
13. தேனில் உள்ள பொருள்கள் யாவை?
14. தேன் எவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது?

13. கலிங்கப் போர்

1. வரலாற்றுப் புகழ்பெற்ற இராஜேந்திர சோழனுக்குப் பிறகு கி. பி. 1070 வரை அவனுடைய மக்கள் மூவர் பேரரசராக இருந்து சோழப் பெருநாட்டை ஆண்டனர். அவர்கட்குப் பிறகு அவர்கள் உடன்பிறந்தாள் மகனான முதற்குலோத்துங்கன் சோழ அரியணை ஏறினன். அவன் கி. பி. 1070 முதல் 1120 வரை பேரரசனாக இருந்தான். அவன் கீழைச்சாளுக்கிய இராஜராஜனுக்கு மகன்; ஆதலின் அந்நாடும் அவனுக்கு உட்பட்டுக் கோதாவிரி யாறு வரை அவனது செல்வாக்குப் பரவியிருந்தது. அதற்கு அப்பால் இருந்த கலிங்கநாட்டு மன்னனும் சோழப் பேரரசற்குத் திறை கட்டிவந்தான்.

2. முதற்குலோத்துங்கன் சிறந்த அரசியல் அறிஞன். ஆதலின் தன் பெருநாட்டை மிகுந்த பாதுகாப்புடன் ஆண்டுவந்தான்; அங்கங்கு நிலைப்படைகளை வைத்து, வென்ற நாடுகளில் கலகம் ஏற்படாதவாறு செய்தான்; உள் நாட்டு வாணிகத்தையும் அயல் நாட்டு வாணிகத்தையும் பெருக்கினன்; நிலங்களை அளப்பித்தான்; சுங்கத்தைத் தவிர்த்துச் 'சுங்கம் தவிர்த்த சோழன்' என்று குடிகளாற் பாராட்டப்பெற்றான். குலோத்துங்கன் சிறந்த சிவபக்தன். அவன் தில்லைக் கூத்தப்பிரானைத் தன் குல தெய்வமாகக் கொண்டு வழிபட்டுவந்தவன்.

3. குலோத்துங்கனது சோழப் பெருநாட்டின் தலைநகரம் கங்கைகொண்ட சோழபுரம்; பெருநாட்டின் வடபகுதிக்குக் காஞ்சிமாநகரம் தலைநகரமாக இருந்தது. ஒரு முறை முதற்குலோத்துங்கன் காஞ்சியில் தங்கியிருந்தான். ஒரு நாள் அவன் பேரவையில் இருந்தபொழுது, சிற்றரசர் பலர் வந்து அவனுக்கு ஆண்டுதோறும் இறுக்கவேண்டிய திறைப்பொருள்களைக் கொடுத்துப் பணிந்து சென்றனர். அப்பொழுது மன்னர் மன்னனான குலோத்துங்கன், "நமக்கு இன்னும் திறை செலுத்த வேண்டியவர் உளரோ?" என்று வினவ, உடனிருந்த அரசாங்கக் கணக்கர், "வடக

லிங்க வேந்தரான அனந்தபன்ம சோடகங்கன் என்பவர் சில ஆண்டுகளாகத் திறை செலுத்திலர்" என்றனர். அது கேட்ட சோழர் பெருமான் வெகுண்டு, தன் தானைத் தலைவனை நோக்கி, "உடனே அந்நாடு சென்று, அதனைக் கைப்பற்றி நமது ஆணையை மறுத்துத் தருக்கியிருக்கும் சோடகங்கனைச் சிறைசெய்து வருக!" என்று கட்டளையிட்டான்.

4. அவ்வளவில் சோழப் பெரும்படைத் தலைவனும் வண்டை நகர் வேந்தனுமான கருணாகரத்தொண்டைமான் இரை வேட்ட பெரும்புலிபோலப் போருக்குப் புறப்பட்டான். நால்வகைப் படைகளும் அவனைப் பின்தொடர்ந்தன. "சோழர்பெருமான் வெற்றி பெறுவானாக" என்று வாழ்த்திக்கொண்டே படைகள் வடகலிங்கம் நோக்கிச் சென்றன; வழியில் [1] பாலாறு, [2] குசைத்தலை, பொன்முகரி, கொல்லியாறு, வடபெண்ணை, மண்ணாறு, குன்றியாறு, கிருஷ்ணை, கோதாவிரி, பம்பையாறு, கோதமை முதலிய ஆறுகளைக் கடந்து, கலிங்க நாட்டிற் புகுந்தன; அந்நாட்டிற் பல ஊர்கள் தாக்கப்பட்டன; சூறையாடப்பட்டன. குடிகள் கருடனைக் கண்ட நாகம்போல நடுநடுங்கி மெய்விதிர்த்து அலறி அரசன் அவைக்கு ஓடிக் கண்ணீரும் கம்பலையுமாக நின்று, தமது துன்ப நிலையை விளக்கினர்.

5. சோடகங்கன் அது கேட்டுக் கண்கள் சிவக்கப் பெற்றான்; பற்களை நறநறவென்று கடித்து, மீசை துடிக்கக் குதித்தெழுந்து, "நன்று! நன்று! சோழன் வரவில்லை; அவன் படைமட்டும் வந்துள்ளது. நீங்கள் கவலைப்பட வேண்டா; நான் விரைவில் அப்படையை விரட்டியடிப்பேன். சோழன் எனது வாள்வலியும் தோள்வலியும் கவனித்திலன் போலும்! கலிங்கநாடு கானரணும் கடலரணும் மலையரணும் உடையது என்பதையும் மறந்தனன். சிங்கத்தை அதன் குகையிலேயே எதிர்க்க வந்த பித்தன்போலக் கருணாகரத் தொண்டைமான் என்னை எனது நாட்டிலேயே எதிர்க்க வந்துள்ளான்! அடடா! அவனது அறி

---

[1] பாலாறு குலோத்துங்கன் காலத்தில் காஞ்சிக்கு வடக்கே ஓடியது; பிறகு உண்டான பெருவெள்ளத்தால் தெற்கே ஓடலாயிற்று என்பதறிக.

[2] குசைத்தலை—இது வட ஆர்க்காட்டுக்காவேரிப்பாக்கத்தில் தோன்றிச் செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள திருவள்ளூர், பொன்னேரித் தாலூக்காக்களில் பாய்ந்து வங்கக் கடலிற் கலக்கிறது.

யாமை இருந்தவாறு என்னே! கேவலம் இப்படையா என்னை வெல்ல வல்லது?" என்று பலப்பல பேசி நகைத்தான்.

6. அப்பொழுது அரசன் அருகில் நின்றிருந்த எங்கராயன் என்ற அமைச்சன் அவனைப்பணிந்து, "பெருமானே! வருகின்ற சோழர் படை மிக்க வன்மை வாய்ந்தது. அப்படையின் திறனையும் வலிமையையும் நீர் கண்டதும் கேட்டதும் இல்லையா? பாண்டியர் ஐவரும் அவருடைய படைகளும் இப்படையாற் பட்டபாடு நீர் அறியீர் போலும்! கடற்கரை நகரமான விழிஞத்தை அழித்ததும் மேற்கடலை அடுத்த காந்தளூர்ச்சாலை என்னும் சேரர் துறைமுக நகரத்தில் இருந்த கப்பற்படைகளை அழித்ததும் இப்படை தான். நவிலை என்னும் இடத்தில் ஆயிரக்கணக்கான யானைகளைக் கைக்கொண்ட படை இதுவேயாகும். வீர வாழ்க்கையிற் சிறந்த குந்தளப்படையே இப்படைக்கு எதிர் நிற்கமாட்டாது பன்முறை நிலை தளர்ந்தது எனின், இதனை நீர் எதிர்க்க நினைப்பது தகுதியாகுமா? எதனையும் யோசித்துச் செய்யும்," என்று கூறினன்.

7. கலிங்க மன்னன் எங்கராயன் கூறியவற்றைக் கேட்டு மனம் மாறிலன். அவன் தன் படைகளை அணி வகுத்தான்; சோழப் படையை எதிர்க்குமாறு கட்டளையிட்டான். கலிங்கப் படை கலித்தெழுந்து சோழப் படையை எதிர்க்கத் தொடங்கியது. வீரசிங்கனுகிய கருணகரத் தொண்டைமான் யானைக் கூட்டத்துள் சிங்கம் பாய்வதையொப்பப் பகைவர் கூட்டத்துட் பாய்ந்து தன் வாள்வீரம் காட்டலானன். சோழவீரர் பல போர்களைக் கண்டு பண்பட்டவராதலின், கலிங்கப் படையை நாற்புறமும் வளைத்துக் கொண்டு, படைவேலி அமைத்து, பகைவரைத் தாக்கி அழிக்கலாயினர். எதிர்பாராத முறையில் அகப்பட்டுக் கொண்ட கலிங்கப் படைக்கு இறுதிவரைப் போரிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

8. கலிங்கர் யானைப்படை மிக்கவர். ஆதலின் சோழப் படையினர் அவ் யானைகளைக் குறி வைத்தனர்; நூற்றுக் கணக்கான யானைகள் கரங்களை இழந்தன. பல சிரங்

களை இழந்தன; சில கால்கள் அறுபட்டன; வால்கள் அறுபட்டன சில. அதனால் அவை குருதிப் பெருக்கெடுத்துப் போர்க்களத்தில் விழுந்து புரண்டன. குதிரைகள்கால்களும் தலைகளும் துண்டிக்கப்பட்டுக் கீழே விழுந்து துடித்தன. எங்கும் குருதி வெள்ளம் பரந்து ஆறாகப் பெருகி ஓடிற்று. கலிங்கவீரர் பட்ட பாட்டை என்னென்று இயம்புவது! போர்வீரர் பலர் சோழ வீரர் கணைகளுக்கு இலக்காகி மாண்டனர்; எஞ்சிய சிலர் எதிர்த்து நிற்கும் துணிவிழந்து தத்தம் படைக்கலங்களையும் ஊர்திகளையும் கொடிகளையும் அப்பொருகளத்தே போகட்டுத் தப்பிப் பிழைத்து ஓடுவாராயினர். இங்ஙனம் தன் படை உருக் குலைந்ததைத் கண்ட சோடகங்கன் வேறு வழியின்றிச் சிலருடன் தப்பியோடி ஒரு மலை முழைஞ்சில் ஒளிந்து கொண்டான். ஆதலின், கலிங்கநாடு கருணாகரத் தொண்டைமான் வசமாயிற்று.

9. கருணாகரத் தொண்டைமான் ஏவற்படி சோழ வீரர் சோடகங்கனைப் பிடிக்கக் கலிங்க நாடு முழுவதிலும் தேடி இறுதியில் மலைக்குகை ஒன்றில் மறைந்திருந்த சோடகங்கனைச் சிறைப்படுத்திக் கொணர்ந்தனர். இம் முயற்சியில் அலைந்த சோழ வீரர்முன் எதிர்ப்பட்ட கலிங்க வீரர் சிலர் அஞ்சி நடுங்கி வேறு செயலின்றி அவர்களிடம் சரண் புகுந்து பிழைத்தனர். சிலர் தங்களைப் பிறர் இன்னவர் என்று அறியக் கூடாதபடி, சமணத்துறவிகள், பௌத்த முனிவர்கள், பாணர் முதலியோரைப்போல வேடமாறித் தப்பிப் பிழைத்தனர்.

10. சோழப் படைத் தலைவனை கருணாகரத்தொண்டைமான் போரில் கைப்பற்றிய பலவகைக் கருவிகள், அரண்மனையில் கிடைத்த நிதிக் குவியல்கள், ஆயிரக் கணக்கான கரிகள், பரிகள் முதலியவற்றுடன் சிறைப்பட்ட சோடகங்கனையும் கைக்கொண்டு தன் நாடு மீண்டான்; அரியணை மீது வீற்றிருந்த முதற் குலோத்துங்கனைப் பணிந்து, தான் கொணர்ந்தவற்றை அவன் முன்னிலையில் வைத்து, சோடகங்கனை நிறுத்தினான். சோழப் பேரரசன் தன் சேனைத் தலைவனைப் பலவாறு பாராட்டி அவனுக்குப் பரிசுகளும் பட்டங்களும் வழங்கினான்; ஒவ்வொரு சோழ வீரனையும் நேரிற் கண்டு பாராட்டுக் கூறினான்; அவரவர் தகுதிக்கு ஏற்பப் பரிசும் பட்டமும் வழங்கினான். பின்னர்ப் பேரரசன் சோடகங்கனை நன்மு[illegible]யில் நடத்தினான்; அவ

னுக்கு அறிவுரை கூறித் தனக்கு அடங்கியிருக்குமாறு செய்து அவனைக் கலிங்க நாட்டுக்கு அனுப்பினான்.

11. இக்கலிங்கப் போரைச் சிறப்பித்துக் குலோத்துங்கனது அவைப் புலவரான ஜயங்கொண்டார் என்பவர் 'கலிங்கத்துப் பரணி' என்னும் நூலாகப் பாடியுள்ளார். அந்நூலிலிருந்து சோழ அரசர் பரம்பரை, குலோத்துங்கனுக்கு முற்பட்ட சோழ அரசர் போர்ச் செயல்கள், அரசியல், அக்கால வீரர் இயல்புகள், மக்கள் நாகரிகம், மாதருடைய ஆடை அணி வகைகள் முதலியவற்றை நன்கறியலாம். அந்நூலின் தமிழ் நடை எளிமையுடையது. அது கி. பி. 11-ஆம் நூற்றாண்டிற் செய்யப்பட்டது. அந்நூலை நீங்கள் பெரியவரான பிறகு படித்து இன்புறுக.

அரும்பொருள்

மக்கள் மூவர் - இராஜாதிராஜன், இராஜேந்திர சோழதேவன், வீர ராஜேந்திரன். கீழைச் சாளுக்கியநாடு - கோதாவிரி, கிருஷ்ணையாறுகட்கு இடையில் கீழ்க் கரையோரமுள்ள நிலப்பகுதி. நீலப்படை - நீலமாகவுள்ள படை. இறுக்க - செலுத்த. திறை - கப்பம். வண்டைநகர் - சோழநாட்டில் உள்ள ஊர். வேட்ட - விரும்பிய. நறநற - இரட்டைக்கிளவி, பிரிக்க முடியாத இரட்டைச்சொல். அரண் - பாதுகாப்பு. குந்தளநாடு - கருநாடகம். ஓராளாய் - தனியாளாய். நன்மதி - அறிவுரை. பாணர் - பாடுபவர். கூத்தப்பிரான் - நடராசப் பெருமான். போகட்டு - போட்டுவிடு. இலக்கு - குறி. முழை - குகை.

பயிற்சி

I. விடை தருக:—

1. குலோத்துங்கன் நாடாண்ட திறனைக்கூறுக.
2. அவன் காஞ்சியில் தன் சேனைத் தலைவனிடம் யாது கூறினான்?
3. கருணாகரத் தொண்டைமான் யாவன்?
4. சோழப்படை கடந்து சென்ற ஆறுகள் எவை?
5. சோழப்படை வந்ததைக் கேட்ட சோடகங்கன் சினந்து கூறியன யாவை?
6. எங்கராயன் சோழப்படையைப் பற்றி யாது கூறினான்?
7. யானைக் கூட்டத்துள் சிங்கம் பாய்வதை யொப்ப—இவ்வுவமை எதனை விளக்க வந்தது?
8. உயிர் தப்பிய கலிங்கவீரர் என்னென்ன வகையில் தப்பியோடினர்?
9. சோழப்படை கலிங்கநாட்டிற் கைக்கொண்டவை யாவை?
10. கலிங்கப்போர் நிகழ்ச்சி கூறப்பட்டுள்ள நூல் யாது? அதனில் உள்ள பிற செய்திகள் யாவை?

II. கலிங்கப் போருக்குக் காரணம் - படையெடுப்பு - போர் முடிவு: இக்குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

III. 1. துறவு, அரண், பற்பலவாறு, பன்முறை, போகட்டு, இகைப்புற்று - இவற்றைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.
2. திரை - திறை, கரை - கறை, பரந்து - பறந்து: பொருள் கூறுக.

14. உரையாடல்

(தளவாய் அரியநாதர்)

[தளவாய் அரியநாத முதலியார் காஞ்சீபுரத்தை அடுத்த மெய்ப் பேடு என்னும் சிற்றூரினர். அவர் எளிய குடும்பத்திற் பிறந்த வர்; இளமையிற் சிலம்பம், மற்போர் முதலியவற்றிற் பயிற்சி பெற்றூர். ஒரு நாள் அவரது சிலம்ப விளையாட்டைக் கவனித்த சோதிடர் ஒருவர் அவர் அரசபோகத்தை அடைவார் என்று சோதிடம் கூறினர்; அரியநாதர் அவ்வுயர் நிலையில் இருக்கும் பொழுது தாமோ தம் மரபினரோ வரின் அவர்கட்குத் தமது செல் வத்திற் காற்பகுதியை உதவுமாறு வாக்குறுதி பெற்றனர். சோ திடர் கூறியவாறே அரியநாதர் விஜய நகரத்திற்குச் சென்று, படிப்படியாக உயர்பதவிகளை ஏற்றுத் தளவாய் அரியநாதர் எனப் பெயர் பெற்றூர்; பின்னர் மதுரையில் நாயக்க அரசை ஏற்படுத்தி ஞர். அவர் மதுரையில் இருந்தபொழுது சோதிடர் மைந்தர் வந்து அவர் இளமையில் சோதிடருக்கு எழுதித் தந்த ஓலையைக் காட்டி ஞர். தளவாய் தாம் வாக்களித்தபடி பொருள் உதவி செய்ய முன் வந்தபோது, மகனூர் அதனை ஏற்காது மிகச் சிறிதளவே பொருள் பெற்று, அவரது பெருந்தன்மையைப் பாராட்டிச்சென்றூர். மெய்ப் பேட்டில் சிறுவராகிய அரியநாதர்க்கும் சோதிடர்க்கும் நடந்த உரையாடலையும், மதுரையில் தளவாய் அரியநாதர்க்கும் சோதிடர் பிள்ளைக்கும் நடந்த உரையாடலையும் இங்குக் காணலாம்:]

I

அரியநாதரும் சோதிடரும்

[மெய்ப்பேட்டு இளைஞர் பதின்மர் மற்போர், சிலம்பம் முத லிய பயிற்சிகளைச் செய்துகொண்டிருந்தனர். அரியநாதர் அப் பதின்மருட் சிறந்து விளங்கினர். பிள்ளைகள் விளையாட்டைப் பிராமண சோதிடர் ஒருவர் கூர்ந்து கவனித்தார். அவர் கருத்து அரியநாதர்மீது பதிந்தது.]

சோதிடர்:—(அரியநாதரைப் பார்த்து) தம்பீ, இங்கு வா.

அரியநாதர்:—(அருகில் வந்து) ஐயா, தாங்கள் ஏன் என்னை அழைத்தீர்கள்?

சோதிடர்:—தம்பீ, நான் இதுவரைச் சிலம்பத்தில் உன் கை வண்ணம் கண்டேன்; மகிழ்ந்தேன்; இப்பொழுது உனது கைரேகை வண்ணத்தைக் காண விரும்பு கிறேன் காட்டு.

அரியநாதர்:—(வெட்கத்துடன்) பெரியவரே. தாங்கள் கேட் பதால் என் கையைக் காட்டுகிறேன், பாருங்கள்.

சோதிடர்:—(சோதிடர் அரியநாதர் கையை உற்று நோக்கினர். அவரது முகத் தோற்றம் நொடிக்கு நொடி மாறுபட்டது. அரியநாதரும் பிற பிள்ளைகளும் சோதிடர் முகத்தையே நோக்கி நின்றனர்). அப்பனே, நீ நல்ல பேறு பெற்றவன். உனக்குச் சிறந்த அரசயோகம் இருக்கின்றது. நீ அரசரால் நன்கு மதிக்கப் பெறுவாய்; குடிமக்களால் போற்றப் பெறுவாய். அரசரை ஆக்கும் சக்தி உனக்கு உண்டாகும். உன்னுல் இந்நாடு சிறப்புறும். உனது பெயரும் புகழும் இந்நாட்டில் என்றும் நிலைபெறும். நீ இச்சிற்றூரில் இருத்தலாகாது. நீ உடனே விஜய நகரம் செல்; அங்கு அரச வூழியத்திற் பங்குகொள்; படிப்படியாக உயர்வைப் பெறுவாய். நீ நன்னிலையில் இருக்கும் பொழுது நான் அல்லது என் மக்களில் ஒருவர் உன்னிடம் வந்து, நான் இப்பொழுது சொன்னதை நினைவூட்டின், உனது செல்வத்தில் நான்கில் ஒரு பகுதியேனும் கொடுப்பாயா ?

அரியநாதர்:—ஐயனே, தாங்கள் சொல்வதுபோல நடப்பின் தங்களை ஒருபோதும் மறவேன். நான் இப்பொழுது ஏழை. தங்களுக்கு..........

சோதிடர்:—அப்பனே, நீ இப்பொழுது ஏழை என்பதை நான் நன்கு அறிவேன். நீ இப்பொழுது எனக்கு ஒன்றும் தரவேண்டுவதில்லை. நீ நன்னிலையில் இருக்கும்பொழுது கவனித்தாற்போதும். நீ அப்பொழுது என்னை நினைப்பாயா ?

அரியநாதர்:— பெரியீர், தாங்கள் ஐயப்படுதல் முறையானதே. 'செல்வம் கைவரப்பெறின், அருள் உள்ளம் படைத்த பெரியவரும் மனம் மாறுபடுவர்' என்று பெரியோர் கூறியுள்ளனர். அஃது ஓரளவு உண்மையே. ஆயினும் எல்லோரும் அவ்வாறு நடந்து கொள்ளார் அல்லவா ? தங்கள் ஆசியும் என் நல்வினைப் பயனும் சேர்ந்து எனது நிலையைத் தாங்கள் கூறியதுபோல உயர்த்துமாயின், என் செல்வத்திற்

காற் பகுதியைத் தங்கட்குக் கொடுத்தல் உறுதி. ஐயம் வேண்டா.

சோதிடர்:— (ஓர் ஓலையும் எழுத்தாணியும் அரியநாதரிடம் தந்து) தம்பீ, நீ சொன்னதை இந்த ஓலையில் வரைந்து கொடு.

அரியநாதர்:—(வரைந்து கொடுத்தபின்) ஐயா, உங்கள் ஊர் பெயர் ஒன்றும் தெரிவிக்கவில்லையே ?"

சோதிடர்:— அவை உனக்குத் தேவை இல்லை.

ஓர் இளைஞன்:— குறி பொய்க்குமாயின் தம்மை ஏளனம் செய்வர் என்னும் அச்சத்தால் சோதிடர் தமது முகவரியைக் கூறவில்லை.

(எல்லோரும் நகைத்தனர்.)

சோதிடர்:— உண்மை பிறகு தெரியும்.

II

அரியநாதரும் சோதிடர் மைந்தரும்

[ஒரு நாள் மதுரையில் விசுவநாத நாயக்கரது அரச அவையில் தளவாய் அரியநாதர் வீற்றிருந்தார், அப்பொழுது அரண்மனை வாயிற் காவலன் அவரைக் காணப் பிராமணர் ஒருவர் வந்திருப்பதாகக் கூற, தளவாய் "உடனே வரச்சொல்" என்றார். பிராமணர் அவையை அடைந்தார்.]

பிராமணர்:— (அரியநாதரைப் பார்த்து) ஐயா, தளவாய் அரியநாத முதலியார் அவர்கள் தாங்கள்தாமோ ?

அரியநாதர்:— ஆம், வாருங்கள். தாங்கள் என்னைத் தேடியோ வந்தீர்கள் ?

பிராமணர்:— ஆம்; நான் மெய்ப்பேட்டிலிருந்து வந்தேன்.

அரியநாதர்.— (வியப்புடன்) மெய்ப்பேட்டிலிருந்தா வந்தீர்கள் ? மிக்க மகிழ்ச்சி. அதுதான் யான் பிறந்த ஊர். அங்கு எல்லோரும் நலத்துடன் இருக்கின்றனரா ? ஊர் நல்ல நிலையில் இருக்கின்றதா ?

பிராமணர்:— எல்லோரும் நலமே. ஊர் நல்ல நிலையிற்றான் இருக்கின்றது. தாங்கள் பிறந்த இடம் வேறு எப்படி இருக்கும் ? ஊரார் தங்களைப்பற்றியே எப்பொழுதும் பாராட்டிப் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

அரியநாதர்:— எல்லாம் ஏகம்பன் திருவருள். அவன் அருள் இராவிடில் இந்த ஏழைக்குப் பெருமை ஏது? ஐயா, தாங்கள் யார்? என்னிடம் வந்த காரணம் யாது?

பிராமணர்: முதலியார் அவர்களே, நான் மெய்ப்பேட்டைச் சேர்ந்தவன்: சோதிடர் மகன். என் இளமையில் என் தந்தையார் காலமானுர். ஆதலால் காப்பவர் இன்றி நான் காசி யாத்திரை சென்றேன்: அங்குப் பெரியவர் களைச் சரணடைந்து வேத ஆகமங்களைப் பல ஆண்டு கள் படித்தேன்; காசியிலிருந்து சில மாதங்கட்கு முன்னரே மெய்ப்பேடு மீண்டேன்: என் வீட்டிலிருந்த பழைய ஏடுகளைப் புரட்டிக்கொண்டிருந்தபோது என் தந்தையார் கைபபட எழுதிய ஓலை நறுக்கு ஒன்றும் வேருேர் ஓலை நறுக்கும் இருக்கக் கண்டேன். அந்த ஓலை நறுக்கு இதுதான்: இது தாங்கள் எழுதியது தானு?

அரியநாதர்:— (ஓலையைப் படித்தவுடன்) ஆ! இஃது அந்நாள் கொடுத்த ஓலை ஐயரே, இது நான்எழுதிக் கொடுத்த ஓலை தான்; சிறிதும் ஐயமில்லை. இதனிற் கண்டபடி நான் எனது செல்வத்திற் காற் பகுதியை இப்பொழுதே உங்கட்குத் தருகிறேன். பெற்றுக்கொள்க.

பிராமணர்:— என்ன! இப்பொழுதே கொடுக்கிறீர்களா? முதலியார் அவர்களே! தாங்கள் வாக்குறுதி காத்த வள்ளலாவீர்கள். நான் வேதம் ஓதும் பிராமணன். எனக்குத் தங்கள் செல்வத்திற் காற் பகுதி எதற்கு? பிறவிப் பெரும் பயன் அடைவதே எனது நோக்கம்.

அரியநாதர்:— ஐயரே, நீங்கள் உங்கள் பரந்த கல்விக்கும் நிறைந்த ஒழுக்கத்திற்கும் ஏற்பப் பேசியது சரியே. ஆயினும் தங்கட்கு ஏதேனும் கொடுத்தாற்ருன் என் மனம் அமைதியுறும். தங்கள் விருப்பத்தை உரைத்தருள்க.

பிராமணர்:— ஒழுக்கமுடைய பெரியீர், நீங்கள் வற்புறுத்துவதால் தெரிவிக்கிறேன். காஞ்சிபுரத்தில் வாழ ஒரு வீடு வேண்டும்; குடும்பம் நடத்துவதற்கு ஏற்ற நிலங்கள் வேண்டும். ஒரு தோட்டம் வேண்டும். பசு ஒன்று

வேண்டும், நான் இவற்றை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன்:

அரியநாதர்:— தாங்கள் விரும்பியவற்றைவிட மிகுதியாகத் தருவேன்; பெற்று இன்புறுக,

பிராமணர்:— வள்ளலே, சொன்ன சொல் தவருத செம்மலே, தங்களால் மெய்ப்பேடும் வேளாளர் மரபும் விழுப்பம் பெற்றன. எனது வாழ்க்கை நலம் பெற்றது; என் பின் வரும் மரபினரும் தங்களை எந்நாளும் வாழ்த்துவர், தங்கள் மரபு என்றும் நின்று நிலவுக! 'தளவாய் மரபு' தமிழகத்தில் வாழ்க! உத்தமரே, நான் விடைபெறுகிறேன்.

அரும்பொருள்

கைவண்ணம் - கைத்திறமை. பேறு . பாக்கியம். முகவரி - விலாசம். தளவாய் - படைத்தலைவர், ஏகம்பன் - ஏகாம்பரநாதன், காஞ்சியில் கோவில் கொண்டுள்ள சிவபெருமான் திருப்பெயர்; 'ஒற்றை மாமரத்தடியில் இருப்பவன்' என்பது பொருள். சரண் - அடைக்கலம். சான்ருேர் - கல்வி, கேள்வி, ஒழுக்கங்கள் நிறைந்தவர்.

பயிற்சி

I. விடை தருக:—

1. அரியநாதரிடம் சோதிடர் கூறியது யாது?
2. சோதிடர் அரியநாதரிடம் பரிசிலாக யாது விரும்பினுர்?
3. அரியநாதர் சொன்னபடி காற்பகுதியைத் தர முன்வந்தும் சோதிடர் மகனுர் அதனை ஏற்கவில்லை—ஏன்?
4. சோதிடர் யாதுகூறித் தளவாயை வாழ்த்தினுர்?

II. 1. 'சோதிடரும் அரியநாதரும்' என்னும் தலைப்பில் உள்ள செய்திகளைச் சோதிடரே கூறுவதுபோல வரைக.

2. 'சோதிடரும் அரியநாதரும்' என்னும் தலைப்பில் உள்ள செய்திகளை அரியநாதர் சொல்வது போலச் சொல்லுக.
3. 'அரியநாதரும் சோதிடர் மகனுரும்' என்னும் தலைப்பில் உள்ள செய்திகளைச் சோதிடர் மகனுர் கூறுவது போலக் கூறுக.
4. அரியநாதர் வரலாற்றைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

III. வாக்கியங்களில் அமைக்க:—

திருவருள், கைவண்ணம், உரையாடல், ஐயப்படல், போக பாக்கியங்கள், செம்மல்.

15. இரட்டைப் புலவர்

1. "செவிலித்தாய் என்ன ஓம்பும் தீம்புனற் கன்னி நாடு" என்று புலவர்களாற் பாராட்டப் பெற்ற வற்றாத வளமுடைய சோழ நாட்டில் ஆமிலந்துறை என்பதோர் பழம் பதி உண்டு. அதனில் இற்றைக்குச் சற்றேறக்குறைய நானூறு ஆண்டுகட்கு முன் செங்குந்தர் மரபில் முதுசூரியர், இளஞ்சூரியர் என்னும் பெயர் கொண்ட இருவர் தோன்றினர். அவருள் முதுசூரியர் முடவர்; இளஞ்சூரியர் குருடர். இவ்வாறு அவர்கள் உறுப்புக் குறை



இரட்டைப் புலவரும் செல்வனும்

உடையவராயினும், சொற்சுவை பொருட் சுவை நிறைந்த செய்யுட்களைச் செய்வதில் இணையற்று இலங்கினர். அவர்கள் எங்குச் சென்றாலும் குருடர் முடவரைச் சுமந்தே செல்வது வழக்கம். ஒரு செய்யுளின் முதல் இரண்டு அடிகளை ஒருவர் பாட, மற்றவர் பின்னிரண்டு அடிகளைப் பாடிச் செய்யுளை முடிப்பார்; இவ்வாறு நூல்களையும் சேர்ந்தே பாடுவது வழக்கம். அதனால் பொது மக்கள் அவர்களை இரட்டையர் என்றும் இரட்டைப் புலவர் என்றும் வழங்கலாயினர். புலவர் இருவருள் ஒருவர் அம்மான் மைந்தர்; மற்றொருவர் அத்தை மைந்தர்; மைத்துனக்

கேண்மையினர் ஆதலின் இருவரும் ஒருவரை ஒருவர் வேடிக்கை செய்துகொண்டு பாடுவதும் உண்டு.

2. இரட்டையர் சிறந்த சிவபக்தி உடையவர்; ஆதலின் தமிழ் நாட்டுப் பாடல் பெற்ற தலந்தோறும் சென்று இறைவனை வழிபட்டுச் சென்றனர். ஒருநாள் அவர் சிவத் தலங்களுட் சீரும் சிறப்பும் பெற்றதான தில்லைக் கூத்தரசனைத் தரிசிக்க விரும்பிச் செல்லலாயினர். தில்லையை நெருங்கும் சமயத்தில் வழியில் இரட்டையர்க்கு எதிரில் செல்வன் ஒருவன் சிறந்த ஆடை அணிகளை அணிந்தவனாய் வந்துகொண்டிருந்தான். அவனுக்குப் பின் பலர் அவ்வழியில் வந்தனர். செல்வன் தம் பாடலைப் பாராட்டிப் பொருள் ஈவான் என்னும் எண்ணங்கொண்டு இரட்டையர் அவன்மீது ஒரு செய்யுளைப் பாடினர். தன்னைப்பற்றி அவர்கள் ஏதோ பாடினர் என்பதை மட்டும் அச்செல்வன் உணர்ந்தனனே அன்றி, அதன் பொருளை அறிய அவனுக்குப் போதிய கல்வியறிவு இல்லை. ஆதலால் அவன் அப்புலவர்களைப் பார்த்தபடியே நின்றான்; வாயைத் திறக்கவில்லை. அவன் தம் பாடலைப் பாராட்டாது நெடுமரம்போல நிற்பதைக் கண்ட முடவர் அப்பணக்காரனை அவமானப்படுத்த விரும்பி,

"மூடர்முன் னேபாடல் மொழிந்தால் அறிவரோ
ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா"

என்று முதல் இரண்டு வரிகளைப் பாடினர். முடவரது உள்ளக் கருத்தைப் பாடல் வாயிலாக உணர்ந்த குருடர் செய்யுட் பொருளைக் காணக் கூடிய அறிவுக்கண் அச்செல்வனுக்கு இல்லை எனப் பொருள் படுமாறு

... ... '—ஆடகப்பொன்
செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனா னால்"

எனப்பாடி அச்செய்யுளை முடித்தனர். செல்வனுக்குப் பின் வந்த பொதுமக்கள் இரட்டையர் பாடலைக் கேட்டு வியந்து, செல்வனுக்கு இரட்டையருடைய அருமை பெருமைகளை எடுத்துக் கூறினர். பணக்காரன் தன் அறியாமைக்கு வருந்திப் புலவரைப் பாராட்டி, அவர்கட்குப் பரிசில் அளித்துச் சென்றான்.

3. இங்ஙனம் சிவத்தளிகளைக் கண்டு வழிபட்டு வந்த இரட்டையர் மதுரையை அடைந்தனர்; திருக்கோவிலில் உள்ள பொற்றாமரைக் குளத்தில் நீராடலாயினர். குருடர் தமது ஆடையைத் துவைத்து அலசுவதற்காக நீரில் போட்ட பொழுது அத்துணி அவர் கையிலிருந்து தவறி நெடுந்தொலை சென்று விட்டது. ஆடை நழுவிவிட்டதை அறிந்த குருடர் தம்மைச் சுற்றியிருந்த தண்ணீரின் மேற் பரப்பைத் தடவிக் கொண்டிருந்தார். அவர் துன்ப நிலையைக் கண்ட முடவர் அவரை எள்ளி நகையாடும் முறையில்,

"அப்பிலே தோய்த்திட்(டு) அடுத்தடுத்து நாமதனைத்
தப்பினால் நம்மையது தப்பாதோ?"

எனக் கூறினர். அதைக் கேட்ட குருடர் நகைத்து,

"—அப்படியே
ஆனாலும் கந்தை அதினுமோர் ஆயிரங்கண்
போனால் துயர்போச்சுப போ"

என்று பொருத்தமாகப் பதிலளித்தார். அதனைக் கேட்ட முடவர்,

"கண்ணா யிரமுடைய கந்தையே ஆனாலும்
தண்ணீர் குளிரையுடன் தாங்காதோ?"

என்று மீண்டும் அவரை எள்ளி நகையாடினர். குருடர் நகைத்து,

"—எண்ணாநீர்
இக்கலிங்கம் போனாலென்? ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கம் உண்டே துணை"

என்று பதில் அளித்தார். அப்பொழுது காற்றால் உந்தப் பட்டுக் குருடரது ஆடை அவரை அடைந்தது.

4. இரட்டையர் திருவாரூரை அடைந்தனர்; திருவாரூர்க் கோவிலில் எழுந்தருளியுள்ள புற்றிடங்கொண்ட பெருமானை வழிபட்டனர். அப்பொழுது ஆசுகவி பாடுவதில் புகழ்பெற்ற காளமேகப் புலவர் அங்கு இருந்தார். இரட்டையர் அவருடன் அளவளாவி மகிழ்ந்தனர். அவ்வமயம் குருடர் சிவபிரானைக் குறித்துச் செய்யுள் ஒன்றனைப் பாட நினைத்து, தாம் ஆக்கூர் என்னும் ஊரில் உணவிற்குப் பட்ட துன்பத்தை அடிப்படையாகக் கொண்டு பாடினர். உடனே முடவர் தாமும் ஒன்று பாடக் கருதித் தொடங்க,

நாத் தடைப்பட்டது; மேற்கொண்டு பாட முடியவில்லை. குருடரும் அதனை முடிக்க முடியாது தடைப்பட்டு நின்றனர். அவ்வமயம் அருகில் இருந்த காளமேகப்புலவர், "மண் தின்ற பாணமே" என்று அடி எடுத்துக் கொடுத்தனர். உடனே முடவர் செய்யுளைப் பாடி முடித்தனர்; காளமேகப்புலவரைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

5. திருவண்ணமலை பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இரட்டையர் அதனை அடைந்து சிவபெருமானை வழிபட்டனர். பிறகு அப்பதியில் இருந்த சம்பந்தாண்டான் என்ற புலவனைக் கண்டனர். அப்பொழுது நாவிதன் அவனுக்கு க்ஷவரம் செய்துகொண்டிருந்தான். அவன் செந்தமிழ்ப் புலவன்; சக்தி வழிபாட்டினன்; செருக்குற்றவன் என்பதை இரட்டையர் முன்னரே கேள்வியுற்றவர் ஆதலின் அவனது செருக்கையும் அடக்கினர்.

6. பல ஆண்டுகள் கழிந்தன. இரட்டையர் காளமேகப்புலவர் வாழ்ந்த ஊர்ப் பக்கமாகச் சென்றனர். அப்பொழுது அவரது நினைவு வர, ஊருக்குட் சென்றனர். காளமேகப்புலவர் அன்றுதான் இறந்தார் என்றும், அவரது உடல் சுடுகாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும் ஊரார் உரைப்ப, இரட்டையர் சுடுகாட்டுக்கு விரைந்தனர்; உடல் எரிவதைக் கண்டு மனம் பதைத்து,

"ஆசு கவியால் அகில உலகெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே! - பூசுரா!
விண்தின்ற செந்தழலால் வேகுதே ஐயையோ!
மண்தின்ற பாணமென்ற வாய்"

என்னும் செய்யுளைப் பாடிக் கண்ணீர் விட்டனர்.

7. இரட்டைப் புலவரைப்பற்றிய செய்திகள் பல. அவற்றையும், கம்பர், ஒட்டக் கூத்தர், புகழேந்தியார் முதலிய இடைக்காலப் புலவர்களைப்பற்றிய சுவையுள்ள செய்திகளையும் கூறும் விநோத ரச மஞ்சரி புலவர் புராணம் முதலிய நூல்களை நீங்கள் ஓய்வு நேரங்களிற் படித்து இன்புறலாம். இப்புலவர் பெருமக்களைப்பற்றிய செவிவழிச் செய்திகளைக் கூறும் இந்நூல்கள் பிற்காலத்திற் செய்யப்பட்டவை. ஆதலின் பல செய்திகள் உண்மையற்றனவாகவும் சில

உண்மையுடையனவாகவும் இருத்தல்கூடும். எனினும் சுவை மிகுந்த அச்செய்திகளைப் படித்துணர்தல் நல்லது.

அரும்பொருள்

செவிலித்தாய் - பிள்ளையை வளர்க்குந் தாய். ஓம்பும் - பாதுகாக்கும். தீம் - இனிய. கன்னி - காவிரியாகிய கன்னிகை. பதி - ஊர். இலங்கினர் - விளங்கினர். கேண்மை - உறவு. ஆடு - ஆடுதல், நடனம். தென்புலியூர் - தில்லை. அம்பலம் - பொதுவிடம், சபை. ஆடகம்-மாற்று உயர்ந்த பொன். செந்திரு - செம்மையான இலக்குமி. அணங்கு - பெண். திருமுன் - சந்நிதி. தளி - கோவில். அப்பு - தண்ணீர். தப்பினால் - துவைத்தால். தப்பாதோ - தவறாதோ? தண் ஆர் - குளிர்ச்சி பொருந்திய. கலிங்கம் - ஆடை. சொக்கலிங்கம் - மதுரைச் சிவபெருமான் பெயர். சொக்கு - அழகு. உந்தப்பட்டு - தள்ளப்பட்டு, புற்றிடங் கொண்ட பெருமான் - வன்மீக நாதன். ஆசுகவி - கொடுத்த பொருளை உடனே பாடும் பட்டு. ஆக்கூர்-மாயூரத்தை அடுத்துள்ள சிவத்தலம், மண் - மண்ணுலகம். தின்ற - விழுங்கிய. பாணம் திருமாலாகிய அம்பு. சக்தி - பார்வதி. பூசுரா-பூதேவனே, பிராமணனே!

I. விடை கூறுக:—

1. சோணாட்டுச் சிறப்பு யாது?
2. 'இரட்டையர்' எனப் புலவர் இருவரும் பெயர் பெறக் காரணம் யாது?
3. இரட்டையர் செல்வனைப் பற்றி வருந்திப் பாடிய பாடல் யாது? அதன் கருத்தென்ன?
4. மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் இரட்டையர் பாடிய பாடல்கள் எவை? அவை பாடப்பெற்ற சந்தர்ப்பம் என்ன?
5. திருவாரூரிற் காளமேகப் புலவர் இரட்டையர்க்குச் செய்த உதவி யாது?
6. சம்பந்தாண்டான் யாவன்? எத்தகையவன்?
7. காளமேகப்புலவர் உடல் எரிகையில் இரட்டையர் வருந்திப் பாடிய செய்யுள் யாது? அதன் பொருள் என்ன?
8. இடைக்காலப் புலவர் யாவர்? அவர்களைப்பற்றிக் கூறும் நூல்கள் எவை?

II. 1. வாக்கியங்களில் அமைக்க:—ஆசுகவி, செவிலித்தாய், திருமுன் கலம்பகம், அணங்கு, செவிவழிச் செய்தி,

2. எதிர்ச்சொல் கூறுக:—சுவையுள்ள, சுடுகாடு, முடித்தனர்.

16. சோழர் காலத்து ஓவியங்கள்

1. மனிதன் பிற பொருள்கள் வாயிலாகத் தன் அறிவை வெளிப்படுத்தும் பண்பே 'கலை' எனப்படும். மனிதன் அறிவு வளர்ச்சி ஓரளவிற்கு மிகுதிப்படுமாயின், அது வெளிப்படல் இயல்பு. அவ்வாறு வெளிப்படும் வளர்ச்சியே கைவன்மையால் வரும் ஓவியம் முதலிய வேலைப்பாடுகள் ஆகும். மனிதர் சிலர் தம் கலைவன்மையை ஓவியத்தின் வாயிலாகக் காட்டுகின்றனர்; வேறு சிலர் சிற்பத்தின் வாயிலாகத் தெரிவிக்கின்றனர்; மற்றும் சிலர் காவியங்கள் வாயிலாகக் காட்டுகின்றனர்; சிலர் அழகிய கட்டடங்கள் மூலமாக அறிவிக்கின்றனர். பிறர் பிறவாறு காட்டுகின்றனர். இங்ஙனம் பல துறைகளிலும் காட்டப்படும் புலமைத் திறனே 'கலை' (Art) என்று பெயர் பெறும். இப்பண்பு பணத்தின்பொருட்டு உண்டாவதன்று; பிற ஆசைகளால் உண்டாவதும் அன்று. இஃது அறிவுப் பெருக்கத்தின் அறிகுறியாக அமைவது. 'கலை' என்பது உள் உணர்ச்சியை உலகத்தார்க்கு உணர்த்தும் இயற்கைச் சாதனம் ஆகும்.

2. மனிதனது உள் உணர்ச்சியின் தெளிந்த நிலையிலிருந்து பெருக்கெடுத்து வெளித்தோன்றும் கைவன்மையாற்றான் பாபிலோனிய நகரம் அழகு பெருக அமைக்கப்பட்டது; ஐரோப்பாவிற்கே நாகரிகத்தை அறிவித்த உரோமாபுரி பேரெழில் கொண்டு விளக்கமுற்றது; நமது தாய் நாட்டில் எந்நாட்டவரும் இன்றளவும் புகழும் பெருமை உடைத்தாய்க் கண்ணைக் கவரும் தாஜ்மஹால் தோற்றம் எடுத்தது; ஐம்புலன்களையும் ஒருவழிப்படுத்தும் அஜந்தாக் குகைச் சிற்பங்கள் அமையலாயின; சித்தன்ன வாசல் ஓவியங்கள் விளக்கமுற்றன. மனிதன் தன்னை மறந்த இன்ப நிலையிற்றான் தூய கலையழகைத் தோற்றுவிக்கிறான். அவ்வின்ப நிலையில் தீட்டப்பெறும் ஓவியம் அவ்வோவியனது உள்ளப் பண்பை உணர்த்துவதாகவே அமையும். மொகலாய நகரங்களாக விளக்கமுற்றிருந்த டெல்ஹியும் ஆக்ராவும் இன்றளவும் அத்தகைய தூய கைவன்மையைக் கவினுறு கட்டடங்கள் வாயிலாகக் காட்டு

கின்றன. ஐம்புலன்களையும் ஒருங்கே ஈர்க்கும் அவ்வழகிய கட்டடங்களைக் காணப் பற்பல நாடுகளிலிருந்து இன்னும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்தவண்ணமாக இருத்தல் ஒன்றே, அக்கட்டடங்களின் ஒப்புயர்வற்ற தன்மையை உணர்த்தப் போதுமானதன்றோ?

3. இங்ஙனம் உயர்ந்த கைவன்மையைக் காட்டி நிற்கும் கட்டடங்கள் நமது தமிழகத்திலும் உண்டு. அவற்றுள் ஒன்றே தஞ்சை பெரிய கோவில் என்பது! அஃது கி. பி. 11-ம் நூற்றாண்டில் இராஜராஜ சோழனால் கட்டப்



தஞ்சைப் பெரிய கோவில்

பெற்றது; கி. பி. 1003 முதல் 1009 வரைக் கட்டப்பெற்றதாகும். அக்கோவில் ஒழுங்கான அளவுகளையும் அமைப்பினையும் சிறந்த வேலைப்பாட்டையும் கொண்டது. அக்கோவில் விமானம் 216 அடி உயரமுடையது; பதின்மூன்று கோபுர மாடிகளைக் கொண்டது. விமானத்தின் அடியில் உள்ள கருவறையில் பெரிய சிவலிங்கம் இருக்கின்றது.

அதனைச் சுற்றிலும் ஓர் ஆள் செல்லத்தகும் மிகக் குறுகிய திருச்சுற்றுப் போதிய வெளிச்சமின்றி இருளடர்ந்து இருக்கிறது- அத்திருச்சுற்றில் விளக்கேந்திச் சென்று, கருவறையின் புறச் சுவர்களைக் கூர்ந்து கவனிப்பின், ஆ! அழகிய ஓவியங்கள் காட்சி அளித்தலைக் காணலாம்.

4. சுவர்களின் மேற்படை சில இடங்களில் அழிந்து கிடக்கின்றது. அவ்வழிந்த இடங்களில் மேற்படைக்கு உட்புறம் வேறு ஓவியங்கள் காணப்படுகின்றன. ஓவிய வல்லுநர், மேற்படையில் காணப்படுபவை தஞ்சையை ஆண்ட நாயக்கர் கால ஓவியங்கள் என்றும், உட்படையில் காணப்படுபவை சோழப் பேரரசர் கால ஓவியங்கள் என்றும் கூறுகின்றனர். பெரிய கோவிலைக் கட்டியவன் இராஜராஜ சோழன் ஆகலாலும், அவன் மகனான கங்கை கொண்ட சோழன் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம் தலை நகராக ஆக்கப்பட்டதாலும் பெரிய கோவில் ஓவியங்கள் இராஜராஜன் காலத்தனவாகவே இருத்தல் கூடும் என்று அறிஞர் கருதுகின்றனர். உண்மை எதுவாயினும் ஓவியங்கள் சோழர் கால ஓவியங்களே என்பதில் ஐயமில்லை. அவை எவற்றை உணர்த்துகின்றன!

5. ஒரு பக்கத்தில் சுந்தரரைச்* சிவபெருமான் கிழவேதியராக வந்து அடிமை ஓலை காட்டி அவரது திருமணத்தைத் தடைசெய்து ஆட்கொண்டவரலாற்றைக் குறிக்கும் ஓவியம் காணப்படுகிறது. மண மண்டபத்தில் மணத்தைக் கண்டு களிக்கப் பலர் கூடியிருக்கின்றனர். சிவபெருமான் கிழவேதியராக ஒரு கையில் குடையும் மற்றொரு கையில் ஓலையும் தாங்கிச் சுந்தரர்க்கு முன் நிற்கிறார்; சுந்தரர் அவரை வியப்புடன் நோக்குகிறார்; பின் புறம் திருவெண்ணெய் நல்லூர்க் கோவில் காட்டப்பட்டுள்ளது.

6. மற்றொரு பக்கத்தின் மேற்பகுதியில் திருக்கயிலாய மலையில் சிவபெருமான் முனிவரும் பிறரும் சூழ வீற்றிருக்கும் காட்சி காணப்படுகிறது. அடிப்பகுதியில் சுந்தரர் வெள்ளானைமீதும் அவர் நண்பரும் சேர நாட்டரசருமான சேரமான் பெருமாள்* குதிரைமீதும் அமர்ந்து கயிலை

* சுந்தரர், * சேரமான் வரலாறுகள் பிள்ளைகட்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

காட்சி காணப்படுகிறது. இந்த ஓவியத்தைப் படத்திற் பாருங்கள்: யானை எவ்வாறு அலங்கரிக்கப்பட்டுள்ளது; குதிரை எவ்வாறு அணி செய்யப்பட்டுள்ளது என்பன கவனிக்கத்தக்கவை. இவ்வாறு யானையையும் குதிரையையும் ஒப்பனை செய்தல் சோழப் பேரரசர் காலப் பழக்கம் என்பதனையே ஓவியங்கள் உணர்த்துகின்றன என்பதை அறிதல் வேண்டும். சுந்தரர்க்கும் சேரமானுக்கும் தலையில் கொண்டை, தாடி, கை - மார்பு முதலிய இடங்களில் அணிகள் முதலியன காணப்படுகின்றன. சுந்தரரும் சேரமானும் கி. பி. 9-ஆம் நூற்றாண்டினராயினும், அவர்கள்

சுந்தரர்

இவ்வாறு இருந்தனர் என்பதைக் காட்டும் இப்பிற்கால ஓவியங்கள், சோழர் கால மக்கள் சுந்தரரையும் சேரமானையும் பற்றிக் கொண்டிருந்த கருத்தை உணர்த்துவனவாகும். இவை, சோழர் கால உடைச்சிறப்பையும் அணிச்சிறப்பையும் தலையலங்காரத்தையும் நமக்கு உணர்த்துவனவாகவும் கொள்ளலாம். சுந்தரர் கயிலைக்குச் செல்லும் பொழுது பதிகம் பாடிக்கொண்டு சென்றார் என்பது வரலாறு. ஓவியர் அதனை உள்ளத்திற்கொண்டு சுந்தரர் கைகளில் தாளம் கொடுத்திருத்தல் கவனிக்கத்

தக்கது. இங்ஙனம் கயிலை நோக்கிச் செல்லும் அடியார் இருவரையும் கணநாதர்கள் ஆடிப்பாடி வரவேற்பது போல ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

7. மற்றொரு பக்கத்தில் பலவகை ஆடை அணிகளைக் கொண்ட நடனமாதர் உருவங்கள் அழகுடன் காணப் படுகின்றன. நடனமாதர் ஆடைவகைகள், அணிவகை கள் கவனிக்கத்தக்கவை. அவை சோழப் பேரரசர் கால ஆடை அணிவகைகளை நாம் அறியப் பெருந்துணை புரி வனவாகும்.

8. நமது தமிழகத்தில் ஓவியக்கலை சங்ககாலத்தி லேயே சிறப்புற்றிருந்தது என்பதைச் சங்க நூல்களால் உணரலாமே அன்றி, நேரே உணர்த்தத்தக்க ஓவியங்கள்

சேரமான் பெருமாள்

இல்லை. சித்தன்ன வாசல் ஓவியங்கள் கி. பி. 7-ஆம நூற்றாண்டில் தமிழ் நாட்டு ஓவியக்கலை வளர்ச்சியை உல கிற்கு உணர்த்துவனவாகும். அவற்றுக்குப் பிறகு தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்கள் கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் தமிழக ஓவியக்கலை வளர்ச்சியை அறிவிப் பனவாகும். இவ்வோவியங்களுக்கு மேற்புறப் படையில் அமைந்துள்ள ஓவியங்கள் நாயக்கர் கால (கி. பி. 16-ஆம்

நூற்றுண்டு) ஓவியக்கலை வளர்ச்சியைத் தெரிவிப்பன வாகும்.

9. ஓவியம், சிற்பம், இசை, நடனம் என்பன நுண்கலைகள் எனப்படும். இவை வளர்ச்சி பெற்றுள்ள நாடே நாகரிக நாடு என்று அறிஞரால் கூறப்பெறும். நாகரிகக் கலைகளாகிய இவை அனைத்திலும் இந்தியா மிகச் சிறந்தநாடு என்பதும் நமது தமிழகம் இக்கலைகளைச் சிறப்பாக வளர்த்த பகுதி என்பதும் உலகறிந்த உண்மையாகும். நமது தமிழகத்தின் கலைவளத்தை உணர்த்தி நிற்கும் இவ்வோவியங்கள் காக்கப்படவேண்டுவன ஆதலின் ஆராய்ச்சித்துறை அதிகாரிகள் இவற்றைப் பாதுகாக்கத் திட்டமிட்டுவருகின்றனர். நீங்கள் சமயம் வாய்க்கும் பொழுது சித்தன்னவாசல், தஞ்சைப் பெரிய கோவில் முதலிய இடங்களுக்குச் சென்று நம் பண்டைச் செல்வங்களாகிய ஓவியங்களையும் சிற்பங்களையும் கண்டு மகிழ்வீர்களாக!

அரும்பொருள்

கைவன்மை - கைத்திறமை, ஆக்குந்திறன் (Art), வனப்பு - அழகு. தண்மை × வெம்மை. முகடு - உச்சி. சான்றோர் - கல்வி கேள்வி ஒழுக்கங்களில் மிக்கவர். எழில் - அழகு. ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி. ஐம்புலன் - ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை. திருச்சுற்று - பிராகாரம். கருவறை - மூலத்தானம். வேதியர் - வேதங்களை யுணர்ந்தவர், பிராமணர்.

பயிற்சி

I. விடை தருக:—

1. 'ஆர்ட்' என்பது யாது?
2. கைவன்மையாற் கவினுற்ற சிலவற்றைக் கூறுக.
3. தஞ்சைப் பெரிய கோவில் கட்டப்பட்ட காலம், விமான அமைப்புப்பற்றி யாது அறிவீர்?
4. கருவறைப் புறச்சுவர்களில் உள்ள ஓவியங்கள் எவ்வெக் காலத்தன?
5. சோழர் கால ஓவியங்கள் எவை?
6. சுந்தரர் வரலாறு யாது?
7. சேரமான் பெருமாள் வரலாறு யாது?
8. இந்த ஓவியங்களைக் கொண்டு நாம் அறிவன யாவை?
9. 'தமிழகத்தில் ஓவியக்கலை' - இதுபற்றி யாது அறிவீர்?
10. நாகரிகக் கலைகள் எவை?

II. வாக்கியங்களில் அமைக்க:—

நுண்கலைகள், கலைவளர்ச்சி, ஆடிப்பாடி, திருச்சுற்று, கருவறை, சோழப்பேரரசர்.

17. உலகத்தின் தென்முனை

(காப்டன் ஸ்காட்)

1. உலகத்தின் தென்முனையைக் கண்டறிதல் வேண்டும் என்னும் ஆவல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயருக்கு உண்டானது. 1901-ஆம் ஆண்டில் அரசினர் விருப்பப்படி கப்பல் தலைவர் ஒருவர் தென் முனை கண்டுவருவதாக ஒப்புக்கொண்டார். அவரே காப்டன் இராபர்ட் பால்கன் ஸ்காட்[1] என்பவர். அவர் சிறுவயது முதல் கப்பலில் வேலை பார்த்தவர்; பல நாடுகள் சுற்றியவர்; கடல் அநுபவம் மிக்கவர்; தட்ப-வெப்ப நிலைகளை நன்கு அறிந்து அவற்றுக்கேற்ப உடைகளை அணிந்து உடம்பைப் பாதுகாத்துக்கொள்பவர். ஆதலால் அவர் தமது தென்முனைப் பிரயாணத்திற்கு வேண்டியவைகளைக் குறைவறத் தயாரிக்கலானார்.

2. தென் முனைக்குச் செல்வோர் கலைமான் தோலினால் ஆன செருப்புகளையும் கையுறைகளையும் படுக்கைகளையும், ஒட்டக மயிரால் செய்யப்பட்ட குல்லாய்களையும் போர்வைகளையும் எடுத்துச் செல்லவேண்டும். அவர்கள் தங்கள் உடலிலும் கால்களிலும் கம்பளிச் சட்டைகளையும் அவற்றுக்கு மேல் அழுத்தமான நீல நிறத் துணியாலான சட்டைகளையும் அவற்றுக்கு மேலாக மெழுகுத் துணியையும் அணியவேண்டும். செருப்புகள் பனித்தரையில் ஈரமுற்று ஊறிப் போகாமல் நெடுநேரம் வெப்பமாக இருப்பதற்காக ஒருவகைப் புல்லை அச்செருப்புகளின் உட்புறத்தில் சுற்றிக்கொள்ளவேண்டும். நுண்ணறிவுடைய ஸ்காட் இந்த ஏற்பாடுகளைக் குறைவின்றிச் செய்துகொண்டார்.

3. ஸ்காட் தமது பிரயாணத்திற்குத் தேவையான-உடலுக்கு வன்மை தரும் சத்துள்ள உணவுப் பொருள்களைச் சேர்க்கலானார்; ரொட்டி, மாட்டிறைச்சி, கொழுப்பு, உலர்ந்த பாற்பொடி, வெண்ணெய், பாற்கட்டி, காப்பி, தேயிலை, பக்குவமாய்ச் சீசாக்களில் அடைக்கப்பட்ட காய்கறித் துண்டங்கள், பழங்கள், ஊறுகாய்கள், உருளைக் கிழங்கு, சர்க்கரை, எலுமிச்சம்பழச் சாறு முதலியவற்றை வேண்டிய அளவு எடுத்துக்கொண்டார். பின்னர், ஸ்காட் பனி மண்டலப் பிரயாணத்திற்கு ஏற்ற உருளையற்ற வண்டிகள் பலவற்றைச் செய்துகொண்டார். பனி மண்டலத்

---

1. Captain Robert Folcon Scott.

துக் கலைமான்களும் நாய்களுமே அவற்றை இழுக்க வல்லன. ஸ்காட் சைபீரியாவிலிருந்து பெரிய நாய்களைத் தம்முடன் கொண்டுசென்றார்.

4. ஸ்காட் இவ்வளவு முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு கி. பி. 1901-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31-ஆம் நாள் 'டிஸ்கவரி' என்னும் பெயர் கொண்ட கப்பலிற் புறப்பட்டார். அவருடன் ஷாக்கள்டன், வில்ஸன், ஈவான்ஸ், லாக்லி என்னும் அவர்தம் நண்பர்களும் பிரயாணமாயினர். கப்பல் ஆறு திங்கள் தெற்கு நோக்கிச் சென்று மக்மர்தோ என்னும் நீர்ப்பரப்பில் ஒரு துறையில் தங்கியது. அதற்கு அப்பால் கப்பல் செல்ல முடியவில்லை. ஸ்காட் குளிர்காலம் முழுவதும் அத்துறையிலேயே தங்கியிருந்தனர். அவரும் நண்பரும் பனியில் நடக்கச் சருக்கல் பயிற்சி பெற்றனர்; அதுவரை தாங்கள் கண்ட காட்சிகளையும் தங்கள் அநுபவங்களையும் எழுதி வைத்தனர்.

5. கோடைக்காலம் தொடங்கியது. ஸ்காட் குழுவினர் தம் பிரயாணத்தைத் தொடங்கினர். பணியாளர் உருளையற்ற வண்டிகளில் உணவுப் பொருள்களைக் கொண்டு சென்று, ஸ்காட் செல்ல இருக்கும் வழி நெடுக அங்கங்குக் கொடி நட்டு உணவுப் பொருள்களை வைத்துக்கொண்டே சென்றனர். அவர்கட்குப்பின் ஸ்காட் குழுவினர் புறப்பட்டுச் சென்றனர்; பணியாட்கள் செய்த ஏற்பாட்டினால் குழுவினர் வழியில் உணவுப் பஞ்சமின்றி உண்டுமகிழ்ந்து சென்றனர்; இங்ஙனம் சென்று 1902-ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம் 30-ஆம் நாள் 82 டிகிரி தெற்குக் கோடு குறிக்கும் இடத்தை அடைந்தனர்.

6. ஸ்காட் மேலும் தெற்கு நோக்கிச் செல்ல விரும்பினார். ஆயின் அவர் நண்பர்கள் களைத்திருந்தனர். நாய்கள் மிகவும் மெலிவுற்றிருந்தன. ஷாக்கள்டன் நோயுற்றார். ஆதலால் ஸ்காட் தம் கப்பல் உள்ள இடத்திற்கு மீளவேண்டியவரானார். பாவம்! அவர்கள் வழிநெடுக மழையிலும் குளிரிலும் பட்ட துன்பம் கூறுந் தரத்ததன்று. அவர்கள் பற்பல இன்னல்களை அடைந்து இறுதியில் கப்பல் இருந்த இடத்தை அடைந்தனர். அவ்வமயம் இங்கிலாந்திலிருந்து அவர்கட்கு வேண்டிய உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு ஒரு கப்பல் வந்திருந்தது. ஸ்காட் அக்கப்பலில் ஷாக்கள்டனை ஏற்றி இங்கிலாந்திற்கு அனுப்பினார்; 1903-ஆம் ஆண்டின் குளிர்காலத்தைத் தம் கப்பலிலேயே கழித்தார்.

7. கோடைக்காலம் தொடங்கியதும் ஸ்காட் குழுவினர் முன்போலத் தமது பிரயாணத்தைத் தொடர்ந்தனர். வழியில் அவர்கள் எடுத்துச் சென்ற உணவுப் பொருள்கள் குறையலாயின. ஆதலின் அவர்கள் தமது பிரயாணத்தை நிறுத்திக் கப்பலை நோக்கித் திரும்பினர். நாய்கள் வண்டியை இழுத்துச் செல்ல முடியாது தவித்தன. அதனால் ஸ்காட், ஈவான்ஸ் இருவரும் வண்டியின் முன்புறத்திலும் லாக்லி என்பவர் பின்புறத்திலும் வண்டியைப் பிடித்துத் தள்ளிச் சென்றனர். வழியில் பெரிய பனிப் பள்ளம் இருந்தது. ஸ்காட்டும் ஈவான்ஸும் கால் சருக்கி அப் பள்ளத்தில் விழுந்து, பின்னர் அரிதின் முயன்று வெளியேறினர். இங்ஙனம் வழியில் பல இன்னல்களை எய்தி டிசம்பர்த் திங்கள் கடைசியில் மூவரும் கப்பலை அடைந்தனர்.

8. அக்கப்பலைச் சுற்றிப் பனி உறைந்துவிட்டது. அதனால் கப்பலை நகர்த்தவோ செலுத்தவோ முடியவில்லை. இந்நிலையில் நற்காலத்திற் கறிகுறியாக இங்கிலாந்திலிருந்து இரண்டு உதவிக் கப்பல்கள் வந்தன. சில நாட்களுக்குப் பிறகு பனி கரையத் தொடங்கியது. ஸ்காட் குழுவினர் உதவிக் கப்பல்களின் துணையைக் கொண்டு தம் கப்பலை நகர்த்தி வடக்கு நோக்கிச் செலுத்தலாயினர். பின்னர் அனைவரும் கப்பல்களில் ஏறி இங்கிலாந்திற்குப் பிரயாணமாயினர். இங்கிலாந்து அரசினர் ஸ்காட்டை வரவேற்றுப் பாராட்டினர்; அவருடைய அநுபவங்களைக் கேட்டு வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டனர். ஸ்காட் ஐந்து ஆண்டுகள் இங்கிலாந்தில் இருந்து ஓய்வு பெற்றார்.

9. ஸ்காட் 1910-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ஆம் நாள் மீண்டும் தென்முனை நோக்கிச் சென்றார். அவருடன் ஈவான்ஸ், வில்சன், ஓட்ஸ், பவர்ஸ்[2] என்னும் நண்பர்கள் சென்றனர். அனைவரும் நவம்பர் மாதம் 29-ஆம் நாள் ஈவான்ஸ் முனையில் தங்கினர்; அங்குத் தாம் திரும்பி வருகையில் உண்பதற்கான பொருள்களை வைத்துத் தெற்கு நோக்கிச் சென்றனர்; 1911-ஆம் ஆண்டின் முதல் நாள் 87 டிகிரி தெற்குக் கோட்டைக் கடந்தனர்; அடுத்துப் பதினாறு நாட்கள் நடந்துசென்று 17-ஆம் நாள் தாம் அதுவரைக் காணாத தென்முனையை அடைந்தனர். அங்கு அவர்கள்

2 Bowers

பார்வையைக் கவரத்தக்க முறையில் கறுப்புப் பை ஒன்று கிடந்தது. ஸ்காட் அதனை ஆவலோடு எடுத்துப் பார்த்தார்; அஃது அமண்சன் என்னும் நார்வே நாட்டாரது என்பதைக் கண்டார். அவர் தமக்கு முன்னரே தென் முனையைக் கண்டுபிடித்துவிட்டார் என்பதை, அப்பை அங்கிருந்ததைக் கொண்டு உணர்ந்து, மனம் வருந்தினார்; எனினும் தாம் அரும்பாடுபட்டு வந்து கண்டுபிடித்தது தம் நாட்டுக்

உலகத்தின் தென்முனை

குப் பெருமை அளிப்பதே ஆகும் என்றெண்ணி ஆறுதல் அடைந்தார்; தென் முனையில் பிரிட்டிஷ் கொடியை நாட்டி, ஒரு நாள் அங்குத் தங்கி, அங்கிருந்த விலங்குகளையும், பறவைகளையும் பிற காட்சிகளையும் கண்குளிரக் கண்டார்.

10. தென்முனையில் பல அழகிய பறவைகள் காணப்பட்டன. சில பறவைகளின் சிறகுகள் நீலம் கலந்த பழுப்பு நிறத்துடன் காணப்பட்டன. சிலவற்றின் தலைகளும் சிறகு

களும் சிவந்தும், உடல் வெளுத்தும் காணப்பட்டன. வேறு சிலவற்றின் சிறகுகளும் தலைகளும் கறுத்தும் உடல் வெளுத்தும் இருந்தன. ஒவ்வொரு பறவையின் உயரம் நான்கடி இருக்கலாம்; நிறை நூறு இராத்தல் இருக்கலாம். அவை புதியவர்களைக் கண்டு அஞ்சாது அணியணியாக நின்றிருந்தன. சீல் என்னும் விலங்கு வெண்ணிறமுடையது. அது நண்டுகளையும் மீன்களையும் உணவாகக் கொள்வது. ஸ்காட்டும் அவர் நண்பரும் அதன் ஈரலை மிகவும் விருப்புடன் உண்டனர். தென்முனை ஒரு பனிக்கட்டி வெளியாகக் காட்சியளித்தது. அங்குள்ள செடி வகையும் வளருவதில்லை.

11. ஸ்காட் தம் நண்பருடன் தென்முனையை விட்டுப் புறப்பட்டு வடக்கு நோக்கி மீண்டனர். வழியில் பனிப் புயலும் பெருமழையும் தொடங்கின; ஈவான்ஸ் நோயுற்று ஒரு திங்கள் துன்புற்றுப் பிப்ரவரி 17-இல் உயிர் துறந்தார். வடக்கே செல்லச் செல்லக் குளிர் மிகுதிப்பட்டது. ஓட்ஸ் என்பவரும் நோய்வாய்ப்பட்டார். அவர் தம் பொருட்டுத் தம் நண்பர் பிரயாணத்தை நிறுத்துதலை விரும்பவில்லை. தாம் இனிப் பிழைத்தல் அரிதென்று அவர் உணர்ந்தார்; ஒரு நாள் கூடாரத்திலிருந்து புறப்பட்டுச்சென்று பனிப் படலத்திற்குள் மறைந்தார்; மீண்டிலர். ஸ்காட் அடைந்த துயரத்திற்கு அளவில்லை. அவர் என்ன செய்வார், பாவம்! மிகுந்த மனக்கவலையுடனும் எஞ்சிய நண்பருடனும் மேலும் வழிநடக்கலானர். வழியில் உணவு குறைந்துவிட்டது. அவர் ஈவான்ஸ் முனைக்குப் பதினொரு கல் தொலைவில் உள்ள இடத்தை அடைந்தனர். பதினொரு கல் தாண்டினாற்றான் உணவு கிடைக்கும்; உணவின்றி எவ்வாறு ஈவான்ஸ் முனையை அடைவது? ஸ்காட்டும் அவர் நண்பரும் முன் சொன்ன இடத்தில் கூடாரம் அடித்துத் தங்கினர். அங்குத் தங்கிய பிறகு நான்கு நாட்கள் விடாமல் பனிமழை பெய்தது. ஸ்காட்டும் அவர் நண்பரும் உணவின்றி அக்கூடாரத்திற்குள் மாண்டனர்.

12. குறித்த காலத்தில் திரும்பி வராமையால் ஸ்காட் குழுவினரைத் தேடிவந்த ஆங்கில மாலுமிகள் அவர்களுடைய ஆவியற்ற உடலங்களைக் கண்டு திடுக்கிட்டனர்: ஸ்காட் குழுவினர் ஒவ்வொருவர் இறந்த இடத்திலும் ஒரு சிலுவையை நட்டு, இங்கிலாந்து மீண்டனர். சொல்லொணாத் துன்பங்களை அடைந்து உலகத்தின் தென் முனையைக் கண்டறிந்து அங்குத் தம் தாய் நாட்டுக் கொடியை நாட்டிய வீர

ரான ஸ்காட்டை ஆங்கில அரசினரும் குடிமக்களும் மனமாரப் பாராட்டினர்; ஆயின் அவர் அடைந்த அகால இறப்பைக் கேட்டு மனம் வருந்தினர். இங்ஙனம் தந்நலந் துறந்த சான்றோர் பலரது நன்முயற்சியாற்றான் நாம் உலகத்து இரு முனைகளைப் பற்றியும் பல நாடுகளைப்பற்றியும் பல உண்மைகளை அறிந்து பயன் பெறுகின்றோம். உலக நலனுக்காகத் தம் சுகபோகங்களைத் துறந்து இன்னலுற்ற அப்பெருமக்களை நாம் வாயார வாழ்த்தி, அவர்கட்கு வணக்கம் செலுத்துவோமாக.

அரும்பொருள்

அணி - வரிசை. அணியணியாக - அடுக்குத் தொடர்.

பயிற்சி

I. விடை தருக:—

1. ஸ்காட் எத்தகைய இயல்பினர்?
2. ஸ்காட் தமது பிரயாணத்திற்குத் தயாரித்துக்கொண்டன யாவை?
3. மக்மர்தோ என்னும் நீர்ப்பரப்பில் ஒரு துறையில் தங்கியிருந்தபொழுது ஸ்காட் குழுவினர் என்ன செய்தனர்?
4. அவர் அங்கிருந்து புறப்பட்டுச் செய்த கோடைக்காலப் பிரயாணத்தைப் பற்றிக் கூறுக.
5. அவர் பிரயாணத்தை நிறுத்தித் திரும்பியதேன்?
6. அவர் திரும்பிய பொழுது பட்ட இன்னல்கள் எவை?
7. ஸ்காட் ஷாக்கள்டனை எவ்வாறு உபசரித்தார்?
8. மீண்டும் ஸ்காட் தெற்கு நோக்கிச் சென்று மீண்ட வரலாற்றைக் கூறுக.
9. ஸ்காட் குழுவினர் இங்கிலாந்து மீண்டதைப்பற்றிக் குறிப்பிடுக.
10. ஸ்காட் தென் முனையை எப்பொழுது கண்டார்?
11. அமண்சன் யார்? அவர் செய்த தொண்டு யாது?
12. தென் முனைப் பறவைகளைப் பற்றியும் விலங்குகைப்பற்றியும் யாது அறிவீர்?
13. திரும்பிய வழியில் ஸ்காட் குழுவினர்க்கு நேர்ந்த துன்பங்கள் யாவை? முடிவு யாது?
14. இவ்வரலாற்றிலிருந்து நீவிர் அறியும் படிப்பினை என்ன?

II. அரசினர் விருப்பம்—ஸ்காட்டின் முதற்பிரயாணம் — இரண்டாம் பயணம்—அவரது சேவை: இக்குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

18. அப்பரும் அந்தணரும்

(நாடகம்)

[அப்பர் என்பவர் திருநாவுக்கரசர் என்னும் சைவ சமய குரவர்; வேளாள மரபினர். அந்தணர் என்பவர் அப்பர் காலத்தில் வாழ்ந்த அப்பூதி அடிகள் என்ற பிராமணர். அந்தணர் சிறந்த சிவபக்தர்; சோழநாட்டில் திங்களூரில் வாழ்ந்தவர். அவர் சிவனருளால் சிறப்புப்பெற்ற அப்பரது வரலாற்றைக் கேள்வியுற்ருர். அவர் திருநாவுக்கரசரைக் கண்டதே இல்லை. அப்படி இருந்தும் அப்பரைப் பாராட்டி, அவர் திருப்பெயரையே தம் பிள்ளைகட்கும் தாம் வைத்திருந்த தண்ணீர்ப்பந்தர்க்கும் பிற எல்லாப் பொருள்களுக்கும் இட்டு வழங்கிவந்தார். நாட்கள் பல சென்றன. அப்பர் சோழநாட்டுச் சிவத்தலங்களைத் தரிசித்துப் பதிகம் பாடிக்கொண்டு வந்தவர், ஒருநாள் அந்தணர் வைத்திருந்த தண்ணீர்ப் பந்தரண்டை வந்தார். அப்பொழுது அப்பந்தரில் சிலர் இருந்து கொண்டு வழிப்போக்கர்க்குத் தண்ணீர் அளித்துவந்தனர்.]

காட்சி—1

அப்பர்:—(தமக்குள்) இத்தண்ணீர்ப்பந்தரில் 'திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தர்' என்னும் பெயர் காணப்படுகிறதே! இஃதென்ன வியப்பு? (பானை, கிணறு முதலியவற்றை உற்று நோக்குகிருர்) இது வியப்பினும் வியப்பே! பானைமீதும் அதே பெயர்! கிணற்றின்மீதும் அதே பெயர்! நான் இதுவரை எங்குமே இக்காட்சியைக் கண்டதில்லை. இதன் உண்மையைக் கண்டறிய வேண்டும்.

(பந்தரில் இருந்தவரைப் பார்த்து)

ஐயன்மீர், இத்தண்ணீர்ப்பந்தரை வைத்து நடத்தி வருகின்றவர் யாவர்?

அவர்கள்:—சுவாமி! அவர் அப்பூதி அடிகள் என்னும் பெயர் கொண்ட மறையவர். இப்பொழுதுதான் அவர், தம் வீட்டிற்குச் சென்ருர். அதோ ஒரு பலகை தொங்கவிடப்பட்டுள்ள இல்லமே அவரது இல்லம்.

[அப்பர் அவ்வில்லத்துக்குச் சென்ருர். இல்லச் சுவரிலும் "திருநாவுக்கரசர் இல்லம்" என்பது எழுதப்பட்டிருந்தது. அப்பர் சொல்லொணு வியப்புற்று, அந்தணர் வீட்டுவாயில்முன் நின்ருர்.

உள் இருந்தபடியே வாயிலை நோக்கிய அந்தணர் "ஒரு சிவனடியார் நமது இல்லத்துக்கு வந்திருக்கிறார்' என்று கூறிக்கொண்டே அவரை வரவேற்க ஓடிவந்தார்.]

அந்தணர் :—சுவாமி! வருக, வருக. தங்கள் வரவு நல்வரவாகுக. தங்கள் வருகையால் எளியேன் இல்லம் புனிதமுற்றது.

அப்பர்:—வேதியரே: அடியேன் சிவத் தலங்களைத் தரிசித்துக்கொண்டுவரும் அடியவன் ; தங்கள் தண்ணீர்ப் பந்தரண்டை வந்தேன்; அங்குத் தாங்கள் எழுதியிருந்த பெயரைப் படித்தேன்.

அந்தணர் :—படித்தீர்களா ! என் பாக்கியம்.

அப்பர் :—நீர் வைத்து நடத்தும் தண்ணீர்ப் பந்தர்க்கு உமது பெயரை அமைக்காது வேறொரு பெயர் வைக்கக் காரணம் என்ன ?

அந்தணர் :—(கண்கள் சிவந்தன; உதடுகள் துடித்தன; உடல் வியர்த்தது.) ஐயா, என்ன சொன்னீர்? தமிழ் நாடு முழுவதும் புகழ்படைத்த ஒரு பெரியாரது பெயரையா 'வேறொரு பெயர்' என்றீர் ? அவர் யார் என்று நீர் அறிவீரா? "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்று கூறிய சைவ வீரர் திருநாவுக்கரசர் அல்லவா? 'நாவுக்கரசன்' என்று சிவபிரானால் பாராட்டப் பெற்ற திருப்பெயர் உடையவர் அல்லரோ அப்பெரியார்! சைவத்தை வாழ்விக்க வந்த அப்பெரியாரது திருப்பெயரை நீர் 'வேறொரு பெயர்' என்று கூறியதை நினைக்க நினைக்க எனக்கு வருத்தம் மேலிடுகிறது. சிவனடியார் வேடத்தில் உள்ள நீர் அப்பெருமான் திருப்பெயரை இங்ஙனம் சாதாரணமாகச் சொன்னதை நோக்கின், உம்மைப்பற்றி எனக்கு ஐயம் உண்டாகிறது. நீர் யார் ? எந்த ஊரினர் ? எந்த நாட்டினர் ? உள்ளவாறு உரையும்.

அப்பர்:—(தமக்குள், ஆஹா ! என்னே இம்மறையவர் நம் மீது கொண்டுள்ள பக்தி!) மறையவரே, நீர் கொண்டுள்ள உண்மையான அடியார் பக்தி அடியேனிடம் இல்லை என்பதை நாணத்துடன் ஒப்புக்கொள்ளுகிறேன். என்னை யார் என்று கேட்கின்றீர்? நீர் பாராட்டிப் பேசும் திருநாவுக்கரசன் இந்த நாயேன் தான்.

அந்தணர்:—என்ன! என்ன! சுவாமி! பிழை பொறுக்க வேண்டும். (வீழ்ந்து வணங்கல்—அடிகளும் அந்தணரை வணங்கி அன்புரை கூறி எழுப்பி நிறுத்துதல்) ஆ! நான் இதுவரைக் காணுத பெரியாரைக் கண்டேன்! கண்டேன்!! (வீட்டிற்குள் ஓடித்தன் மனைவிமக்களுக்கு அப்பர் வந்திருப்பதை அறிவித்து அனைவருடனும் வந்து மீண்டும் வணங்குதல்—) அடிகாள்! இல்லத்திற்குள்ளே எழுந்தருள வேண்டுகிறேன்.

(அடிகள் உள்ளே செல்லல்—இல்லத்தினர் அடிகளுடைய திருவடிகளைத் தூய்மை செய்து பூசித்து ஆசனத்தில் அமரச் செய்தல்.)

அந்தணர்:—அடிகாள்! இன்று ஏழையேன் இல்லத்தின் உணவு கொண்டு என்னை ஆட்கொள்ளவேண்டும்.

அப்பர்:—அந்தணரே! உமது விருப்பம் போலச் செய்க.

காட்சி—2

[அந்தணர் இல்லத்துச் சமையல் அறை.
அந்தணர்—மனைவி—மூத்தமகன்—உரையாடல்]

அந்தணர்:—பெண்ணே! சிவபெருமானுல் ஆட்கொள்ளப்பட்ட மஹான் நமது வீட்டிற்குத் தாமாக வந்திருக்கிறுர் எனின், நமது பாக்கியமே பாக்கியம்! அப்பெரியவர் திருவுள்ளம் குளிரும்படி நல்ல முறையில் சமையல் செய்வாயாக!

மனைவியார்:—இத்தகைய மஹான்களுக்கு உணவு தயாரிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது தங்களால் அல்லவா? சிவபெருமான் நம்மீது கொண்ட கருணை காரணமாகவே இப்பெரியார் இங்கு எழுந்தருளியுள்ளார் என்று நினைக்கிறேன்.

மூத்தமகன்:—அப்பா, இப்பெரியோருக்கு ஏதேனும் ஒரு வகையில் தொண்டு செய்யும் வாய்ப்பினை எனக்கு அளிக்கலாகாதா?

அந்தணர்:—மகனே, சமையல் ஆகிவிட்டது. நீ தோட்டத்திற்குச் சென்று நீண்ட பெரிய வாழைக் குருத்தினை அரிந்துவா. அதுவே நீ செய்யத்தக்கது.

காட்சி—3

மூத்தமகன் :—(மகிழ்ச்சியுடன் குதித்துக்கொண்டே) என் பெற்றோர் நல்லவர் ஆதலால் அவர்கள் எனக்கு நல்ல வேலை இட்டனர். அடியவர் உண்ணத்தக்க குருத்திலையை அறுத்துத் தரும் பணியை எனக்களித்தனர். நான் நல்ல குருத்தாகப் பார்த்து அறுப்பேன்.

[அவன் இவ்வாறு சொல்லிக்கொண்டு பெரிய வாழைக் குருத்து ஒன்றைப்பற்றி இழுத்து அறுத்தான். அப்பொழுது ஒரு நாகம் அவன் கையில் நன்றாகத் தீண்டிவிட்டது. மைந்தன் அறுத்த குருத்தினைக் கையில் பற்றிக்கொண்டே வீட்டை நோக்கி ஓடினான்.]

மூத்தமகன் :—(தனக்குள்) பாம்பு தீண்டியதால் விஷம் உடலில் ஏறுகிறது; மயக்கம் வருகிறது. நான் இங்கு விழுவதைவிட வீட்டு வாயிலில் விழுந்தால் இக்குருத்து அடிகள் உண்ணத் தாமதமின்றிப்பயன்படும். மேலும் அரவம் என்னைத் தீண்டிற்று என்பதைப் பெற்றோர் அறியின், அடிகள் உணவு கொள்ளத் தாமதம் ஏற்படும். ஆதலால் நான் உண்மையை என் பெற்றோர்க்கு உரையேன்.

(ஓடிச் சென்று தாயார் பக்கத்தில் குருத்தினை வைத்துக் கீழே விழுதல்.)

[பெற்றோர் மைந்தனைக் கண்ணுற்றுத் திடுக்கிட்டனர்; 'விடத்தினால் இறந்தான்' என்று முடிவு செய்தனர்; அடிகள் இதனை அறியின் உணவுண்ணார் ஆதலின் அவருக்குத் தெரிவியாமல் மைந்தனைப் பாயில் மறைத்துவிட்டு, அடிகட்கு உணவு படைக்கலாயினர்.]

காட்சி—4

[அடிகள் உணவு கொள்ளுமுன் திருநீறணிந்து, மற்றவர்க்கெல்லாம் திருநீறு கொடுத்துவந்தார். அங்ஙனம் கொடுத்து வந்தவர் அந்தணரைப் பார்த்து,]

அப்பர் :—ஐய, உமது மூத்த மைந்தன் எங்கே?

அந்தணர் :—(திடுக்குற்று, பின்னர் மலர்முகம் காட்டி) அவன்......அவன்.........இப்பொழுது.........இங்கு......... உதவான்.

அப்பர் :—என்ன! உதவானா? ஐயரே, உண்மையைச் சொல்லும். அவன் எங்கே? அவனுக்கு என்ன நேர்ந்தது?

அந்தணர் :—(தமக்குள்—இப்பெரியவர் உணவு கொள்ளத் தாமதம் ஆகிறதே! நான் பாவி என்ன செய்வேன்!)

அடிகளே, தாங்கள் என்னைப் பொறுத்தருளவேண்டும். நான் பொய் சொல்லக் கூடவில்லை. அவன் தங்களுக்காக இலை அரியச் சென்றபோது பாம்பு தீண்டி இறந்தான். தாங்கள் உணவுகொள்ளக் காலம் தாழ்க்கலாகாது என்று எண்ணித் தங்கட்கு அதனை அறிவிக்கவில்லை.

அப்பர் :—என்ன ஐயா! எளிய நான் உணவுகொள்ளக் காலம் தாழ்க்கில் என்ன குறை வந்துவிடும்! மைந்தனைக் காட்டுக.

[அடிகள் பாயில் சுருட்டப்பட்டிருந்த மைந்தன் உடம்பைச் சென்று பார்த்தார்; உள்ளம் குழைந்து விடம் நீக்கும் திருப்பதிகம் பாடிச் சிவபெருமானை வேண்டினார். அவ்வளவில் திருவருளால் உறங்கிவிழிப்பவன்போல மைந்தன் எழுந்து அடிகளை வணங்கினான்.]

அப்பர் :—மகனே, திருவருளால் சுகமாக இரு. இப்பொழுது எல்லோரும் அமருங்கள்; இன்பமாக அனைவரும் உண்போம். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

அரும்பொருள்

குரவர் - ஆசாரியர், பல்லவ வேந்தன் - முதலாம் மஹேந்திர வர்மன். நாயேன் - தன்னைத் தாழ்த்திக் கூறும் அடக்கச் சொல். அடிகள் - துறவு பூண்ட பெரியவர். பேறு - பாக்கியம். வாய்ப்பு - சந்தர்ப்பம். பணி - வேலை.

பயிற்சி

I. விடை தருக:—

1. அப்பர் என்பவர் யாவர்? அந்தணர் யாவர்?
2. அப்பர்மீது அந்தணர்க்கு அன்பு தோன்றக் காரணம் என்ன?
3. 'இது வியப்பினும் வியப்பு'.—எது?
4. 'வேறொரு பெயர்' என்று அப்பர் கூறியவுடன் அந்தணர் சினந்து கூறியன யாவை?
5. அப்பர் தம்மை எவ்வாறு வெளிப்படுத்தினார்?
6. வந்தவர் அப்பர் என்பதை அறிந்தவுடன் அந்தணர் என்ன செய்தார்?
7. மூத்த மைந்தன் பாம்பு தீண்டியதைப் பெற்றோர்க்குக் கூறவில்லை.—ஏன்?
8. பெற்றோர் இறந்த மைந்தனை மறைத்தனர்—காரணம் என்ன?
9. பிறகு உண்மை எப்படி வெளிப்பட்டது?
10. இறந்த மைந்தன் எவ்வாறு எழுந்தான்?

II. 1. அந்தணரைப் பற்றிய உமது கருத்தினை 15 வரிகளில் வரைக.
2. அவர் மனைவியாரைப் பற்றிய உமது கருத்தினை 10 வரிகளில் வரைக.
3. மூத்த மைந்தனைப் பற்றிய ,, ,, ,, ,,
4. இவ்வரலாற்றை அப்பர் சொல்லுவதுபோலச் சொல்லுக.

19. செல்வ நிலையங்கள்*

செல்வ நிலையங்களின் தேவை

1. ஒரு நாட்டு மக்கள் தமக்குத் தேவைப்படும் எல்லாப் பொருள்களையும் தாமே உண்டாக்கிக்கொள்ள முடிவதில்லை; சில பொருள்களுக்கேனும் பிற நாடுகளை எதிர்பார்க்க வேண்டுபவராகின்றனர். அவ்வாறே தனக்குத் தேவைப்படும் அரிசி, பருப்பு, பால், தயிர், நெய் முதலிய உணவுப் பொருள்களை ஒவ்வொரு மனிதனும் உண்டாக்குதல் இயலாது. உணவுக்கு அடுத்தபடியில் உள்ள உடைகளுக்குத் தேவைப்படும் துணிகளையும் வாழ்வதற்குத் தேவைப்படும் வீடு முதலியவற்றையும் தானே அமைத்துக்கொள்ள முடியாது. இவற்றை உண்டாக்க ஒவ்வொரு மனிதனுக்கும் போதிய நேரம் இல்லை; பிற வசதிகள் இல்லை. மேலும் ஒருவனே இவை அனைத்தையும் செய்ய முயன்றால் அவனது சக்தி பல வழிகளிலும் செலுத்தப்படும். அப்பொழுது அவன் ஒருதொழிலும் செய்யச் சக்தியுடையவனாக இருத்தல் இயலாது. அதனால்தான் நமது சமூகத்திற்குத் தேவைப்படுவனவற்றை உண்டாக்க ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில் திறமை பெற வேண்டும். இம்முறையிற்றான் ஒரு சமூகத்தினரது தேவைக்குத் தக்கவாறு தொழில்கள் பிரிக்கப்பட்டுப் பொருள்களும் செய்யப்பட்டு வருகின்றன. ஒவ்வொருவரும் தமக்குத் தேவைப்படும் பொருள்கள் அனைத்தையும் தாமே உண்டாக்கிக்கொள்ளாது, தம் பொருளைக் கொடுத்துத் தமக்குத் தேவையான பொருளைப் பெற்றுக் கொள்கின்றனர். இங்ஙனம் பொருள்களை மாற்றிக் கொள்ளும் முறை பண்டமாற்று எனப் பெயர் பெறும். அப்பண்டமாற்றுக்குத் துணையாக உண்டானதே நாணயம் என்பது. இந்நாணயமே பொருளாதார வாழ்க்கைக்கு உயிர்நாடி போன்றது.

2. பணக்காரர் தம் தேவைக்கு மேலாகத் தம்மிடம் உள்ள பணத்தைக் குறைந்த வட்டிக்குப் பாதுகாப்புள்ள

---

* பாங்குள் (Banks)

ஓரிடத்திற் சேர்க்கின்றனர். இங்ஙனம் செல்வர் பலரால் ஓரிடத்திற் சேர்க்கப்படும் பணம் தேவைப்படுபவர்க்குக் குறைந்த வட்டிக்குக் கடனாகத்தரப்படும். இங்ஙனம் பணத்தைச் சேமித்துவைத்துக் கடனாக அளிக்கும் நிலையங்களே செல்வ நிலையங்கள் அல்லது பாங்குகள் எனப்படுவன.

3. நாட்டில் செல்வம் உண்டாக்குதற்கு (1) இயற்கை வளங்கள், (2) முதற்பணம், (3) உழைப்பு என்னும் மூன்றும் இன்றியமையாதவை. பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிகம் முதலிய பொருளாதாரத் துறைகட்கெல்லாம் முதற் பணம் தேவையாகும். அம்முதற் பணத்தை உதவ வல்லவை மேற்சொன்ன செல்வ நிலையங்களே ஆகும். தொழில் வளர்ச்சிக்கும் வாணிக முன்னேற்றத்துக்கும் பயிர்த்தொழில் முற்போக்குக்கும் ஏற்றவாறு உடனே பொருள் ஈந்து உதவி செய்வதே செல்வ நிலையங்களின் சிறப்பு நோக்கமாகும்.

செல்வ நிலையங்களின் நடைமுறை

4. ஒவ்வொரு நாட்டிலும் பலவகை வசதிகளையும் தேவைகளையும் முன்னிட்டுப் பலவிதச் செல்வ நிலையங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சிறப்பானவை தொழில் துறைச் செல்வ நிலையங்கள்[1] ஆகும். இந்தியாவில் இவை கூட்டுச் சேமிப்புச் செல்வ நிலையங்கள்* எனப் பெயர் பெறும். இவற்றின் முதற்பொருள் பலர் சேர்ந்து எடுத்துக்கொள்ளும் பங்குகள் மூலம் சேர்க்கப்பட்டதாகும். பலருடைய பங்குகள் சேர்ந்து அமைக்கப்பட்ட செல்வ நிலையங்கள் ஆதலின், இவை இப்பெயர் பெற்றன.

5. செல்வ நிலையங்கள் மக்களின் சேமிப்பினை ஒன்று சேர்க்கின்றன; வீடு, நிலம் முதலியவற்றின் மீதும், பொன், வெள்ளிப் பொருள்கள் மீதும் கடன் கொடுக்கின்றன; நம்மவர் நடத்தும் அயல் நாட்டு வாணிகத்திற்கு உதவி செய்கின்றன; தங்கள் உறுப்பினர் சார்பில், அவர்களுக்கு வேண்டும் பொருள்களைப் பெற அப்பொருள்களைத் தரும் நிலையங்கட்குப் பணம் கட்டுகின்றன.

6. செல்வ நிலையங்கள் தம்மிடமுள்ள மூலப் பொருளைக்கொண்டும் உறுப்பினர் சேர்த்துவைக்கும் பொருளைக் கொண்டும் வேண்டுபவர்க்குப் பணத்தைக் கடனாகக்

[1] Commercial Banks. * Joint Stock Banks.

கொடுத்து உதவுகின்றன. வாணிகம் - கைத்தொழில் - பயிர்த்தொழில் முதலியவற்றிற்காகப் பணம் கேட்பவர்க்கு அவரவர் தகுதிக்கேற்பக் கடன் கொடுக்கின்றன; சில வேளைகளில் தக்கவர் ஈடாக நிற்க, அவரை நம்பிப் புதியவர்க்குக் கடன் தருகின்றன. ஒவ்வோர் ஆண்டிலும் தமது இலாபத்தொகையைப் பங்குதாரர்க்கு அவரவர் போட்ட பங்குகட்கு ஏற்பப் பிரித்துத் தருகின்றன. இவ்வாறு இலாபத் தொகையைப் பிரித்துக் கொடுக்குமுன், தம் எதிர்கால நலனை உளங்கொண்டு காப்புப் பொருள்[3] உண்டாக்க, இலா

செல்வ நிலையம்

பத்தில் ஒரு பகுதியைத் தனியே வைத்துக்கொள்கின்றன. ஒவ்வொரு செல்வ நிலையமும் ஆண்டுக்கு ஒருமுறை இலாப-நஷ்டக் கணக்கு வெளியிட்டு வருகின்றது.

7. மக்கள் தங்களிடம் எஞ்சி நிற்கும் பணத்தைச் செல்வ நிலையங்களில் வைப்பாக[4] வைக்கின்றனர். இவ்வைப்பு ஒரு குறித்த காலம்வரை எடுப்பதில்லை என்னும் விதிக்கு அடங்குமாயின் நிலைவைப்பு[5] எனப் பெயர்பெறும்-

3 Reserve Fund 4 Deposit 5 Fixed Deposit

செல்வ நிலையங்கள் அந்நிலைவைப்பினை உயர்ந்த வட்டிக்குக் கடன் கொடுத்து இலாபத்தைப் பெறுகின்றன. நிலைவைப்புக் கொடுத்தவர் குறித்த காலத்திற்குப் பிறகு அதனைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். 'கேட்கும் பொழுது கொடுக்கப்படும்' என்னும் விதியின்படி போடப்படும் தொகை அன்றுடக் கணக்கு[6] என்னும் பகுதியில் சேர்க்கப்படும். இப்பகுதியில் போடப்படும் தொகைக்கு மிகக் குறைந்த வட்டியே தரப்படும். இவ்வாறு செல்வ நிலையங்களிற் பணம் போடுபவர் அனைவரும் சேர்ந்து ஒரே சமயத்தில் தமது பணத்தைத் திருப்பித் தருமாறு கேட்பதில்லை. ஆதலால் செல்வ நிலையங்கள் இங்ஙனம் போடப்பட்டிருக்கும் பெருந்தொகையில் ஒரு பகுதியைத் தமது தேவைக்கு வைத்துக்கொண்டு, எஞ்சிய பகுதியைக் கேட்பவர்க்குக் கடனாகத் தருகின்றன.

8. அன்றுடக் கணக்கில் போடப்பட்டுள்ள தொகையிலிருந்து ஒரு பகுதியைப் பெற விரும்பும் உறுப்பினர் அச்செல்வ நிலையம் தம்மிடம் தந்துள்ள 'செக்'[7] புத்தகத்தில் உள்ள இதழ்களுள் ஒன்றில் தமது பெயர், நாள், தாம் பெறவிரும்பும் தொகை (எண்ணிலும் எழுத்திலும்) குறிப்பிட்டுக் கையெழுத்திட்டுத் தந்து, பணத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். செல்வ நிலையத்தில் குமாஸ்தாக்கள் பலர் இருப்பர்; ஒவ்வொருவரும் ஒரு பகுதி வேலையைச் செய்வர்; 'செக்' வாங்கிக் கணக்குப் புத்தகத்திற் பதிந்து கொண்டு ஒரு குறிப்பிட்ட எண் உள்ள செம்பு வட்டத்தைக் கொடுப்பர். நாம கொடுத்த 'செக்' பல கணக்குப் புத்தகங்களிற் பதிவு செய்யப்பட்ட பிறகு பணம் தரும் அலுவலரிடம் கொண்டுவரப்படும். அச்செக்கின்மீது நம்மிடம் தரப்பட்ட செம்பு வட்டத்தின் மீதுள்ள எண் எழுதப்பட்டிருக்கும். அந்த அலுவலர் அந்த எண்ணை உரக்கக் கூறுவர். நாம் நம்மிடம் உள்ள செம்பு வட்டத்தை அவரிடம் கொடுப்பின், அவர் நம் பெயர், தொகை முதலியவற்றை வாய் மொழியாகக் கேட்டுச் சரிபார்த்த பிறகு பணத்தை எண்ணிக் கொடுப்பார்.

6. Current Account 7. Cheque

9. இவ்வாறு நாம் போட்டுள்ள தொகை முழுவதை யும் ஒரே நேரத்திலோ—பல சந்தர்ப்பங்களிலோ 'செக்' எழுதிக்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். செல்வநிலை யம் பொருள்நிலையில் உயர்ந்திருந்து பணம்பெறுபவர் மிக்க நாணயமும் ஒழுங்கும் உடையவராக இருப்பின், அச் செல்வநிலையத்தில் அவரது கணக்கில் உள்ள தொகையை விட மிகுதியான தொகையையும் கேட்டுப் பெறலாம். இங்ஙனம் பெறுவது, பணம் அதிகப்படியாக வாங்குவது [8] என்று சொல்லப்படும். செல்வ நிலையங்களிற் 'செக்' குகள் பயன் படுத்தப்படலால் நாணயங்களின் தேவையும் அவை கைக் குக்கை மாறவேண்டும் தேவையும் குறையும்; சான் ருக ஒன்று கூறுவோம்! சென்னையில் உள்ள 'இந்தியன் செல்வநிலை'யத்தில் அழகுவேலன் என்பவரும் கண்ணன் என்பவரும் பணம்போட்டு வைத்திருக்கின்றனர். கண் ணன் அழகுவேலனிடம் வாங்கின சரக்குகளுக்கு விலையாக இரண்டாயிரம் ரூபாய்களுக்கு இந்தியன் செல்வநிலையத்து க்குச் 'செக்' ஒன்று அழகுவேலனுக்குக் கொடுக்கிறார். பின் னவர் அதனை இந்தியன் செல்வநிலையத்துக்கு அனுப்புகிறார். அந்நிலையத்தார் அதனைப் பெற்றுக்கொண்டு, கண்ணன் கணக்கில் பற்று எழுதி, அழகு வேலன் கணக்கில் இரண் டாயிரம் ரூபாய்களை வரவு வைக்கின்றனர். இவ்வாறு பணம் கைமாருமலே, 'செக்'குகள் மூலம் செல்வநிலையக் கணக்கேடுகளில் வரவு-செலவு செய்யப்பட்டு வாணிகம் நடைபெறுகின்றது.

10. மேற்சொல்லப்பட்ட நிலையங்கள் தவிர கூட்டுறவுச் செல்வ நிலையங்கள்,[9] நாணயமாற்றுச் செல்வ நிலையங்கள் [10] முதலி யன இருந்து வேலை செய்துவருகின்றன. இந்தியாவில் உள்ள இப்பலவகைச் செல்வ நிலையங்கட்கும் தலைமை நிலையம் ஒன்று 1935-இல் நிறுவப்பட்டது. அதுதான் பாது காப்புச் செல்வ நிலையம் [11] (ரிசர்வ் பாங்கு) என்பது. அந் நிலையம் அரசாங்கத்தின் வரவு-செலவுகளைக் கவனிக்கிறது மேற்சொல்லப்பட்ட பலதிறப்பட்ட நிலையங்களின் நடை

8. Overdraft 9. Co-operative Banks 10. Exchange Banks
11. Reserve Bank

முறைகளையும் கவனித்து வருகிறது. நமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உழைப்பதே அதன் சிறந்த நோக்கமாகும்.

அரும்பொருள்

சிறப்பு நோக்கம் - முக்கிய நோக்கம். உறுதிப்பாடு - நிலையாக இருத்தல். அலுவல் - வேலை. அலுவலர் - உத்தியோகஸ்தர்.

பயிற்சி

I. விடை கூறுக:—

1. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலில் திறமை பெறவேண்டும்—ஏன்?
2. பண்டமாற்று, நாணயம் என்பன யாவை?
3. செல்வ நிலையங்கள் என்பன எவை?
4. நாட்டில் செல்வம் உண்டாதற்குத் தேவையான மூன்று எவை?
5. செல்வ நிலையங்களின் சிறப்பு நோக்கம் யாது?
6. செல்வ நிலையங்கள் பலவகைப்படும். அவற்றுட் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
7. செல்வ நிலையங்கள் எவ்வாறு பொதுமக்கட்குத் தொண்டு செய்கின்றன?
8. காப்புப் பொருள், வைப்பு, நிலைவைப்பு—விளக்குக.
9. ஒருவர் செல்வ நிலையத்து அன்றாடக் கணக்கிலிருந்து தாம் பெற விரும்பும் பணத்தை எவ்வாறு பெறுகிறார்?

செல்வ நிலையங்கள் இருத்தலால் தொழில் முதலியவற்றில் நாணயத் தேவை ஓரளவு குறைவுறுகின்றது—இதனை நன்கு விளக்குக.

பாதுகாப்புச் செல்வ நிலையம் என்பது யாது? அதன் வேலை யாது?

யங்களில் அமைக்க:

பற்கை வளம், பண்டமாற்று, உறுதிப்பாடு, செல்வ நிலையம், நதிக்கேற்ப, தேவைப்படுவன.

20. மாணவரும் பொதுநலத் தொண்டும்

1. "கண்ணுடையர் என்பவர் கற்றோர்: முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்னும் தமிழ்மறைக் கூற்றை நோக்க, தமிழ் மறை இயற்றப்பெற்ற காலத்தில் தமிழ் நாட்டினர் கல்வியை எங்ஙனம் போற்றி வந்தனர் என்பது நன்கு தெரிகின்றது. சங்க காலத்தில் நமது தமிழ் நாட்டில் குறவர், வேட்கோவர், பாணர் மரபினைச் சேர்ந்த பெண்மணிகளும் கல்வி கற்றுக் கவிபாடும் ஆற்றல் பெற்று முடியுடை மூவேந்தராலும் சிறப்பிக்கப் பெற்றனர் என்பதைச் சங்க நூல்களால் அறியலாம். சுருங்கக் கூறின், அக்காலத்தில் அரசன் முதல் ஆண்டி ஈறாக இருந்த அனைவரும் ஆடவரும் பெண்டிரும் கல்வியைக் கருந்தனமாகக் கருதிப் போற்றினர். பாணர் மரபினைச் சேர்ந்த ஔவையார் அரசியல் தூதராக விளங்கினர். குறமகள் இளவெயினி, வெண்ணிக் குயத்தியார் போன்ற பெண்மணிகளின் பாக்கள் அவர்தம் புலமையின் உயர்நிலையை உள்ளவாறு உணர்த்துவனவாகும்.

2. இங்ஙனம் கல்வியைச் சிற்றுயிர்க்கு உற்றதுணையாகக் கருதிப் போற்றி வந்த சங்க காலத் தமிழர் மரபில் வந்துள்ள இன்றைய தமிழருள் எத்துணையர் படித்தவராக இருக்கின்றனர்? ஏறத்தாழ நூற்றுக்குப் பதின்மர் அல்லது பன்னிருவரே எழுதப்படிக்க அறிந்தவர்; ஏனையோர் எழுத்தறிவு இல்லாதவர். கல்வி இல்லாதவர்க்கு உலகியல் அறிவு சிறந்திருக்க வழியில்லை; தம் நாடு எங்ஙனம் ஆளப்படுகிறது, நாட்டுக் குடிமக்களாகிய தங்கள் கடமைகள் எவை, அரசாங்க அலுவலர் பொதுமக்களுக்கு உதவி செய்ய இருப்பவரே அன்றிப் பொதுமக்களை மிரட்டி ஆணை செலுத்துபவர் அல்லர் என்பன போன்ற நாட்டு நடப்புச் செய்திகளை அறிந்து தம் உணர்ச்சியுடன் நடந்துகொள்ள அறியாத நிலையில் இருக்கின்றனர். இங்ஙனம் இருப்பவர் தொகை நாட்டில் மிகுதி எனின், அந்நாடு பொருளாதாரத் துறையிலோ—கலைத்துறையிலோ—தொழில் துறையிலோ—நாகரிகத் துறையிலோ எங்ஙனம் சிறந்திருக்கக் கூடும்? கல்வியறிவற்ற மக்கள்

14784

மூடக் கொள்கைகட்கும் மூட நம்பிக்கைகட்கும் புகலிடமாக இருக்கின்றனர்; எதுவும் தெய்வத்தின் தொடர்பால் நடப்பது என்னும் நம்பிக்கை பெற்றுச் சுகாதாரம், ஆராய்ச்சி இவற்றுக்குக் கேடு சூழ்கின்றனர். இம் மக்களைப் பெரும்பாலராகக் கொண்டுள்ள நமது சமூகத்தில் முன்னேற்றத்தை எதிர்பார்த்தல் முயல் தலையில் கொம்புகளை எதிர்பார்த்தலை ஒக்கும்.

3. நமது சமூகம் நல்லறிவு பெற்று நாகரிகப் பாதையில் செல்ல வேண்டுமாயின், எல்லோருக்கும் கல்வி

தாழ்த்தப்பட்டவர்க்குத் தொண்டு

யறிவு புகட்டப்படல் வேண்டும். நமது மாகாண அரசாங்கத்தார் கிராமந்தோறும் பள்ளிகளைத் திறக்க முயன்று வருகின்றனர். முதியோர்க்குக் கல்வி கற்பிக்கத் திட்டமிட்டு வருகின்றனர். இவ்விரு முயற்சிகளும் பாராட்டுக்குரியன. ஆயின் சமூகத்தில் உள்ள படித்த பெரியவரும் மாணவரும் ஓரளவு முயன்று பொதுமக்கட்குக் கல்வியறிவு ஊட்டுவது நல்லது. மாணவர் தங்கள் ஓய்வு நேரங்களில் கிராம மக்களைக் கூட்டி அவர்கட்கு எழுத்தறிவித்தல், நாட்டு நடப்புகளை விளக்கிக் கூறல், கைத் தொழில், உழுதொழில்

பற்றித் தாங்கள் படித்துள்ளவற்றைக் கூறுதல், சுகாதார முறைகளை வற்புறுத்தல் முதலியன செய்யலாம்.

4. இந்தியாவில் தாழ்த்தப்பட்டிருப்பவர் தொகை ஏறத்தாழ ஒன்பது கோடியாகும்; அஃதாவது இந்திய மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ நான்கரையில் ஒரு பகுதியாகும். இந்தப் பெரிய எண்ணிக்கையுடைய மக்கள் இனம், பிற மக்களுடன் நெருங்கிப் பழக வழியின்றி, ஊர்ப்புறங்களில் தனிப்பட்டு வாழ்தலும், சமூக நலன்கள் அளிக்கப்படாதிருத்தலும், உயர் வகுப்பினர்



சாரணர் பொதுநலத் தொண்டு

ஒத்துழைப்பின்றி அவர்கள் முன்னேற்றப் பெறுதிருப்பதும் நமது சமூகத்துக்குக் கேடே அன்றி நன்மையாகாது. மாணவர் இந்த உண்மையை நன்கு உணர்ந்து பொதுமக்கட்கு உணர்த்துவதுடன், சேரிகளிற் புகுந்து தாழ்த்தப்பட்ட மக்களுடன் நெருங்கிப் பழகி, அவர்கட்கு இலவசக்கல்வி கற்பித்தல், கைத்தொழில்களில் அறிவை உண்டாக்குதல் முதலிய துறைகளில் தொண்டு செய்ய வேண்டும்; அத்தொண்டினை ஆண்டவனுக்குச் செய்யும் திருத்தொண்டாகக் கருதவேண்டும்.

5. பள்ளிகளில் சாரணர் இயக்கம் நடைபெற்று வருகிற தன்றோ? மாணவர் அனைவரும் அவ்வியக்கத்திற் சேர்ந்து பொதுநலத் தொண்டுகளை நன்கறியவேண்டும். விழாக் காலங்களிலும் பெரிய மாநாடுகள் நடை பெறும் சமயங் களிலும் மாணவர் தொண்டர்களாக இருந்து, பொது மக்களைக்குறித்த இடத்திற்கு வரிசையாக ஒரு வழியிற் போகச் செய்தல்—மறுவழியில் வரச்செய்தல்—கூட்டங் களிற் களவு நடவாமற் பார்த்துக் கொள்ளல்—குழப்பம்,



செஞ்சிலுவைச் சங்கத்தார் பொதுநலத் தொண்டு

சண்டை விளைவிப்பவரைப் போலீசாரிடம் ஒப்புவித்தல்—பெற்றோரை விட்டுப் பிரிந்து அல்லற்படும் பிள்ளைகளைப் போலீசாரிடம் ஒப்படைத்தல், ஏதேனும் விபத்திற்குள் ளானவர்க்கு முதல் உதவி செய்தல் போன்ற பலவகை உதவிகளைச் சாரணர் மனமகிழ்ச்சியுடன் செய்யலாம். இவை மாணவர் செய்யத்தகும் சிறந்த தொண்டாகும். 'பிறர்க்குத் தொண்டு செய்வதே பேரின்பம்' என்னும் பொன்மொழியை மாணவர் நடைமுறையிற் செய்து இன்ப முறுதல் வேண்டும். இத்தகைய திருப்பணிகளால் மனி

தப்பற்று வேரூன்றும்; சாதிவேறுபாடுகள் மறைந்தொழியும்; 'அனைவரும் ஓர் இனம்' என்னும் நல்லெண்ணம் சமூகத்தில் தோன்றி வளர்ச்சி பெறும். இந்தத் தூய உணர்ச்சியே நமது சமுதாய வளர்ச்சிக்கு உயிர் நாடியாக இருக்க வேண்டுவது.

6. மனிதர்க்கு உழைக்கும் சங்கங்களில் செஞ்சிலுவைச் சங்கம் ஒன்றாகும். அது முதல் உதவிசெய்தல், நோய்களைத் தடுத்தல், நோயாளர்க்கு உதவி புரிதல், நில நடுக்கம், சுழல் காற்று, தீக்கோள் முதலிய துன்பங்களிலிருந்து மக்களைக் காத்தல் முதலிய திருப்பணிகளைச் செய்கிறது; போர்க் காலங்களில் போர்முனையில் இருந்து, காயம்பட்ட வீரர்க்கு மருத்துவ உதவி அளிக்கின்றது. அச்சங்கத்தினின்றும் மாணவர்க்குரிய செஞ்சிலுவைச் சங்கம் கிளைத்தது. இச் சங்கம் நாடு-சமயம்-சாதி வேறுபாடற்றது; மக்களாகப் பிறந்தவர் அனைவர்க்கும் உதவி புரிவதே இதன் நோக்கம். மாணவர் தம் உடல் நலம் பேணல், பள்ளிகளைத் துப்புரவாய் வைத்துக்கொள்ளல், பிற மாணவர்கட்கு உதவி புரிதல், பொது மக்கட்கு நலம்புரிதல், நோயாளிகளைக் கவனித்தல் முதலிய துறைகளில் பயிற்றப் படுகின்றனர். ஆதலின், பள்ளி மாணவர் அனைவருமே இச்சங்கத்திற் சேர்ந்து பயிற்சி பெறுதல் இன்றியமையாதது.

7. சைக்கில் வண்டி, மோட்டார் வண்டிகளில் தாக்கப் படுபவர் தொகை இப்பொழுது மிகுதிப்பட்டு வருகிறது. அவர்கட்கு உடனே முதல் உதவி அளித்துச் செஞ்சிலுவைச் சங்க வண்டியில் அவர்களை ஏற்றி மருத்துவக் கூடம் கொண்டுசெல்ல மாணவர் பயிற்சிபெற வேண்டும். பாதையிற் கிடக்கும் கண்ணாடித் துண்டுகள், ஆணிகள் முதலியவற்றை அப்புறப்படுத்த வேண்டும்; அறிவற்ற மக்கள் பூசலிடுங் காலத்துச் சோடா புட்டிகளால் அடித்துக் கொள்வர். அவை உடைந்து தெருவிற் பரவிக் கிடக்கும். அவை பொது மக்கட்கு இழைக்கும் ஊறு மிகப் பெரிது அத்தகைய இடங்களில் செஞ்சிலுவைச் சங்க மாணவர் இருந்து, போர் முடிவுற்று அமைதி ஏற்பட்ட பின்னர்க் கண்ணாடித் துண்டுகளை எடுத்து அப்புறப்படுத்தல் மிகச்

சிறந்த தொண்டாகும்; திருவிழாக் காலங்களில் சாரணருடன் கலந்து தொண்டு செய்தல் சாலச் சிறப்புடையது. சுருங்கக் கூறின், இத்துறைகளில் உண்மையாகப் பாடுபடும் மாணவர் தூயவுள்ளம் பெறுவர்; நல்ல பழக்கங்களைப் பெறுவர்.

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாது வேறொன் றறியேன் பராபரமே!"

என்ற தாயுமானவரது பொன்மொழிகளே அவர்களது தூயவுள்ளத்தில் நிலைத்து நிற்கும்.

அருப்பொருள்

தமிழ் மறை - திறக்குறள், வேட்கோவர் - மட்பாண்டத் தொழிலாளர், வேள்-களிமண், கருந்தனம் - சிறப்புச் செல்வம், வெண்ணி - தஞ்சை ஜில்லாவில் உள்ள ஓரூர்.

பயிற்சி

I. விடை கூறுக:—

1. கற்றவர்-கல்லாதவரைப் பற்றித் தமிழ்மறை யாது கூறுகிறது?
2. சங்க நூல்களால் அறியப்படும் பழங்காலக் கல்விநிலை யாது?
3. கல்லாதவர் எவற்றை அறியாதவர்?
4. கல்லாதவர் மிக்குள்ள நாடு எவற்றிற் சிறந்திருத்தல் இயலாது?
5. 'முயல் தலையில்கொம்புகளை எதிர்பார்த்தலை ஒக்கும்'—எது? ஏன்?
6. 'இவ்விரு முயற்சிகளும் பாராட்டுக்குரியன'—இரண்டு எவை?
7. மாணவர் கிராமங்களில் எவ்வாறு தொண்டு புரியலாம்?
8. தாழ்த்தப்பட்டவர் நிலைமை யாது? அஃது எங்ஙனம் சமூகத்துக்குக் கேடாகும்?
9. சாரண மாணவர் பொதுமக்கட்குச் செய்யத் தகும் உதவிகள் எவை?
10. அவற்றால் சமுதாயம் பெறும் நன்மை என்ன?
11. செஞ்சிலுவைச் சங்கம் என்பது யாது?
12. சிறுவர் செஞ்சிலுவைச் சங்க வேலைகள் எவை?
13. தாயுமானவர் கூற்று யாது?
14. அக்கூற்றின் பொருள் என்ன?

II. நீவிர் அறிந்த மாணவர் கழகம் ஒன்று செய்துவரும் பொதுநலத் தொண்டுகளைக் குறிப்பிடுக.

III. சாரணர் இயக்கம், சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம்—இவற்றைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

செய்யுட் பகுதி

I· கடவுள் வாழ்த்து

சிவபெருமான்

1. வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே

—மணிவாசகர்

திருமால்

2. வந்தாய்என் மனம் புகுந்தாய்; மன்னிநின்றாய்;
நந்தாத கொழுஞ்சுடரே! எங்கள் நம்பீ!
சிந்தா மணியே! திருவேங் கடமேய
எந்தாய்! இனியான் உனைஎன் றும் விடேனே.

—திருமங்கையாழ்வார்

இயேசுநாதர்

3. அன்புநெறி சிறந்ததென
அகிலமுணர்ந் துய்ய
ஆண்டவனே! என்செய்தாய்!
அதைநினைந்தால் அந்தோ!
என்புருகும்: உயிருருகும்
எண்ணமெலாம் உருகும்;
எம்மொழியால் இயம்பவல்லேன்
ஏழைமகன் அப்பா!
மண்ணுலகில் அவதரித்தாய்;
மக்களிடை வதிந்தாய்;
மறைமொழிந்தாய்; அவ்வளவில்
மனம்நிறைய இலையோ?
பொன்னுடலை வதைத்துவிட்டாய்;
பொலியுயிரை நீத்தாய்;
பொறைஅன்பு நீஎன்னும்
பொருண்மைதெளிந் தேனே.

—திரு வி கலியாண சுந்தரனார்

மகம்மது நபி

4. அரபிய நாட்டில் தோன்றி ஆண்டவன் ஒருவன் என்னும்
மரபினை வாழச் செய்த மகம்மது நபியே போற்றி
தரையினில் பொதுமை மல்கிச் சகோதர நேயம் ஓங்கக்
கரவிலா மறையைத் தந்த கருணையே போற்றி போற்றி.

—திரு. வி. கலியாண சுந்தரனார்

அரும்பொருள்

1. மணிவாசகர் சைவசமய குரவருள் ஒருவர்; பாண்டியனிடம் அமைச்சராக இருந்தவர். இவர் காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு. இவர் பாடிய திருவாசகம் உள்ளத்தை உருக்குவதாகும்.

வளி—காற்று.

2. திருமங்கையாழ்வார் - ஆழ்வார் பன்னிருவருள் ஒருவர்; கி. பி. எட்டாம் நூற்றாண்டினர். இவர் பாடல்கள் அழகும் பக்தியும் கொண்டவை. நந்தாத - குறையாத. நம்பி - ஆடவருட் சிறந்தவன் × நங்கை பெண்களிற் சிறந்தவள். எந்தாய் - என் அப்பனே.

3. திரு. வி. கலியாண சுந்தரனார் சிறந்த தமிழ்ப் பெரியார். இவர் சமரச சன்மார்க்க நெறியினர்; பல பாக்களைப் பாடியுள்ளவர்; எளிய - இனிய உரை நடை நூல்கள் பல எழுதிப் பெயர் பெற்றவர்; பல நூல்களைப் பதிப்பித்தவர்; இனிய தமிழில் உணர்ச்சி மிகுமாறு பேசும் ஆற்றல் பெற்றவர். மதத்தைப் பரப்பிய பெரியார்களைக் கடவுளர் நிலையில் வைத்து வாழ்த்துக் கூறல் மரபு என்பதை அறிக.

அகிலம் - உலகம். ஏழை - அறிவில் ஏழை. வதிந்தாய் - வசித்தாய். மறை - வேதம்; அறவுரை. பொருண்மை - பொருள். பொறுமை, அன்பு என்னும் இரண்டே இயேசு நாதர்.

4. நபி அவர்கட்குமுன் அரேபியாவில் பல தெய்வ வணக்கம் இருந்தது; கரவு - வஞ்சனை. மறை - வேதம், (குர் - ஆன்)

II. இயற்கை அழகு

1. மாலை அழகு

[அர்ச்சுனன் திரௌபதிக்கு மாலையில் மறையும் சூரியன் எழிலையும் அந்திவான அழகையும் சிறப்பித்துக் கூறும் பகுதி.]

1. "பாரடியோ, வானத்திற் புதுமை எல்லாம்
பண்மொழீ! கணந்தோறும் மாறி மாறி
ஓரடிமற் றோரடியோ டொத்த லின்றி
உவகையுற நவநவமாத் தோன்றும் காட்சி ;
யாரடிஇங் கிவைபோலப் புவியின் மீதே
எண்ணரிய பொருள்கொடுத்தும் இயற்ற வல்லார்?
சீரடியார் பழவேத முனிவர் போற்றும்
செழுஞ்சோதி வனப்பையெல்லாம் சேரக் காண்போம்."

2. "அடிவானத் தேஅங்குப் பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்;
இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து ;
முடிவான வட்டத்தைக் காளி ஆங்கே
மொய்குழலாய்! சுழற்றுவதன் மொய்ம்பு காணாய் ;
வடிவான தொன்றாகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய்."

3. "அமைதியொடு பார்த்திடுவாய் மின்னே! பின்னே
அசைவுறுமோர் மின்செய்த வட்டு; முன்னே
சமையுமொரு பச்சைநிற வட்டம் காண்பாய் ;
தரணியிலிங் கிதுபோலோர் பசுமை உண்டோ ?
இமைகுவிய மின்வட்டின் வயிரக் கால்கள்
எண்ணில்லா திடையிடையே எழுதல் காண்பாய்
உமைகவிதை செய்கின்றாள் ; எழுந்து நின்றே
உரைத்திடுவோம் 'பல்லாண்டு வாழ்க' என்றே."

—சுப்பிரமணிய பாரதியார்

அரும்பொருள்

1. பண்மொழி - பண்போல இனிய மொழிகளைப் பேசுபவளே. சீரடியால் - சிறந்த அடிகளைக்கொண்ட சுலோகங்களால்.

2. பரிதி - சூரியன். மொய்குழலாய் - நெருங்கியடர்ந்த கூந்தலை உடையவளே. மொய்ம்பு - வலிமை.

3. மின்னே - மின்னல் போன்றவளே, உவமை ஆகுபெயர். வட்டு - வட்டப் பொருள். சமையும் - அமையும். உமை - உமாதேவி.

2. பொதியமலைச் சிறப்பு

1. திங்கள்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை [னப்
அங்கயற்கண் அம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெ
பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே.

2. மந்தமா ருதம்வளரும் மலைஎங்கள் மலையே;
வடகலைதென் கலைபயிலும் மலைஎங்கள் மலையே;
கந்தவேள் விளையாடும் மலைஎங்கள் மலையே;
கனகநவ மணிவிளையும் மலைஎங்கள் மலையே;
இந்தமா நிலம்புரக்கும் அங்கயற்கண் அம்மை
இன்பமுறுந் தென்பொதிய மலைஎங்கள் மலையே.

3. சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்;
சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடுமங் கொருபால்;
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்;
விடஅரவும் மடமயிலும் விளையாடும் ஒருபால்;
அங்கண்மா நிலம்கவிக்கும் வெங்கவிகை நிழற்கீழ்
அம்பொன்முடி சூடுமெங்கள் அபிடேக வல்லி
செங்கமலப் பதம்பரவும் கும்பமுனி பயிலும்
தென்பொதிய மலைகாண்மற் றெங்கள்மலை அம்மே.

—குமரகுருபர சுவாமிகள்

அரும்பொருள்

குமரகுருபரர் சைவவேளாளர்; கி. பி. 17-ஆம் நூற்றாண்டினர்; மதுரையை ஆண்ட திருமலைநாயக்கர் விருப்பப்படி மீனாக்ஷியம்மை குறத்தைப்பாடி அதற்குப் பரிசாக இருபதினாயிரம் பொன் வருவாயுடைய அரியநாயகிபுரத்தைப் பெற்றார். அக்குறத்தில் ஒரு பகுதியே இங்குத் தரப்பட்டுள்ளது குறத்தி தன் நாட்டு மலைவளத்தையும் தன் வாழிடத்தையும் தன் தொழிலையும் கூறுகிறாள்.

மீனாக்ஷி - மீன்போன்ற கண்ணி, உவமைத் தொகை. குறம் - குறத்தி - தன்மலைவளம், தன்தொழில் முதலியன கூறிக் கேட்போர்க்குக் குறி கூறுவதாகச் செய்யப்படும் செய்யுள் நூல்.

1. தமிழ் முனிவன் - அகத்தியன். கயற்கண் - கயல்மீன் போன்ற கண். தூங்கும் - தொங்குவது போல் பாயும்.

2. களிறு - ஆண் யானை. பிடி - பெண் யானை, வடகலை - சம்ஸ்கிருதம். தென்கலை - தமிழ், கந்தவேள் - முருகன். கனகம் - பொன். நவமணி - கோமேதகம், நீலம், பவளம், மரகதம், மாணிக்கம், முத்து, புஷ்பராகம், வைடூரியம் வைரம்.

3. வெங்களிறு - கொடிய ஆண் யானை. பிணை - பெண்மான். மரை - ஒருவகை மான். வெம் - (யாவரும்) விரும்பும். கவிகை - குடை. அபிடேகவல்லி - மதுரையில் தடாதகைப் பிராட்டியாக முடிசூடிக்கொண்ட மீனாக்ஷியம்மை.

III. நீதி

1. பழமொழி

கல்விச் சிறப்பு

1. ஆற்றவும் கற்றார் அறிவுடையார்; அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை;—அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம்; ஆயினால்,
ஆற்றுணா வேண்டுவ தில்.

அறிவே சிறந்தது

2. அறிவினால் மாட்சி ஒன்றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனாம் ?—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணிஎல்லாம் ஆடையின் பின்.

முதலில் தம்மை உணர்க

3. தங்குற்றம் நீக்கலர் ஆகிப் பிறர்குற்றம்
எங்கேனும் தீர்த்தற்கு இடைபுகுதல்—எங்கும்
வியன்உலகில் வெள்ளாடு நன்வளி தீரா(து)
அயல்வளி தீர்த்து விடல்.

தன் வாயால் தானே கெடுதல்

4. பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும் ;—நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும்தன் வாயால் கெடும்.

கெட்டார்க்கு நட்டார் இல்லை

5. முட்டின்(று) ஒருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே ;
கட்டலர்தார் மார்ப! கலிஊழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல்.

தான் உயரத் தானே காரணம்

6. எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குத் துணையாவார் தாம்தெரிதல் வேண்டா ;
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோ? மற்றில்லை.
தமக்கு மருத்துவர் தாம்.

அற்பரிடம் அதிகாரம் கொடார்

7. உடைப்பெருஞ் செல்வத்(து) உயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்தன் ஆகி—நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

தன் வலிமை இல்லார் புகழ் எய்தார்

8. வன்சார்(பு) உடையர் எனினும், வலிவெய்து
தம்சார்(பு) இலாதாரைத் தேசுன்றல் ஆகுமோ?
மஞ்சுசூழ் சோலை மலைநாட! யார்க்கானும்
அஞ்சுவார்க் கில்லை அரண்.

—முன்றுறை அரையனுர்

அரும்பொருள்

ஆசிரியர் பாண்டிய நாட்டு 'முன்றுறை' என்னும் ஊரின் அரசர்; சமண சமயத்தினர்; ஏறத்தாழக் கி. பி. 6-ஆம் நூற்றூண்டினர் என்னலாம். ஒவ்வொரு செய்யுளின் கடையிலும் ஒவ்வொரு பழமொழியைப் பெற்ற நானூறு செய்யுட்களைக் கொண்டதால் இந்நூல் 'பழமொழி நானூறு' எனப் பெயர் பெற்றது.

1. ஆற்றவும் - மிகவும். வேற்று - வேறு. ஆறு - வழி உணு - உணவு. ஆறு + உணு. தமவே - தம்முடையனவே.

2. மாட்சி - பெருமை. மாண்டல் - சிறத்தல், மாண் - பகுதி. எவன் - என்ன பயன்? பொறித்தல் - அழகு பெறச் செய்தல். மணி - இரத்தின நகை. பொன் - பொன் நகை. சாந்தம் - சந்தனம். அணி - நகை.

3. நீக்கலர் - நீக்காதவர். எதிர்மறை வினையாலணையும் பெயர். இடைப் புகுதல் - செல்லுதல். வியன் - பெருமை. வளி - வாத நோய். வெள்ளாட்டுப் பால் வாத நோய்க்கு ஏற்றது.

4. துயர்ப் படுக்கும் - துன்பத்தில் அகப்படுக்கும். நுணல் - தவளை. வாயால் - தன் குரலைக் காட்டித் தன் வாயாலே (தன்னைப் பகைவர்க்கு அகப்படுத்தும்).

5. முட்டு - குறைவு. உடைய - செல்வமுடைய. அட்டில் - சமையல் செய்த உணவு. ஆயிரவர் - பலர். கட்டு அலர்தார் - கட்டிய பூமாலை, முறுக்கு அவிழும் மலர் மாலை; கலியூழி - கலி யுகம். நட்டார் - நண்பர்.

6. தெரிதல் - தேடல், ஆராய்தல். மருத்துவர் - வைத்தியர்

7. உடைப் பெருஞ் செல்வம் - உடைமை மிக்க செல்வம். நடக்கையின் - ஒழுக்கத்தால். ஒள்ளியன் - சிறந்தவன். அல்லான் - அல்லாதவன்.

8. வன் சார்பு உடையார் - வலியாரைத் துணைக் கொண்டவர். பெய்து - உண்டாக்குவித்து. தம் சார்பு - தம் பலம். தேசு - புகழை. (உண்டாக்கும் செயல்). மஞ்சு - மேகம். 'தம்பலம் கொண்டு அம்பலம் ஏறவேண்டும்' என்பது பழமொழி. மஞ்சு... மலைநாட - ஆடூஉ முன்னிலை.

2. நாலடியார்

ஊக்கம்

1. நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.

ஒப்புரவு

2. அழன்மண்டு போழ்தின் அடைந்தவர்கட் கெல்லாம்
நிழன்மரம்போல் நேரொப்பத் தாங்கிப்—பழுமரம்போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

கல்வி

3. கல்விகரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல;—தெள்ளிதின்
ஆராய் தமைவுடைய கற்பவே, நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

4. இம்மை பயக்குமால், ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால், தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாம்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து.

புலவர்

5. களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

மேலோர்

6. அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மன்—திங்கள்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்.

7. இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்ரு வொழுக்கமாய்க் கொண்டார் கயவரோ(டு)
ஒன்ரு வுணரற்பாற் றன்று.

நட்பு

8. யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய்.

-சமண முனிவர்

அரும்பொருள்

இந்நூல் சிறந்த நீதிகளைக் கூறுவதாலும் நாலடி வெண்பாக்களால் ஆனதாலும் 'நாலடியார்' என்று வழங்கலாயிற்று. இதன் கண் நானூறு வெண்பாக்கள் உள்ளன. இதனைச் சமண முனிவர் பலர் பாடினர் என்பர். இந்நூலின் காலம் சுமார் கி. பி. 6-ஆம் நூற்றூண்டு என்னலாம்.

1. நிறுப்பானும் - வைப்பவனும். தலை ஆக - முக்கியமாக. ஒவ்வொருவரின் உயர்வு தாழ்வுகளுக்கு அவரவ்ரே காரணம்.

2. அழல் மண்டு போழ்தின் - வெயில் வெப்பம் மிகுந்த காலத்தில். பழுமரம் - பழுத்துள்ள மரம். பயன்துய்ப்ப - தன்னிடத்திலுள்ள பயனை அனுபவிக்கும்படி.

3. மெல்ல நினைக்கின் - விரைவின்றி ஆலோசித்துப் பார்த்தால். தெள்ளிதின் - தெளிவாக. அமைவுடைய - சாரமாகவுள்ள அறிவு நூல்களையே. பால் உண்குருகின் - பாலை மாத்திரம் உண்ணும் அன்னப் பறவை போல.

4. பயக்கும் - தரும். தாம் உளர் ஆ கேடு இன்று - தாம் உயிருள்ளவராக வாழும்வரை அழிவில்லை. மம்மர் - மயக்கம்; அறியாமையாகிய நோய். எம்மை - எத்தன்மையான.

5. களர் நிலம் - உவர் நிலம். விழுமிது ஆ - சிறப்பாக. கடைநிலத்தோர் - இழிவான சாதியிற் பிறந்தோர். தலை நிலம் - மேன்மையான இடம்.

6. அம் கண் விசும்பின் - அழகிய இடத்தையுடைய ஆகாயத்திலே இருந்து. அகல் நிலா பாரிக்கும் - பரந்த நிலவை வீசு

இற. மன் ஒப்பர் - பெரும்பாலும் தம்மில் ஒத்திருப்பர். மறு ஆற்றும் - களங்கத்தைத் தான் பொறுக்கும். அஃது - களங் கத்தை. மாசு - களங்கம். தெருமந்து - மனங்கலங்கி.

7. இருக்கை - ஆசனம். எதிர் செலவு - எதிர் கொண்டு சென்று அழைத்துவரல். ஏனை - இன்னமும். விடுப்ப ஒழித லொடு - அவர்கள் விடை கொடுக்கத் தாம் பிரிதலும். கயவர் - மூடர்கள்.

8. ஒரீஇ - விட்டு. கேண்மை - நட்பு. கெழீஇக்கொ ளல் - சேர்த்துக்கொள்ளுதல். மெய்யது ஆ - உடலில் தைத் திருந்தாலும்.

3. அறநெறிச் சாரம்

அறம்

1. மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம்
செம்மை யொன்றின்மை துறவுடைமை—நன்மை
திறம்பா விரதந் தரித்தலோ டின்ன
அறம்பத்தும் ஆன்ற குணம்.

2. இன்சொல் விளைநிலமா, ஈதலே வித்தாக,
வன்சொற் களைகட்டு, வாய்மை யெருவட்டி,
அன்புநீர் பாய்ச்சி, அறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

ஒழுக்கம்

3. பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்.
சிலகற்றார் கண்ணும் உளவாம், பலகற்றார்க்(கு)
அச்சாணி யன்னதோர் சொல்.

4. தனக்குத் தகவல்ல செய்தாங்கோ ராற்றால்
உணற்கு விரும்புங் குடரை—வனப்புற்ற
ஆம்பற்றாள் வாடலே போல அகத்தடக்கித்
தேம்பத்தாம் கொள்வ தறிவு.

ஞானம்

5. போற்றியே போற்றியே யென்று புதுச்செல்வம்
தோற்றியார் கண்ணெல்லாம் தொண்டேபோல் - ஆற்றப்
பயிற்றிப் பயிற்றிப் பலவுரைப்ப தெல்லாம்
வயிற்றுப் பெருமான் பொருட்டு.

தானே தனக்குக் கரி

6. தானே தனக்குப் பகைவனு நட்டானும்;
தானே தனக்கு மறுமையும் இம்மையும்;
தானேதான் செய்த வினைப்பயன் துய்த்தலால்;
தானே தனக்குக் கரி.

பொருளாய சுற்றத்தார்

7. நல்லற மெந்தை; நிறையெம்மை; நன்குணரும்
கல்வியென் தோழன்; துணிவெம்பி;—அல்லாத
பொய்ச்சுற்றத் தாரும் பொருளோ? பொருளாய
இச்சுற்றத் தாரி லெனக்கு.

8. தன்னைத்தான் நெஞ்சங் கரியாகத் தானடங்கின்
பின்னைத்தா னெய்தாப் பயனில்லை—தன்னைக்
குடிகெடுக்கு நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யின்
பிடிபடுக்கப் பட்ட களிறு.

—முனைப்பாடியார்

அரும்பொருள்

இந்நூல் காட்சி, ஒழுக்கம், ஞானம் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டது; 226 வெண்பாக்களை உடையது. இதன் ஆசிரியர் தென் ஆர்க்காடு ஜில்லாவில் உள்ள 'முனைப்பாடி' என்னும் ஊரினர் ஆதலால் 'முனைப்பாடியார்' எனப் பெயர் பெற்றார் இவர் காலம் சுமார் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு என்பர்;

1. பொறையுடைமை - பொறுமை. ஒன்றின்மை - பக்ஷபாதமின்மை. திறம்பா - நெறிதவறாத. ஆன்ற - பெரிய.

2. அறப்பயிர் விளைவிக்கும் விதம் இங்குக் கூறப்பட்டது. களைகட்டு - களைநீக்கி. அட்டி - சொரிந்து. பைங்கூழ் - பயிர். சிறுகாலை - இளமையிலேயே.

3. அலர்கதிர் ஞாயிறு - விளங்குகின்ற கிரணங்களையுடைய சூரியன். அச்சாணி - தேர் முதலியவற்றின் கடையாணி.

4. ஓர் ஆற்றல் - ஒரு வகையால். குடர் - குடல். ஆம்பல் அல்லி. தேம்ப - வாட; மெலிய.

5. போற்றியே - துதிக்கப்படுவீராக. தோற்றியார் - படைத்தவர். தொண்டே போல் - அடியான் போல்.

6. நட்டான் - நண்பன். துய்த்தல் - அனுபவித்தல். கரி - சாக்ஷி.

7. எந்தை - என் அப்பன். எம்மை - என் அம்மை. துணிவு- எம்பி - தைரியம் என் தம்பி. பொருளாய - உண்மைப் பொருளாகிய.

8. கரி - சாக்ஷி. குற்றேவல் - தொண்டு. பிடி - பெண்யானை. களிறு - ஆண்யானை.

4. ஆசாரக் கோவை

வாய் பூசலாக இடங்கள்

1. நடைவரவு நீரகத்து நின்றுவாய் பூசார்
வழிநிலை நீருள்ளும் பூசார் மனத்தால்
வரைந்துகொண் டல்லது பூசார் காலத்தினாற்
பெய்பூச்சுச் சீரா தெனின்.

காட்சியவர் நற்செயல்

2. சுடரிடைப் போகார் சுவர்மே லுமியார்
இடரெனினு மாசுணி கீழ்தம்மேற் கொள்ளார்
படைவரினு மாடை வளியுறைப்பப் போகார்
பலரிடை யாடை யுதிராரே யென்றுங்
கடனறி காட்சி யவர்.

சிந்திக்கலாகாதவை

3. பொய்குறளை வெளவல் அழுக்கா றிவைநான்கு
மையந்தீர் காட்சியார் சிந்தியார்—சிந்திப்பி
னையம் புகுவித் தருநிரயத் துய்த்திடுந்
தெய்வமுஞ் செற்று விடும்.

நெறிப்பட்டார் பயிலாதன

4. தெறியோடு கல்லேறு வீளை விளியே
விகிர்தங் கதங்கரத்தல் கைபுடை தோன்ற
உறுப்புச் செகுத்தலோ டின்னவை யெல்லாம்
பயிற்றார் நெறிப்பட் டவர்.

நோய் வேண்டாதார் செய்யலாகாதவை

5. பார்ப்பனையுந் தேவ குலனுஞ் சுடுகாடும்
ஊரில் வழியெழுந்த வொற்றை முதுமரனுந்
தாமே தமியர் புகாஅர் பகல்வளரார்
நோயின்மை வேண்டு பவர்.

பிறர் ஓரிடம் புறப்படுகையிற் செய்யலாகாதவை

6. எழுச்சிக்கண் பிற்கூவார் தும்மார் வழுக்கியும்
எங்குற்றுச் சேறிரோ வென்னாரே முன்புக்
கெதிர்முகமா நின்று முரையார் இருசார்வுங்
கொள்வர் குரவர் வலம்.

நீராடும் நீர்மை

7. நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்
நீந்தார் உமியார் திளையார் விளையாடார்
காய்ந்த தெனினும் தலைஒழிந் தாடாரே
ஆய்ந்த அறிவி னவர்.

வாழ்க்கைத்திறம்

8. துன்பத்துள் துன்பற்று வாழ்தலும், இன்பத்துள்
இன்பு வகையில் ஒழுகலும் - அன்பிற்
செறப்பட்டார் இல்லம் புகாமை இம்மூன்றும்
திறப்பட்டார் கண்ணே உள.

—பெருவாயின் முள்ளி

அரும்பொருள்

ஆசாரக் கோவையின் காலம் ஏறத்தாழக் கி. பி. 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டு என்னலாம். ஆசாரங்களை எடுத்துக் கூறுவது பற்றி இந்நூல் ஆசாரக் கோவை எனப் பெயர் பெற்றது. இது சுக்ர ஸ்மிருதியில் உள்ள ஆசாரங்களைக் கூறுவது.

1. நடை வரவு - நடந்துகொண்டு. நீரகத்து - நீரிடம் இன்று. பூசார் - அலம்பார். நிலை நீர் - குளம் ஏரி முதலிய நீர் நிலைகள். வரைந்துகொண்டு - வரையறுத்துக்கொண்டு. பெய் - சிலர் பெய்ய. பூச்சு - அலம்புதல்.

2. சுடர் இடை - விளக்குக்கும் ஒருவர்க்கும் நடுவில். இடர் - குளிராகிய துன்பம். மாசுணி - பிறர் உடுத்த அழுக்கு உடை. ஆடைவளி - தாம் உடுத்திய ஆடையின் காற்று. உறைப்ப - பிறர்மேல் படும்படி. கடன் அறி காட்சியவர் - கடப்பாட்டை அறிந்த பெரியோர்.

3. குறளை - கோள்சொல்லுதல். வெளவல் - பிறர் பொருளைக் கைக்கொள்ளல். காட்சியார் - அறிவுடையவர். நிரயம் - நரகம். செற்று - அழித்து.

4 நெறிப்பட்டவர் - ஒழுக்கமுடையவர். தெறி - தெறித்தல். ஏறு - எறிதல். வீளை - கனைத்தல். விளி - தூரச் செல்பவரை அழைத்தல். விகிர்தம் - ஒருவன் பேசுவது செய்வது போலத் தானும் அவனை இகழ்ந்து பேசலும் செய்தலும். கதம் - கோபம். கரத்தல் - ஒளித்தல். தோன்ற - பிறர்க்கு வெளிப் படும்படி. செகுத்தல் - அழித்தல். பயிற்றார் - பழகிச் செய்யார்.

5. தேவகுலன் - கோவில். இல்வழி - இல்லாத இடம். எழுந்த - உண்டாகிய. வளரார் - தூங்கார்.

6. எழுச்சிக்கண் - ஒருவர் எழுந்து போகும் பொழுது. கூவார் - அழையார். வழுக்கியும் - மறந்தும். சேறீரோ - செல்கின்றீரோ. இருசார்வும் - அவர்க்கு இரண்டு பக்கங்களிலும். குரவர் - பெரியோர்.

5. ஏலாதி

தேவர்க்கும் மேலானவன்

1. கொலைபுரியான் கொல்லான் புலான்மயங்கான் கூர்த்த
அலைபுரியான் வஞ்சியான் யாதும்—நிலைதிரியான்
மண்ணவர்க்கு மன்றி மதுமலிபூங் கோதாய்!
விண்ணவர்க்கு மேலாய் விடும்.

அறிவு நூல்களை வேண்டாதவன்

2. இடர்தீர்த்தல் எள்ளாமை கீழினஞ் சேராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின் நடைதீர்த்தல்
கண்டவர் காமுறுஞ்சொற் காணிற் கலவியின்கண்
விண்டவர்நூல் வேண்டா விடும்.

உயிர்கட்குத் தாய்போன்றவன்

3. நிறையுடைமை நீர்மை யுடைமை கொடையே
பொறையுடைமைபொய்மைபுலாற்கண்மறையுடைமை
வேயன்ன தோளாய்! இவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்ன னென்னத் தகும்.

தேவரால் ஏற்கத் தக்கவன்

4. இன்சொல் அளாவல் இடமினிதூண் யாவர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல்—மென்சொல்
முருந்தேய்க்கு முட்போல் எயிற்றினாய்! நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து.

இனிய வாழ்வு

5. துறந்தார்கட் டுன்னித் துறைவார்க் கிடுதல்
இறந்தார்க் கினிய இசைத்தல்—இறந்தார்
மறுதலை சுற்ற மதித்தோம்பு வானேல்
இறுதலில் வாழ்வே இனிது.

நல்லனவே செய்க

6. இளமை கழியும் பிணிமூப் பியையும்
வளமை வலியிவை வாடும்—உளநாளால்
பாடே புரியாது பால்போலுஞ் சொல்லினாய்!
வீடே புரிதல் விதி.

பெரியோர் - சிறியோர் வாய்ச்சொற்கள்

7. மையேர் தடங்கண் மயிலன்னாய்! சாயலே
மெய்யே யுணர்ந்தார் மிகவுரைப்பர் பொய்யே
குறளை கடுஞ்சொற் பயனிலசொல் நான்கும்
மறளையின் வாயினவா மற்று.

தேவாதி தேவன்

8. உரையான் குலன்குடிமை ஊனம் பிறரை
உரையான் பொருளொடுவாழ் வாயு—உரையானாய்ப்
பூவாதி வண்டுதேர்ந் துண்குழலாய்! ஈத்துண்பான்
தேவாதி தேவனாத் தேறு.

—காரியாசன்

அரும்பொருள்

ஏலம் முதலியன உடலுக்கு நன்மை தருதல்போல வாழ்விற்கு நலன்தரத்தக்க நன்னெறிகளைக் கூறலால் இந்நூல் ஏலாதி எனப்பட்டது. இதன் காலம் சுமார் கி. பி. 8-ஆம் நூற்றாண்டு என்னலாம். இதன் ஆசிரியர் காரியாசான். ஏலம் + ஆதி = ஏலாதி.

1. மயங்கான் - அறிவு கலங்கி உண்ணாதவன். கூர்த்த - மிக்க. அலை - அலைத்தல் தொழில். யாதும் - சிறிதும்.

2. படர் - பசித்துன்பம். நடை - ஒழுக்கம். கண்டவர் - தன்னுடன் பழகுவார். கலவி - உலகப்பற்று. விண்டவர் - நீங்கியவ நூல் - அறிவு நூல்கள்.

3. வேய் - மூங்கில். நிறை - நெஞ்சடக்கம். நீர்மை - நல்ல இயல்பு. புலால்கண் - புலால் உண்ணுதலில். மறை - மறுத்தல்.

4. அளாவல் - உள்ளம் கலந்த உறவு கொள்ளல். முருந்து - மயில் இறகின் அடி. ஏய்க்கும் - ஒப்பாகும்.

5. துன்னி - பொருந்தி. துறவார் - துறவாமல் இரப்பவர். இறந்தார் - கல்வி முதலியவற்றுற் சிறந்தவர். இனிய இசைத்தல் - நன்மொழிகளைக் கூறுதல். இறந்தார் - துணையற்று இறந்தவர். மறுதலை - தனக்குத் தீமை செய்தவர். இறுதல் இல் - நன்மை அழிதல் இல்லாத. இனிது - துறவறத்தினும் நல்லது.

6. இயையும் - வந்து சேரும். உளநாளால் - எஞ்சியுள்ள நாட்களில். பாடு - துன்பந்தரும் செயல். வீடேபுரிதல் - வீடு பேற்றுக்கு உரிய நல்லவற்றையே செய்தல். விதி - முறைமை.

7. மையேர் - மைதீட்டிய அழகான. தடம் - பெரிய. உணர்ந்தார் - சான்றோர். சாயல் - நற்சொற்கள். மறலை - புல்லறிவினன், வாயின - வாயில் வருவன.

8. உரையான் - பெருமையாகச் சொல்லாமல். ஊனம் - குற்றம். பிறரை - அவ்விருவகையாலும் உயர்வற்றவரை. ஆயு - வாழ்நாள் எல்லை. தேறு - தெளிவாயாக.

6. திருக்குறள்

1. வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

2. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்;
ஆகுல நீர பிற.

3. தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

4. மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனும் சொல்.

5. விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய செயின்.

7. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

8. கெடுவல்யான் என்ப தறிக தன்னெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

9. காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

10. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

11. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

12. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.

13. பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

14. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

15. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

16. வறியார்க்கொன் றீவதே ஈகை; மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

17. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு.

18. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

19. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்;
அல்லிடத்துக்
காக்கினென்? காவாக்கால் என்?

20. சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

அரும்பொருள்

1. வான் - மழை. உலகம் - உயிர்கள், இடவாகுபெயர். வழங்கி - நிலைபெற்று. தான் - அம்மழை.

2. அனைத்து - அவ்வளவே. பிற - சொல்லும் வேடமும். ஆகுலநீர - ஆரவாரத் தன்மை உடையன.

3. அவையத்து - கற்றாரது சபையில். முந்தி இருப்ப - அக் கற்றாரினும் மிக்கிருக்கும்படி. செயல் - கல்வியுடையவன் ஆக்குதல்.

4. தந்தைக்கு - தன்னைக் கல்வியுடையவனாக்கிய தந்தைக்கு, என் நோற்றான் - இவனைப் பெறுதற்கு என்ன தவம் செய்தான்.

5. புறத்தத - வெளியில் இருக்க. சாவா மருந்து - அமிர்தம். வேண்டற்பாற்று அன்று - விரும்பத் தக்கதன்று.

6. நல்லவை - நன்மை பயக்கும் சொற்கள். நாடி - மனத்தால் ஆராய்ந்து. அல்லவை - பாவம்.

7. நன்றி - உதவி. ஞாலம் - உலகம். மாணப் பெரிது - மிகப் பெரியது.

8. நடுவு - நடுவு நிலை. ஓரீஇ - நீங்கி. அல்ல - நடுவு அல்லவற்றை. கெடுவல் யான் - அந்நினைவை யான் கெடக் கடவேன்.

9. பொருள் - உறுதிப் பொருள். ஆக்கம் - செல்வம். ஊங்கு - மிக்க. காக்க - வியங்கோள் வினைமுற்று.

10. நன்றிக்கு வித்தாகும் - அறத்திற்குக் காரணமாய் இருமையிலும் - இன்பம் பயக்கும். இடும்பை - துன்பம்.

11. அகழ்வாரை - தோண்டுபவரை. தலை - தலையாய அறமாகும்.

12. புறம் கூறி - பிறனைக் காணாத பொழுது இழித்துரைத்து. பொய்த்து - நேரிற் கண்டவிடத்து அவனுக்கு இனியனாகப் பொய்த்து. அறம் - அற நூல்கள்.

13. பல்லார் - அறிவுடையார் பலர். முனிய - வெறுப்ப. எல்லாரும் - எல்லாராலும். எள்ளப்படும் - இகழப்படுவான்.

14. தீயவை - தனக்கு இன்பம் பயத்தலைக் கருதிச் செய்யும் தீவினைகள்.

15. ஊருணி - ஊர் + உணி - ஊரார் நீர் அருந்தும் குளம். உலகு - உலக நடை. திரு - செல்வம்.

16. குறியெதிர்ப்பு - அளவு குறித்து வாங்கி அவ்வாறு வாங்கியவாறே எதிர் கொடுப்பது; இஃது இக்காலத்தில் கொங்கு நாட்டில் ' குறியாப்பு ' என்று மருவி வழங்குகிறது.

17. ஈதல் - வறியவர்க்கு ஈக. இசைபட - அதனாற் புகழுண்டாக. வாழ்தல் - வாழ்க. அது - அப்புகழ். ஊதியம் - பயன்.

18. பொய்யற்க - பிறர் அறிந்திலர் என்று பொய்யாதொழிக. தன்னைச் சுடும் - பாவத்திற்குச் சாட்சியாய் நின்று பொய்த்தவனை அதன் பயனாகிய துன்பத்தை எய்துவிக்கும்.

19. செல் இடத்து - கோபம் பலிக்குமிடத்து. காப்பான் - தடுப்பவன். அல்லிடத்து - பலியாத இடத்து.

20. ஈனும் - தரும். பெறினும் - பிறர்க்குத் தீமை செய்து பெறலாமாயினும். கோள் - துணிவு.

7. சோமேசர் முதுமொழி வெண்பா

ஒழுக்கமுடைமை

1. தீயனவே சொல்லும் சிசுபாலன் முன்புகண்ணன்
தூயதலாய்ச் சொல்லுரையான் சோமேசா !—வாயின்
ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

பொறையுடைமை

2. ஒட்டலன்செய் தீமைக் கொரூஉதுநம ரென்றுரைத்தார்
சுட்டியசீர் மெய்ப்பொருளார் சோமேசா !—முட்ட
ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

வாய்மை

3. பிள்ளையுட னுண்ணப் பேசியழைத் தாரன்பு
துள்ளு சிறுத்தொண்டர் சோமேசா !—உள்ளுங்கால்
பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

வெகுளாமை

4. பல்லவர்கோன் வந்து பணியக் கருணைசெய்தார்
தொல்லைநெறி வாகீசர் சோமேசா !—கொல்ல
இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

—மாதவச் சிவஞான யோகிகள்

அரும்பொருள்

சிவஞான யோகிகள் ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டவர். அவர் வடமொழிக் கடலையும் தென்மொழிக் கடலையும் நிலைகண்டு உணர்ந்தவர்; விரிவாக உரை வரைதலிலும் கவிகள் பாடுவதிலும் வல்லவர். இந்நூலிலுள்ள ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் திருக்குறள் பாட்டு அப்படியே எடுத்தாளப்பட்டு அதற்கு உதாரணம் மேலிரண்டு வரிகளில் கூறப்பட்டிருக்கும்.

1. தீயனவே - தீய சொற்களையே. தூயது அல்லாச் சொல் - நெறி தவறிய வார்த்தை. ஒல்லா-பொருந்தா. தீய-தீயசொற்களை. வழுக்கியும் - தவறியும்.

2. ஒட்டலன் - பொருந்தாதவன். (பகைவன்). தீமை - வஞ்சனையாற் சொல்லுதல். நமர் - நம்மைச் சேர்ந்த சிவனடியார். மெய்ப்பொருளார் - மெய்ப்பொருள் நாயனர். ஒறுத்தார்க்கு - (தமக்கு இன்னல் விளைத்தோரைத்) தண்டித்தவர்க்கு. பொன்றும் துணையும் - (உலகம்) அழியுமளவும்.

3. உள்ளுங்கால் - எண்ணிப் பார்க்கும் போது. புரை - குற்றம். பொய்மையும் வாய்மை இடத்த - பொய்ம் மொழிகளும் மெய்ம்மொழிகளேயாம்.

4. வாகீசர் - திருநாவுக்கரசர். பல்லவர்கோன் - மகேந்திர வர்மன். இணர் எரி தோய்வு அன்ன - பல சுவாலைகளையுடைய பெரு நெருப்புச் சூழ்ந்ததை யொத்த. வெகுளாமை - கோபிக்காமலிருத்தல். புணரின் - நட்பால் கூடுவாரானல்.

IV. தொடர்நிலைச் செய்யுள்

1. மலையும் அணிலும்

'அற்பத் திருடா,' என்றெனை அழைத்த
வெற்பே! யானும் விளம்பக்கேளாய் ;
அளக்கல் ஆகா அளவும் பொருளும்
துளக்கல் ஆகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரு வண்மையும் உனக்கென்(று)
உரைமொழி முற்றும் உண்மையே ஆயின்,
ஒருவகைப் பொருளின் ஓருல காமோ?
ஒருவெயில் மழையின் ஓராண்டு தேறுமோ?
பற்பல பொருளும் பற்பல பருவமும்
ஒன்ருய்க் கூடினே உலகம் ஆண்டாம்.
ஆதலின் யான் இவ் வகிலமீ துதித்தே
இருப்பதை இழுக்கா எண்ணவும் மாட்டேன் ;
என்தொழில் இயற்றவும் யாவர் வேறுளார்?
உன்பே ருருஎனக் கில்லை; உனக்கும்
என்சிறு வடிவிலை ; மேலும் என்றன்
உள்ளக் களிப்பில் உற்று நோக்கில்
எள்ளத் தனையும் உனக்கிலை இலையே ;
அணிற்பிளை சாடி ஓடி அலைந்து
விளையா டற்கு விரிவிடம் பெறுவாய் ;
ஐயம் இதற்கிலை ; அடலும் ஆற்றலும்
ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு விதமாம் ;
அறத்தொடும் முறையொடும் ஆழ்ந்த அறிவொடும்
அனைத்துமிவ் வுலகில் அமைக்க லாயின ;
வனங்களை முதுகில் வகித்து நின்றிட
வல்லைநீ ஆயின் மற்றிங் கெனைப்போல்
நெல்லைக் கொறிக்க நின்னல் ஆகுமோ?
யாவரே பெரியவர்? யாவரே சிறியவர் ?
ஒன்றிற் பெரியவர் ஒன்றிற் சிறியராம் ;
ஒன்றிற் சிறியவர் ஒன்றிற் பெரியராம் ;
ஆதலின் அற்பர் ஆகா தவர்என
ஓதுதல் மடமையின் சாதனை யாமே.

—தேசிக விநாயகம் பிள்ளை

இச்செய்யுள் ஆசிரியர் நாகர் கோயிலைச் சேர்ந்தவர்; சிறந்த புலவர்; பல பாக்களைப் பாடியுள்ளவர்; ஆராய்ச்சியாளர்.

வெற்பு - மலை. விளம்ப - சொல்ல. துளக்கல் - அசைவு. வறப்பினும் - வற்றினும். பொருளின் - பொருளினால். ஆண்டு - அங்கு. ஆண்டாம் - ஆண்டு + ஆம் - அங்கே ஆகும். இழுக்கு - குற்றம். பிளை - பிள்ளை. அடல் - வலிமை. ஆற்றல் - செய்வினைத் திறம். வகித்து - பெற்று. தாங்கி. வல்லை - வல்லமை உடையை. மடமை - அறியாமை.

2. காந்தி அடிகள்

இயற்கைத்தாய் காந்தியடிகளை இந்தியனுக்கு அறிமுகப்படுத்தல்

"மைந்த! கேட்டி: இந்தமா நிலத்தில்
'உற்ற யாக்கையின் உறுபயன் யாதென'
வருந்தல் வேண்டா; திருந்து நல்வழி
இன்று கூறுவல்; நன்று கேட்டி;
மக்கள் யாக்கையே மிக்கது மிக்கது;
அன்னதன் பயனை இன்னதென் றுணர
இல்லம் விடுத்துச் செல்லவும் வேண்டா;
மலைகள் ஏறி அலையவும் வேண்டா;
காற்றை ஈர்த்து மாற்றவும் வேண்டா;
மனைவி மணந்தும் மக்களை ஈன்றும்
இனத்தொடு வாழ்ந்தும் இருந்தொழில் செய்தும்
உண்பன உடுப்பன உண்டும் உடுத்தும்
நாட்டை விடாது வீட்டில் உறைந்தும்
பிறவிப் பயனைப் பெற்று வாழலாம்;
இலக்கியம் இதற்கொன்(று) இயம்புவன், கேட்டி:
கலக்கமில் உளத்தைக் களைா, நீபெறுக;

அடிகள் சிறப்பு

இந்தியா ஈன்ற மைந்தருள் ஒருவன்
கூர்ஜர நாடன் கூர்த்த மதியினன்
தாய்மொழி காத்து நாயன் ஆனவன்;
தன்னுயிர் போல மன்னுயிர் போற்ற
நல்லறம் என்னும் இல்லறம் ஏற்றோன்;
மக்களை ஈன்று மிக்கவன் ஆனன்;

செயற்கை வெறுத்த செம்மை யாளன் ;
இயற்கை இன்பமே இன்பெனக் கொள்வோன் ;
உண்மை கடைப்பிடித்(து) ஒழுகும் சீலன்
உண்மை காரணமா உயிரையும் விடுவோன்
வானம் துளங்கினும் மீனம் படினும்
மலைகள் வீழினும் அலைகள் பொங்கினும்
தன்னிலை மாறாத் தன்மை யாளன் ;
உலகில் உள்ள அலகிலா உயிர்கள்
தன்னுயிர் என்னும் தருமம் பெற்றவன் ;
பிறர்க்குக் கேடு மறந்தும் சூழான் ;
'அன்புடை யார்பிறர்க் கென்பும் உரியர்'
என்னும் மெய்ம்மொழிக் கிலக்கியம் ஆனோன் ;
உண்மை அஞ் சாமை ஒண்பே ராயுதம்
தாங்கி என்றும் ஈங்கு முரண்படு
தேக சக்தியை ஏக சக்தியாம்
ஆன்ம சக்தியால் அடக்கும் வீரன் ;
சினத்தை ஒழித்த இனத்தவர் உறவோன் ;
யாண்டுத் துன்ப எவர்க்கு நேரினும்
ஆண்டே அவனுடல் அணையும் அன்றே ;
அவனுடல் மற்றவர் உடலே ஆகும் ;
அவன்பொருள் மற்றவர் பொருளே ஆகும் ;
அவனுயிர் மற்றவர் உயிரே ஆகும் ;
தனக்கென வாழாத் தன்மை பெற்றவன் ;
அன்பே வடிவாய் அமர்ந்த அண்ணல் ;
'இன்பு பிறர்க்கே உழைத்தல்' என்போன் ;
சாந்த மயமெனும் காந்திப் பெயரோன் ;
நற்றவன் அடியைப் பற்றுவை ஆயின்,
ஐய, யாக்கையின் பயனது விளங்கும்.!

—திரு. வி. கலியாண சுந்தரனர்.

அரும்பொருள்

இது நாட்டுப் பாடல் என்னும் நூலின் ஒரு பகுதி.

கேட்டி - கேட்பாய். யாக்கையின் உறுபயன் - பிறவி எடுத்ததன் பயன். கூறுவல் - சொல்வேன். நன்று - கவனத்துடன். காற்றை மூக்குத் துளை ஒன்றன் வழியாக உள் இழுத்து

மற்ருென்றன் வழியே. மாற்றி வெளிவிடல். இரும் - பெரிய. இலக்கியம்—உதாரணம். காளை—காளை போன்ற மகனே, உவமை ஆகுபெயர், நாயன்—தலைவன். செயற்கை—செயற்கை வாழ்வு. துளங்கினும்—அசையினும. தன்னிலை மாருு—உண்மையிலிருந்து மாருத. அலகு இலா--முடிவு (கணக்கு) இல்லாத. முரண்படு—மாறுபடுகின்ற. இன்பு—இன்பம், அமைதி. நற்றவன் – தவத்தினன்.

3. குசேலோபாக்கியானம்

கண்ணனும் குசேலன் என்ற பிராமணனும் ஓர் ஆசிரியரிடம் கல்வி கற்றவர். குலேசன் தன் மனைவியுடனும் மக்களுடனும் காட்டில் தவம் செய்து வந்தான். கண்ணன் துவாரகைக்கு அரசனுக இருந்தான். வறுமை மிகுதியால் குசேலன் மனைவியான சுசீலை தன் கணவனைக் கண்ணனிடம் சென்று பொருள் பெற்று வருமாறு வேண்டினுள். குசேலன் கண்ணனுக்குத் தரச் சிறிது அவல் முடிந்துகொண்டு துவாரகை சென்ருன்.

3. குசேலன் கண்ணனைக் கண்டது

1. வருந்துமோர் மிடியன் சேம
 வைப்பெதிர் கண்டாற் போலும்,
அருந்துண(வு) இழந்தோன் விண்ணோர்
 அமுதெதிர் கண்டாற் போலும்,
பரிந்துவெப்(பு) உழலு வோன்கற்
 பகம்எதிர் கண்டாற் போலும்,
சரிந்தபற் றினன்மெய் ஆசான்
 தனைஎதிர் கண்டாற் போலும்,

2. ஏண்ணனைக்(கு) இலங்கு மார்பம்
 ஈந்தருள் பிரானை, நீல
வண்ணனை, திகிரி சங்கம்
 வலமிடம் உறக்கொண் டானை,
மண் அனைத் தும்பு ரக்கும்
 வாசுதே வனை, மணக்கும்
கண்ணனை, துளவத் தாமக்
 கண்ணனைக் கண்ணிற் கண்டான்.

கண்ணன் உபசாரம்

3. 'வழிநடந் திளைத்தவேஇம் மலரடி இரண்டும்' என்று
கழிமகிழ் சிறப்ப மெல்லவருடினன் கமலக் கண்ணன்;
பழியில்பல் உபசா ரங்கள் பண்ணவும், தெரியா னுகி
ஒழிவறு தவக்கு சேலன் ஒன்றும்பே சாதிருந்தான்.

கண்ணன் குசேலனை விசாரித்தல்

4. "நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெரு நீர்மையளே?
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே?
தன்னுடைய உயிராய்நின் றனைப்பேணும் தன்மையளே?
உன்னுடைய வருவாய்க்குத் தக்கசெல வுஞற்றுவளே?

5. "சொன்ன காரியமனைத்தும் சொன்னபடி இயற்றுவளே?
என்னமிடி வரினும்வெளி எடுத்தியம்பா இயல்பினளே?
தன்னமுப்நா யகன்பழிதூற் றுதமையத் தக்கவளே?
பன்னருமா மறையுணர்ந்த பளகறுநற் குணக்குன்றே?

6. "பைங்குதலை வாய்மைந்தர் பலர்பிறக்க வேண்டுமே?
எங்குமரும் புகழுடையோய், எத்தனைமைந் தர்கள்பிறந்தார்?
அங்கவரைப் பேரவையோர் அணிதரச்செய் செயலனைத்தும்
சிங்கலறப் புரிந்தனையோ? செய்தனையோ உபநயனம்?

குருகுல நினைவு

7. "இருவேமும் முன்னளில் இலங்குசாந் தீபமுனி
வருகாமர் அடிவணங்கி மாமறைசற் றுணர்ந்திடுநாள்
பெருகார்வத் தொடுபேசிக் கொண்டிருந்த பேச்செல்லாம்
திருகாரா வுளத்துநினைத் திருக்கின்று யோசிறப்ப?

8. "கொள்ளைமறை உணர்வுமிகு குருராயன் பத்தினியாம்
தள்ளைநமைப் பார்த்தமுது சமைப்பதற்கிந் தனமின்றின்(று)
'என்னிருநன் மைந்தர்காள்! கொடுவாரும்' எனஏவ,
விள்ளருமோர் பெருங்காட்டுள் விறகொடித்துத் திரிந்தனமே.

கண்ணன் சிற்றுண்டி கேட்டல்

9. "பந்தனை அகன்ற மேலோய்! பற்பல நாட்குப் பின்பு
வந்தனை; எனக்கென் கொண்டு வந்தனை? அதனை இன்னே
தந்தனை யாயின் நன்று; தருசுவைப் பக்க ணத்தென்
சிந்தனை நின்ற(து)" என்றுன் தெரிவரும் வஞ்சக் கள்வன்.

கண்ணன் அவல் தின்னல்

10. மலிதரும் அன்பின் வந்த வண்பொதி அவிழ்த்து நோக்கி,
வலிதரும் அவற்றுள் 'நன்று வாய்த்தது நமக்கீ தெ'ன்னு,
ஒலிதரும் கழற்கால் ஐயன் ஒருபிடி அவலைக் காதல்
பொலிதர அடுத்து வாயில் போகட்டுக் கொண்டான் மாதோ

—வல்லூர் தேவராசப் பிள்ளை

அரும்பொருள்

இந் நூலாசிரியர்-மகா வித்துவான் மீனுக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்கள் மாணவர் ; கி. பி. 18-ஆம் நூற்றுண்டினர்.

1. மிடி-வறுமை. பரிந்து-உபசரித்து. வெடிப்பு-வெய்யிற் கொடுமை. கற்பகம்-குளிர்ந்த மரம். சரிந்த பற்றினன்-ஆசை யற்றவன். ஆசான்-குரு.

2. எண்ணனைக்கு-எண் + அனை-தாயாகிய இலக்குமிக்கு. திகிரி-சக்கரம்-கண்ணனை - கள் + நனை – தேனில் நனைந்த. உற - பொருந்தும்படி.

3. கிழத்தி-உரிமையுடையவள். நிரம்புபெரு நீர்மையள் - மன அமைதி கொண்டவள். ஏ-வினு எழுத்து. மன் - கணவன் உனுற்றுவளே - செய்பவளோ ?

4. தன்னமும்-சிறிதேனும். பன்-சொல். பளகு-குற்றம்.

5. பைங்குதலை - பசுமை + குதலை. குதலை-மழலைச் சொல். அணிதரச் செய் செயல் - அறிஞரை நெருங்கும் தகுதிக்குரிய கல்வி. சிங்கல் - குறைவு.

6. காமர்-அழகிய. திருகு-வஞ்சகம். ஆரா-இராத.

7. தள்ளை-தாய், குடநாட்டுச் சொல்; இங்குக் குரு மனைவி. இந்தனம்-விறகு. எள்-இகழ், விள்ளரும்-சொல்ல முடியாத.

8. பந்தனை - உலகப்பற்று. பக்கணம் - பக்ஷணம், சிற்றுண்டி. தெரியவரும்-நம்மைப் போன்றவர் அறிதற்கு அருமையான.

9. அன்பின் வந்த-அன்புடன் கொணர்ந்த, வண்பொதி - வளப்பம் மிகுந்த அவல் மூட்டை. என்னு - என்று. கழல் - வீரச் சதங்கை. காதல் பொலிதர - அன்பு மேலிட. போகட்டு - போட்டு. மாதோ - அசை.

அரிச்சந்திரன் சந்திரமதியை வாளால் எறிய நகர்ப்புறத்திற்கு வருதல்

1. 'என்ன பாதகம் செய்தனம்' என இறை நகைத்துக்
கன்னி கைகளைக் கட்டிய கயிறுதான் பிடித்துத்
துன்னு மாமணித் தோரண வாயிலைக் கடந்து
பொன்னின் மாநகர்ப் புரிசையின் புறத்துவந் திறுத்தான்.

வசிட்டன் கூற்று

2. உற்ற நாளையில் வசிட்டனவ் வும்பர்கோன் தனக்குக்
'கொற்ற வா, நினக் கியான்புகல் கோதிலா னிடத்தே
அற்றை நாள்முதல் கௌசிகன் அமைக்குமூ றனைத்தும்
இற்றை நாள்விடும் காண்பநீ எழுக'என் றிசைத்தான்.

தேவர்கள் மேலிருந்து கவனித்தல்

3. தாழும் வார்சடை மாமுனி அவ்வுரை சாற்றச்
சூழும் மாதரும் தும்புரு நாரதர் தாமும்
வாழும் வச்சிர பாணியும் வசிட்டனும் யாரும்
ஏழு பாலரும் காணவந் தந்தரத் திருந்தார்.

கோசிகன் அரிச்சந்திரனிடம் உரைத்தல்

4. அந்த வேளையில் கௌசிகன் விரைந்துவந் "தரசே,
இந்த நோதக(வு), எய்தலென் ? எனக்குநீ முன்னம்
தந்த நாடி யான் தந்திலேன்' எனமொழி சாற்றி
உந்தம் நாடுமிவ் வுயிர்களும் பெறுகெ"ன வுரைத்தான்.

அரிச்சந்திரனும் சந்திரமதியும் மறுத்துரைத்தல்

5. சேர நின்றவன் செப்பிய தாங்கவர் அன்றி
யாருங் கேட்டிலர் வசிட்டனும் அமரரும் அறிந்தார் ;
வீர வேந்தனும் மங்கையும் அவனடி வீழ்ந்திங்(கு)
யாரைநீ இந்த ஏழைமைக் காட்செய்தி ?" என்றார்.

6 "செய்மை அண்மையின் உயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மை யாலகந் தூய்மையா மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலாற் சொல்லின்வே றுளதோ?
நோய்மைசெய்யினும்வாய்மையே நோன்பெமக்கறிதி.

7. "புலைய னும்விரும் பாதஇப் புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண் டுயிரினும் நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்;
கலையுணர்ந்தநீ எமக்கிது கழறுதல் அழகோ?

8 "இம்மை அம்மை வீடெனமறை புலங்கொள இயம்பும்
மும்மை யுந்தரு முறையுடைத் தெனுநிலை முரணி
எம்மை யாழ்வயிற் றடக்கிநீ டுமிழ்கலா எரிவாய்
வெம்மை கூர்நர குய்க்கினும் மெய்மையை விடேமால்,

9. "பதியி ழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதியி ழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை இழக்கிலேம்" என்றார்;
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.

கோசிகன் இந்திரனுடன் இருத்தல்

10. "மறைந்து போகலும் வாசவன் மாமுனி வணக்கூய்
'அறைந்த காரணம் அறிந்தியோ' எனஅரு களைத்தான்;
நிறைந்த நாணமும் குறைந்தபார் வையுமுற நினைவு
குறைந்தி ருந்தனன் முகிலிடத் தவருடன் கூடி.

அரிச்சந்திரன் சந்திரமதியுடன் சுடுகாடு அடைதல்

11. "வாசத் தார்புனை வாசவனுடன்முனி வைகப்
பாசத் தாள்கரம் பிணித்ததோர் பாசங்கைப் பற்றிப்
பேசத் தான் பெறுன் பிணஞ்சுடு கோலினல் தள்ளி
நேசத் தார்மகன் கிடந்ததோர் நெடுநிலம் உற்றான்.

சந்திரமதி கணவனுக்கு அறிவுரை கூறல்

12. "வழக்கின் என்றுநீ வழிபடு தெய்வத்தை வணங்கிக்
கிழக்கு நோக்கிரண் டிரு"வெனக், கிளிமொழி மடந்தை
பழக்க மானஅக் கணவனைப் பரவி"என் ஆவி
இழக்கற் கஞ்சிநீ அறம்வழு வேல்"என இயம்பும்.

13. "பொருந்து நீத்தத்திற் புற்புத வாழ்வை நீமெய்யென்(று)
அருந்த வத்தையும் அறத்தையும் மெய்யையும் விடுத்து
வருந்தல், மன்னவ! வழிவழி சிறக்கென வாழ்த்தி
இருந்த பின்,சுடர் வாட்படை வலக்கையின் எடுத்தான்.

அரிச்சந்திரன் சில கூறி வாளை வீசுதலும் அது மாலையாகக் கழுத்தில் வீழ்தலும்

14. "உலகு யிர்க்கெலாம் பசுபதி ஒருமுதல் ஆயின்,
அலகில் சீருடை அவன்மொழி மறைஎனின், தன்கண்
இலக றம்பல வற்றினும் வாய்மைஈ டிலதேல்,
விலகு ருமலவ் வாய்மையை விரதமாக் கொளின்யான்,

15. "நெறியின் அன்னஎன் றனைவிடா நிறைஇவட் குளதேல்,
இறுதி இன்மையைப் பெறுக;இல் லெனிலிவள் இறுதி
பெறுக" என்றுவாள் விசினன்; பேதைதன் கழுத்தில்
மறும ணத்திடு மாலையாய் வீழ்ந்ததவ் வடிவாள்.

முத்தேவரும் அரிச்சந்திரனைப் பாராட்டுதல்

16. மன்னர் மன்னனை நோக்கியே மலர்க்கரம் அமையா
என்னை யோஎனு வுருகித்தம் திருவுளம் இரங்கி,
"முன்னை உத்தமர் எவருளும் முறைமைக்கும் நெறிக்கும்
உன்னை ஒப்பவர் இல்"லென மூவரும் உரைத்தார்.

—ஆசு கவிராஜர்

அரும்பொருள்

1. காசிராஜன் மகனைச் சந்திரமதி கொன்றாள் எனப் பழிச் சொல் கேட்ட அரசன் அவளைக் கொல்ல நகர்ப்புறத்திற்கு வந்தான். அப்பொழுது அவன் 'என்ன..........செய்தனம்' என்று

கவலைப்பட்டுக்கொண்டே வந்தான். நகைத்து - வாழ்க்கையில் வெறுப்புத் தோன்ற நகைத்து. கன்னி - சந்திரமதி. புரிசை - மதில். இறுத்தான் - தங்கினன்.

2. உம்பர் - தேவர், கோன் - இந்திரன். ஊறு-இடையூறு- கோதிலான் - குற்றமற்றவன், அரிச்சந்திரன்.

3. மாமுனி - வசிட்டன். மாதர்-ஊர்வசி, மேனகை முதலிய தேவமாதர். வச்சிரபாணி - வச்சிராயுதத்தைக் கையில் பிடித்துள்ள இந்திரன். ஏழு பாலர் - அட்டதிக்குப் பாலகருள் இந்திரன் ஒழிந்த எழுவர். அவர் - அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர்.

4. நோதகவு - வருத்தம்.

5. அவன் - கௌசிகன். ஏழைமை - அறிவில்லாமை.

6. நோய்மை - துன்பம். வாய்மை - உண்மை பேசுதல்.

7. பிறழ்வது - மாறுபடுவது. கலை-அறநூல்கள். கழறுதல் - இடித்துரைத்தல், வற்புறுத்தியுரைத்தல்:

8. இம்மை - இப் பிறப்பு. அம்மை-மறு பிறப்பு- முரணி- மாறுபட்டு. உய்க்கினும் - செலுத்தினும்.

9. கதி - வீட்டு உலகம், மோக்ஷம். கட்டுரை - உண்மை பேசுதல்.

10. வாசவன்-இந்திரன். கூய்-அழைத்து. முகில்-மேகம்.

11. வாசம் - வாசனை. தார் - மாலை. பாசத்தாள் - அன்புடையவள். பாசம் - கயிறு. உற்றான் - அடைந்தான்.

12. மடந்தை-பெண்மணி. கற்புடை மனைவி கணவனையே வணங்குதல் மரபு. பரவி - துதித்து. இயம்பும் - சொல்லுவாள.

13. நீத்தம் - வெள்ளம். புற்புதம் - நீர்க்குமிழி.

14. பசுபதி - உயிர்கட்குத் தலைவன், சிவபெருமான். ஒரு - ஒப்பற்ற. அலகு - அளவு. இலகு - விளங்கும்.

15. நிறை - கற்பு. பேதை - சந்திரமதி.

16. நெறி - ஒழுக்கம். மூவர் - பிரமன், திருமால், சிவன்.

V. தனிப்பாடல்கள்

1. மதுரைக் கலம்பகம்

தொடுத்த ணிந்ததும் அம்புத ரங்கமே;
சுமந்தி ருந்ததும் அம்புத ரங்கமே;
அடுத்து நின்றது மாயவ ராகமே;
எயிறி றுத்தது மாயவ ராகமே;
அடுப்ப தந்தணர் பன்னக ராசியே;
அணிவ துஞ்சில பன்னக ராசியே;
கொடுப்ப தையர் கடம்பவ னத்தையே;
கொள்வ தையர் கடம்பவ னத்தையே.

—குமரகுருபர சுவாமிகள்

அரும்பொருள்

அம்புதர் அங்கம் - அழகிய தேவருடைய எலும்பு. அம்பு தரங்கம்-அலைகளையுடைய கங்கை நீர். மாயவர் ஆகம் - திருமாலாகிய திருவிக்கிரம மூர்த்தியின் உடல். மாய - அழியும்படி. வராகம் - வராக அவதாரம். அடுப்பது பொருந்தியிருப்பது. ஆசி அந்தணர் பல் நகர்-ஆசீர்வாதம் செய்யும் அந்தணர்களின் பல நகரங்கள். பன்னகம் - பாம்பு - ராசி கூட்டம். ஐயர்கள் தம் பவனம்; தேவர் உலகம். கடம்பவனம் - மதுரை.

2. தமிழன் பாட்டு

பல்லவி

தமிழனென்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா (தமிழ)

சரணங்கள்

1. அமுதமூறும் அன்புகொண்டு அரசுசெய்த நாட்டிலே
அடிமையென்று பிறர்நகைக்க முடிவணங்கி நிற்பதோ?
இமயம்தொட்டுக் குமரிமட்டும் இசைபரந்த மக்கள்நாம்;
இனியுமந்தப் பெருமைகொள்ள ஏற்றயாவும் செய்குவோம்.
(தமிழ)

2. குஞ்சைக்காக்கும் கோழிபோலக் குடியைக்காத்த மன்னர்கள்
கோல்நடத்த அச்சமின்றி மேல்நினைப்புக் கொண்டுநாம்
பஞ்சபூத தத்துவங்கள் பக்தியோடு முத்தியைப்
பார்சிறக்கச் சொன்ன நாமும் சீர்குறைந்து போவதோ?
(தமிழ)

3. உலகிலெங்கும் இணையிலாத உண்மைபாடும் புலவர்கள்
உணர்ச்சிதன்னை வானைத்தாண்டி உயரச்செல்லும் நாவலர்
கலகமற்றுக் களிசிறக்கக் கவிதைசொன்ன நாட்டிலே
கைகுவித்துப் பொய்கள்பாடிக் காலந்தள்ளல் ஆகுமோ?
(தமிழ)

4. சித்திரத்தில் மிகவுயர்ந்த சிற்பநூலின் அற்புதம்
சின்னச்சின்ன ஊரிற்கூட இன்னுமெங்கும் காணலாம்;
கைத்திறத்தில் ஈடிலாத கல்விதந்த தமிழர்நாம்;
கைநெறிந்து வேலையின்றிக் கண்கலங்கி நிற்பதேன் ?
(தமிழ)

5. எண்ணமற்று விசனமற்று எங்கும்செல்வம் பொங்கவே
எந்தநாளும் ஆடல்பாடல் எழிலரங்கம் ஓவியம்
பண்ணமைந்த குழலும்யாழும் பக்கமேளம் யாவையும்
பாருக்கீந்து மகிழ்ச்சியின்றி நாமிருத்தல் பான்மையோ?
(தமிழ)

6. விண்மறைக்கும் கோபுரங்கள் விண்மறக்கும் கோவில்கள்
வேறுஎந்த நாட்டிலுண்டு வேலையின் விசித்திரம்?
கண்ணிறைந்த காவனங்கள் கனிகள்மிக்க சோலைகள்
கண்டபோது பண்டைஎங்கள் நாகரிகம் காட்டுமே.
(தமிழ)

—நாமக்கல், இராமலிங்கம் பிள்ளை

அரும்பொருள்

1. இசை - புகழ். கரிகாலன் - செங்குட்டுவன் முதலியோர்; வட நாட்டில் வெற்றி பெற்ற பேரரசர்கள்; தமிழர்கள் வீரத்தை

வடநாட்டார்க்கு உணர்த்தியவர். பிற்காலச் சோழப் பேரரசரா லும் தமிழர் ஆற்றலை வடநாட்டார் உணர்ந்தனர். சமயத் துறையி லும் தென்னாட்டின் சிறப்பினை வடநாடு உணர்ந்திருந்தது.

2. சேரன் செங்குட்டுவன், நலங்கிள்ளி, தலையாலங்கானத் துச் செரு வென்ற நெடுஞ் செழியன், பொற்கைப் பாண்டியன் முதலிய செங்கோல் அரசர் வரலாறுகள் கருதத் தக்கன.

3. சைவ, வைணவ ஆசாரியர் மூலமாகத் தமிழகம் சமயத் துறையில் சிறப்புப் பெற்றது.

4. உண்மை பாடும் புலவர்கள் - சங்கப் புலவர்கள் நாவ லர் கம்பர் முதலிய கற்பனைத் திறம் பெற்ற இடைக்காலப் புலவர்.

5- சித்திரம், சிற்பம் இவற்றைச் சித்தன்ன வாசல், தஞ்சைப் பெரிய கோவில், கோவையை அடுத்த பேரூர் முதலிய ஊர்க் கோவில்களிற் கண்டு களிக்கலாம் - கைத் தொழிலும் இணையற்று இருந்த காலம் ஒன்றுண்டு,

6. அரங்கம் - மேடை. இசையில் தமிழர் சிறப்புற்றிருந்த னர் என்பதைச் சிலப்பதிகாரத்திலும் திருமுறைகளிலும் கண்டு களிக்கலாம்:

7. வானளாவிய கோபுரங்களும் அகன்ற பெரிய கோவில் களும் அவற்றின் வேலைப்பாடுகளும் வெறு எந் நாட்டிலும் காண்ப தரிது.

3. தொழிலாளர் மேன்மை

1. தொழிலாளர் மேன்மையினைச் சொல்லல்எளி தாமோ?
தூயவொரு வனப்புவகைத் தோற்றுவித்தோர் அன்னார்;
எழின்மாட மாளிகைகள் கோபுரமுண் டாக்கி
இருளுலகை ஒளிபெறவே இயற்றியவர் அன்னார்;
அழகியநற் சோலைகுளம் ஏரிஆறு கண்டே
அரியதொரு விளைநிலங்கள் அமைத்தவர்கள் அன்னார்;
குழவிநிலை தனிலிருந்த நாகரிக வாழ்வைக்
கோடுயர்மா மலைபோலே உயர்த்தியவர் அன்னார்.

2\. உயிர்வாழ்வோர்க் குணவுப்பொருள் விளைப்பவரும் அன்னார்;
உடைகள்பல நவநயமாய் நெய்தளிப்போர் அன்னார்;
துயிலுதற்கும் வாழுதற்கும் காப்பமைந்த தான
சுகந்தருநல் வீடுபல அமைத்திடுவோர் அன்னார்;
பயம்விடுத்துப் பூமியினுள் சுரங்கம்வெட்டி யாங்கே
பல்விதஉ லோகவகை பார்த்தளிப்போர் அன்னார்;
அயர்வின்றி மனிதகுலம் வாழும்வகைக் கேற்ற
அரும்பொறிகள் வாகனங்கள் அமைப்பவரும் அன்னார்.

3\. கன்மலையைப் பிளப்பவரும் கடல்முத் தெடுப்போரும்
காடுபல அழித்துநாடு காண்பவரும் அன்னார்;
இன்னும்பல எழில்நலங்கள் உலகுபெற வேண்டி
பன்னுவதோ அத்தோழர் தோள்வலியின் மேன்மை?
மண்ணுலகம் அதையறியா திருப்பதென்ன நேர்மை?
இன்னவிதம் உழைப்பவருக் கேழ்மைநிலை யென்றால்,
இவ்வுலகம் நன்னெறியில் ஏகுவதிங்(கு) எந்நாள்?

—புதுவை, சிவப்பிரகாசன்

அரும்புலவர்

1\. வனப்பு—அழகு. கோடு—சிகரம். அன்னார்—தொழிலாளர்.

2\. நவம்—புதுமை நயம். அழகு, மென்மை. பொறிகள்—இயந்திரங்கள்.

3\. பன்னுவதோ—சொல்லத் தக்கதோ. மன்—நிலைபெற்ற. நேர்மை—ஒழுங்கு.

4. தமிழர் வாழ்வு

தமிழர் போர் வீரம்

1. கடற்படைகொண் டிலங்கைவென்று தக்கிணத்தைக்
கைப்பற்றி வங்கர்கோசலரை வென்று
வடநாட்டார் அடிபணிய வன்போர் செய்து
வாகையுடன் புலிக்கொடியை இமயம் ஏற்றி
அடற்கரிய தமிழ்வீரப் படையால் பொன்னி
அணைகட்ட மன்னர்பணி கொண்ட மன்னன்
சுடர்மணிப்பூம் புகாராண்ட கரிகாற் சோழன்
தொடங்கியநன் னாட்டுதித்த சூரச் சேய்காள்!

வாழும் வகை

2. தமிழ்நாட்டுக் கல்விமுறை தமிழர் கையில்;
தாய்நாட்டுத் தொழில்களெல்லாம் தனயர் கையில்;
தமிழர்வா ணிகமெல்லாம் தமிழர் கையில்;
தமிழ்த்துறையில் இயங்குவது தமிழர் கப்பல்;
தமிழ்ச்சமுதா யப்பணியுந் தமிழர் கூட்டால்;
தமிழ்நாடு தமிழர்க்கே; தமிழர் சேமம்
தமிழர்களின் ஒற்றுமையே; தமிழர் உள்ளம்
தமிழ்உள்ளம் எனில்வாழ்வு தழைப்ப தாமே.

—புதுவை, சுத்தானந்த பாரதியார்

அருஞ்பொருள்

சுவாமி சுத்தானந்த பாரதியாரை அறியாதார் இலர். அவர் சிறந்த எழுத்தாளர்; பாவலர்; புதுவையில் இருப்பவர்.

1. தக்கிணம்—தெற்கு. பொன்னி—காவிரியாறு. மன்னர்—இலங்கை அரசன் முதலியோர்.

2. தனயர்—பிள்ளைகள். சேமம்—க்ஷேமம்.

14782

RTR/1162

தாமரை வாசகம்

ஆசிரியர் :

புலவர் மா. இராசமாணிக்கனார்

முதற் புத்தகம்	....	....	அணா	14
இரண்டாம் புத்தகம்	....	....	அணா	15
மூன்றாம் புத்தகம்	....	....	ரூ.	1/-